உ
கடவுள் துணை

பிறர் உதவியின்றித் தாமே தெரிந்துகொள்ளக்கூடிய

ஜாதக அஷ்ட வர்க்கமும்

அதன் பலாபலன்கள் நிர்ணயமும்

இதில்

அஷ்டவர்க்கச் சக்கரமும் அதை உபயோகப்படுத்தும் வழியும் இருக்கின்றன

சென்னை முத்தியாலுப்பேட்டை ஐஸ்கூலில் விஞ்ஞான பாடபோதகரா யிருந்தவரும், கணித சாஸ்திரத்தில் பி ஏ. பட்டம் வகித்தவரும், நாமகள் சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், தென்னாட்டு வாக்கிய பஞ்சாங்க கணிதரும், இராஜஜோதிட கணிதம், கிரக சட்பலம், ஆயுள் கணிதம் ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்ற ஜாதக பலாபலன்கள் நிர்ணயமும், பல பாகக் கிரந்தங்களாகிய ஜாதக ராஜ மனோரஞ்சிதம் மலர் ஒன்று, இரண்டு, ஜாதக லக்கினஸ்புட பாவ ஸ்புட கணனம், பிருஹத் ஜாதகம் இவைகளின் ஆசிரியராகிய

திரு. C. G. ராஜன் B.A. (Mathematics)

அவர்களால் எழுதப்பட்டது.

ஸ்ரீமதி. சி. கனகம்மாள்

அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

கிடைக்குமிடம் :

P. K. கிருஷ்ணன்,
1, வெங்கட்ராமையர் தெரு, சென்னை—1.

மறு பதிப்பு] 1967 [விலை Rs. 3.00

முன்னுரை

அஷ்டகவர்க்கம் என்பது சூரியன் முதல் சனி வரையிலுமுள்ள (ஸ்தூல வடிவமுள்ள) ஏழு கிரகங்களாலும் லக்கினத்தாலும் ஏற்படக் கூடிய கிரகங்களின் பலாபலத்தை ஒரு விதமாகத் தெரிவிக்கும் முகாந்தாமாகும். ஒவ்வொரு கிரகமும் ஜாதகர் ஜனிக்கும்போது தான் இருக்கும் ராசியில் இருந்து எண்ண எந்த எந்த ராசியில் கோசாரத்தில் வரும்போது நல்ல பலனைக் கொடுக்கும், அல்லது கெட்ட பலனைக் கொடுக்கும் என்ற விவரத்தையும் தெரிவிக்க அஷ்டக வர்க்கம் ஓர் உபாயமாகும். மேலும் ஜாதகருடன் கூடப் பிறந்த வர்கள் எத்தனைபேர் என்பதையும், அவர்களில் ஆண் எத்தனை என்பதும் பெண் எத்தனை பேர்கள் என்பதையும், இவர்களில் யார் யார் எத்தக் கிரகத்தால் கொடுக்கப்பட்டவர்கள் என்பதையும், யார் யாருக்கு ஆயுள் உண்டு என்றும், ஆயுள் இல்லை என்றும், யார் யார் நல்ல சுகத்துடன் இருப்பார்கள் என்றும், யார் யார் கெட்ட பலன்களை அனுபவித்துக்கொண்டு கஷ்டப்படுவார்கள் என்பதையும் இந்த அஷ்டவர்க்கத்தால் அறியலாம். இவ்விதமாகவே ஜாதகருடைய தாய், தகப்பன் இவர்களுடன் கூடப் பிறந்தவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளலாம். இவ்விதமாகவே ஜாதகருக்கு ஏற்படக் கூடிய சந்ததிகளைப் பற்றியும் தெரிந்துகொள்ளலாம் மேலும் ஒரு கிரகத்தின் தெசை (உடு தெசை) அஷ்டவர்க்கம் தவிர மற்ற வழியில் ஆராய்ச்சி செய்யும்போது அது நல்ல பலனையோ அல்லது கெட்ட பலனையோ கொடுப்பதாக ஏற்படும் பக்ஷத்தில் அவ்வித மாகவே அது உண்மையில் நல்ல பலனைக் கொடுக்குமா, கெட்ட பலனைக் கொடுக்குமா என்ற விவரத்தையும் இந்த அஷ்-க வர்க்கத் தால் அறிந்துகொள்ளலாம்.

இந்த அஷ்டகவர்க்கப் புத்தகத்தில் கணிதவகை சம்பந்தப் பட்டவரையில் பூர்வீக கிரந்தங்களில் கொடுக்கப்படுள்ள கணிதங்களில் கிரக குணகாரம் வரையிலும் உள்ள கணிதங்களைக் கொடுத்திருக் கின்றேன் இந்தக் கணிதத்திற்குப் பிறகு பூர்வீக கிரந்தங்களில் அஷ்டவர்க்கக் கணிதம் பிரகாரம் ஜாதகருடைய ஆயுளை நிர்ண யிக்கும் வழிகள் பலவிதமாகவும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகவு மிருப்பதாலும் பூர்வீக கிரந்தகர்த்தர்களே ஒருவருக்கொருவர் தமக்குள் வித்தியாசமாக அபிப்பிராயப்படுவதாலும், இவர்களே ஆயுளை அஷ்டவர்க்க வழியால் கணிக்கும் மார்க்கத்தில் திருப்தி அடைந் திருப்பதாக நன்ருக விளங்கும். மேலும் அனுபவத்தில் அஷ்ட வர்ககத்தின் உதவியால் எந்த வழியாலாகிலும் ஆயுளைக் கணிப்போ

மானுல் உண்மையில் அனுபவப்படி சரிப்பட்டு வராமல் அதிக வித்தியாசம் ஏற்பட்டுத் தவறிப்போய் விடுவதால் அஷ்டவர்க்க வழிகளில் எந்த வழியையும் ஆயுளைக் கணிக்க உபயோகப்படுத்திக் காலத்தையும் சிரமத்தையும் செலவழிப்பது இவைகளை வீணுக்கு வதாகவே ஏற்படும். ஆகையால் ஜோதிடர்கள் தங்களுடைய காலத்தையும் சிரமத்தையும் இவ்விதமாக ஒரு பிரயோஜனமு மில்லாமல் வீணுக்காமல் இருப்பதற்காகவே இப்புத்தகத்தில் அஷ்டக வர்க்கக் கணிதத்தைக் கிரக குணகார கணிதத்துடன் நிறுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டது. இதற்குமேல் அஷ்டக வர்க்கத்தை உபயோகப்படுத்திப் பலாபலன்களைச் சொல்லி இருக்கிறேன்.

இப் புத்தகத்திற்காக உபயோகப்படுத்தப்பட்ட பூர்வீக கிரந்தங் களின் கிரந்தகர்த்தர்களுக்கும் அவைகளுக்கு வியாக்கியானம் முதலியவைகளை எழுதியுள்ள பெரியோர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான வந்தனத்தை இதனுல் அளிக்கின்றேன்.

C. G. ராஜன், B A., (Maths)
27—3—1947

விஷய அட்டவணை

1-வது அத்தியாயம்

ஜாதக அஷ்ட வர்க்கமும்

அதன்

பலாபலன்கள் நிர்ணயமும்

அத்தியாயம் 1

அயிட்டம் நெ. 1:— அஷ்டக வர்க்கம் என்றால் எட்டு வர்க்கம் என்று அர்த்தம். (1) சூரியன், (2) சந்திரன், (3) செவ்வாய், (4) புதன் (5) குரு, (6) சுக்கிரன், (7) சனி ஆகிய இவ்வேழு கிரகங்களும், (8) ஜெனன லக்கினமும் ஆக மொத்தமாகிய இவ்வெட்டு அம்சங்கள்தான் இந்த அஷ்டக வர்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன இவ்வெட்டு அம்சங்களை எடுத்துக்கொண்டிருப்பதனாலேயே தான் இதற்கு அஷ்டக வர்க்கம் என்று பெயர்.

அயிட்டம் நெ. 2:— பழைய காலத்து புராதன கிரந்தங்களில் நவக்கிரகங்களில் இராகு, கேது தவிற மற்ற ஏழு கிரகங்களை மாத்திரம் உபயோகப்படுத்தி இருக்கின்றார்கள். இவ்வேழு கிரகங்கள்தான் வெறுங்கண்ணுக்குத் தெரியக் கூடிய கிரகங்கள். இவ்வேழு கிரகங்களும் உருவமும் அளவும் உள்ள கிரகங்களாகும் அல்லது கோளங்களாகும். இராகு கேதுக்கள் என்பவை உண்மையில் உருவமும் அளவும் இல்லாதவை; இவைகள் கோளங்கள் அல்ல; இவைகள் அரூபமானவை. ஆகையால் இவைகளால் சாயை அல்லது நிழல் உண்டாகாது. இது காரணம் பற்றியே இவைகள் "சாயாக் கிரகம்" என்று சொல்லப் படும். இவைகள் பழைய காலத்திற்குப் பிறகு நாளடை வில் ஜோதிட சாஸ்திரத்தில் ஜோதிடர்கள் நுழைத்திருக்கின்றார்கள். பழைய காலத்துக் கிரந்தங்களில் இராகு கேதுக்களுக்குப் பலா பலன்களுஞ் சொல்லவில்லை; அஷ்டக வர்க்கத்திலும் உபயோகப்படுத்தவில்லை. ஆனால் பிற்

காலத்து கிரந்தங்களில் இராகு கேதுக்களுக்குங்கூட அஷ்டக வர்க்கப் பரல்களும் பிந்துக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அயிட்டம் 3 :—மேற்சொல்லிய நவகிரகங்களுந் தவிர யூரேனெஸ், நெப்த்யூன் என்ற இரண்டு கிரகங்களையும் புதிதாய்க் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இவ்விரண்டு கிரகங்களும் சூரியாதி சனி அந்தம் வரையிலுள்ள ஏழு கிரகங்களைப் போலவே ரூபமும் அளவும் உள்ள கோளங்கள். இவைகள் ஜீவ வர்க்கங்களின் பேரில் தங்களுடைய சக்தியைக் காட்டுகின்றன வென்று மேல் நாட்டார் கண்டறிந்து, இவைகளையும் தங்கள் "மேல்நாட்டு ஜோதிடத்தில்" உபயோகப்படுத்தி வருகின்றார்கள். நமது இந்து தேச ஜோதிடர்களும் இவ்விரண்டு கிரகங்களையுங் கூடத் தங்கள் யோசனையில் எடுத்துக்கொண்டு பலாபலன் சொல்லும் போது இவைகளையும் சேர்த்துக்கொண்டு பலாபலன்கள் சொல்லி வருகின்றார்கள். ஆகையால் இவ்விரண்டு கிரகங்களுக்குக் கூட நாளடைவில் அஷ்டகவர்க்கப் பரல்களும் பிந்துக்களும் ஏற்பட்டுவிடும். "அஷ்டக வர்க்கம்" என்ற பெயரும் "தச வர்க்கம்" என்று மாறினாலும் மாறிவிடும்.

அயிட்டம் நெ. 4 :— அஷ்டக வர்க்கத்தில் எட்டு அம்சங்கள் (அதாவது சூரியாதி சனி அந்தம் ஏழு அம்சங்களும் லக்கினமும்) இருப்பதால் எந்த ஜாதகத்திலும் இராசிச் சக்கரத்திலுள்ள பன்னிரண்டு ராசிகளில் (இராகு கேதுக்களை விட்டுவிட) மொத்தத்தில் அதிகத்தில் எட்டு ராசிகளுக்கு மேற்பட்ட ராசிகளில் ஏழு கிரகங்களும் லக்கினமும் இருக்கமுடியாது; குறைந்ததில் ஒரு ராசியிலாகிலும் இருக்கவேண்டும். ஆகையால் இந்தக் காரணத்தைக் கொண்டும் அஷ்டக வர்க்கம் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது.

அயிட்டம் நெ. 5 :— மேற்சொல்லிய சப்த கிரகங்களும் சதா காலமும் அசைந்துகொண்டே, இடம் விட்டு இடம் மாறிக்கொண்டே இருப்பதாலும் இவைகளால் ஏற்படும் பலாபலன்கள் இவைகள் தற்காலம் இருக்கும் இடத்தை அனுசரித்து உண்டாகிக்கொண்டு வருகின்றன.

ஒரு கிரகம், தான் தற்காலத்தில் இருக்கும் இடத்தில் தான் ஒரு ஜாதகர் பிறக்கும்போது இருந்த இடத்தை அனுசரித்து, நல்ல பலனை அல்லது கெட்ட பலனை அல்லது நிஷ் பலனை அல்லது சம பலனைக் கொடுக்கும். கிரகங்களின் தற்கால ஸ்திதிக்குக் "கோசரம்" அல்லது "கோச்சாரம்" என்று சொல்லப்படும். ஜனன காலத்தில் மேற்சொல்லிய எட்டு அம்சங்களும் இருந்த ராசியிலிருந்து எந்த எந்த வீடுகளில் கோசார காலத்தில் வந்தால் நல்ல பலனைக் கொடுக்குமோ அந்த ராசிகளின் எண்கள் அஷ்டக வர்க்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது உதாரணமாகக் கீழே கொடுக்கப்பட்ட 6-வது அயிட்டமாகிய சூரியன் அஷ்டக வர்க்கத்தில் சூரியனுக்கு எதிரில் 1, 2, 4, 7, 8, 9, 10, 11 என்று எண்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதாவது சூரியன் ஜெனன காலத்தில் இராசிச் சக்கரத்தில் தான் இருந்த ராசிக்கு 1, 2, 4, 7, 8, 9, 10, 11-வது ராசிகளில் கோசார காலத்தில் சஞ்சரிக்கும்போது சூரியன் நல்ல பலனைக் கொடுக்கும்; மற்ற குறிப்பிடாத ராசிகளாகிய 3 5,6, 12-வது ராசிகளில் சூரியன் கோசார காலத்தில் வந்தால் கெட்ட பலனைக் கொடுக்கும் என்பதாம். இவ்விதமாக சூரியனது அஷ்டக வர்க்கத்திலுள்ள மொத்தமாகிய எட்டு வர்க்கங்களையும் எடுத்துக்கொண்டால் சூரியன் கொடுக்கும் நல்ல பலன், கெட்டபலன் இவைகளைச் சூரியாதி முதல் லக்கினம் வரையிலுமுள்ள எட்டு அம்சங்களும் ஜெனன காலத்தில் இருந்த இராசியைக் கொண்டும் சூரியன் கோச்சார காலத்திலிருக்கும் இராசியைக் கொண்டும் அறிய வேண்டியது. இப்படி எல்லா அம்சங்களையும் எடுத்துக் கொண்டால்தான் மொத்தத்தில் சூரியன் கொடுக்கும் நல்லபலன், கெட்ட பலன் தெரிய வரும். சூரியாதி முதல் சனி வரையிலுமுள்ள கிரகங்களுக்குத் தனித் தனியாய்க் கீழே கொடுக்கப்பட்டுள்ள அஷ்டக வர்க்கங்களில் கிரகங்கள் நல்லபலனைக் கொடுக்கக்கூடிய ராசிகளின் எண்களை (அதாவது பிந்துகள்) கொடுக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பு:— இப் புத்தகத்தில் நல்ல பலனைக் கொடுக்கும் ராசிகளின் எண்களைக் குறிக்கப் பரல் அல்லது பிந்து என்ற

பதம் உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றது. கெட்ட பலனைக் கொடுக்கும் ராசிகளின் எண்களைக் குறிக்க ரேகை என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டு இருக்கின்றது. மேலும் இராசி என்றால் இராசிச் சக்கரத்திலுள்ள முப்பது பாகை கொண்ட மேஷம், ரிஷபம் முதல் மீனம் வரையிலு முள்ள ராசியாகும். வீடு என்றால் பாவச் சக்கரத்தில் வருகின்ற (முப்பது பாகைக்கு ஏற்றக் குறைச்சலாக இருக்கின்ற) பாவம் ஆகும். மேலும் அஷ்டக வர்க்கம் போட ராசிகளிலிருந்து ராசிகளைக் கணக்கிடவேண்டுமே தவிர பாவங்களிலிருந்து ராசிகளைக் கணக்கிடக்கூடாது என்று நன்றாய்க் கவனிக்கவும்.

அயிட்டம் நெ. 6 — சூரியன் அஷ்டக வர்க்கம் — பரல் 48.

1.	சூரியன்—1, 2, 4, 7, 8, 9, 10, 11	ஆக	8	பரல்.
2.	சந்திரன்—3, 6, 10, 11	,,	4	,,
3.	செவ்வாய்—1, 2, 4, 7, 8, 9, 10, 11	,,	8	,,
4.	புதன்—3, 5, 6, 9, 10, 11, 12	,,	7	,,
5.	குரு—5, 6, 9, 11	,,	4	,,
6.	சுக்கிரன்—6, 7, 12	,,	3	,,
7.	சனி—1, 2, 4, 7, 8, 9, 10, 11	,,	8	,,
8.	லக்கினம்—3, 4, 6, 10, 11, 12	,,	6	,,
		மொத்தம்	48	பரல்.

அயிட்டம் நெ. 7 — சந்திரன் அஷ்டக வர்க்கம்— பரல் 49.

1.	சூரியன்—3, 6, 7, 8, 10, 11	ஆக	6	பரல்.
2.	சந்திரன்—1, 3, 6, 7, 10, 11	,,	6	,,
3.	செவ்வாய்—2, 3, 5, 6, 9, 10, 11	,,	7	,,
4.	புதன்—1, 3, 4, 5, 7, 8, 10, 11	,,	8	,,
5.	குரு—1, 4, 7, 8, 10, 11, 12 (a)	,,	7	,,
6.	சுக்கிரன்—3, 4, 5, 7, 9, 10, 11	,,	7	,,
7.	சனி—3, 5, 6, 11	,,	4	,,
8.	லக்கினம்—3, 6, 10, 11	,,	4	,,
		மொத்தம்	49	பரல்.

(a) சிலர் குருவிற்கு 1, 2, 4, 7, 8, 10, 11 என்பர். அதாவது 12-க்குப் பதிலாக 2 என்று சொல்வர். இப்புத்தகத்தில் கொடுத்துள்ள அஷ்டக வர்க்கச் சக்கிரத்தில் 12-தான் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அயிட்டம் நெ. 8 — செவ்வாய் அஷ்டக வர்க்கம்—பரல் 39.

1.	சூரியன்—3, 5, 6, 10, 11	ஆக 5 பரல்.
2.	சந்திரன்—3, 6, 11(a)	,, 3 ,,
3.	செவ்வாய்—1, 2, 4, 7, 8, 10, 11	,, 7 ,,
4.	புதன்—3, 5, 6, 11	,, 4 ,,
5.	குரு—6, 10, 11, 12	,, 4 ,,
6.	சுக்கிரன்—6, 8, 11, 12	,, 4 ,,
7.	சனி—1, 4, 7, 8, 9, 10, 11	,, 7 ,,
8.	லக்கினம்—1, 3, 6, 10, 11	,, 5 ,,
		மொத்தம் 39 பரல்.

(a) சந்திரனிலிருந்து 10-வது ராசியில் செவ்வாய்க்கு நிஷ்பலனாகும்.

அயிட்டம் நெ. 9 — புதன் அஷ்டக வர்க்கம்—பரல் 54.

1.	சூரியன்—5, 6, 9, 11, 12	ஆக 5 பரல்.
2.	சந்திரன்—2, 4, 6, 8, 10, 12	,, 6 ,,
3.	செவ்வாய்—1, 2, 4, 7, 8, 9, 10, 11	,, 8 ,,
4.	புதன்—1, 3, 5, 6, 9, 10, 11, 12	,, 8 ,,
5.	குரு—6, 8, 11, 12	,, 4 ,,
6.	சுக்கிரன்—1, 2, 3, 4, 5, 8, 9, 11	,, 8 ,,
7.	சனி—1, 2, 4, 7, 8, 9, 10, 11	,, 8 ,,
8.	லக்கினம்—1, 2, 4, 6, 8, 10, 11	,, 7 ,,
		மொத்தம் 54 பரல்.

அயிட்டம் நெ. 10 — குரு அஷ்டக வர்க்கம்—பரல் 56.

1.	சூரியன்—1, 2, 3, 4, 7, 8, 9, 10, 11	ஆக 9 பரல்
2.	சந்திரன்—2, 5, 7, 9, 11	,, 5 ,,
3.	செவ்வாய்—1, 2, 4, 7, 8, 10, 11	,, 7 ,,
4.	புதன்—1, 2, 4, 5, 6, 9, 10, 11	,, 8 ,,

5. குரு—1, 2, 3, 4, 8, 8, 10, 11 ஆக 8 பரல்
6. சுக்கிரன்—2, 5, 6, 9, 10, 11 ,, 6 ,,
7. சனி—3, 5, 6, 12 ,, 4 ,,
8. லக்கினம்—1, 2, 4, 5, 6, 7, 9, 10, 11 ,, 9 ,,

மொத்தம் 56 பரல்

அயிட்டம் நெ. 11 — சுக்கிரன் அஷ்டக வர்க்கம்— பரல் 52.

1. சூரியன்—8, 11, 12 ஆக 3 பரல்.
2. சந்திரன்—1, 2, 3, 4, 5, 8, 9, 11, 12 ,, 9 ,,
3. செவ்வாய்—3, 5, 6, 9, 11, 12(a) ,, 6 ,,
4. புதன்—3, 5, 6, 9, 11 ,, 5 ,,
5. குரு—5, 8, 9, 10, 11 ,, 5 ,,
6. சுக்கிரன்—1, 2, 3, 4, 5, 8, 9, 10, 11 ,, 9 ,,
7. சனி—3, 4, 5, 8, 9, 10, 11 ,, 7 ,,
8. லக்கினம்—1, 2, 3, 4, 5, 8, 9, 11 ,, 8 ,,

மொத்தம் 52 பரல்.

(a) சிலர் செவ்வாய்க்கு 3, 4, 6, 9, 11, 12 என்பர்; அதாவது 5-க்குப் பதிலாக 4 என்பர். இப்புத்தகத்தில் கொடுத்துள்ள அஷ்டக வர்க்கச் சக்கரத்தில் 5 தான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அயிட்டம் நெ. 12 — சனி அஷ்டக வர்க்கம்— பரல் 39.

1. சூரியன்—1, 2, 4, 7, 8, 10, 11 ஆக 7 பரல்.
2. சந்திரன்—3, 6, 11 ,, 3 ,,
3. செவ்வாய்—3, 5, 6, 10, 11, 12 ,, 6 ,,
4. புதன்—6, 8, 9, 10, 11, 12 ,, 6 ,,
5. குரு—5, 6, 11, 12 ,, 4 ,,
6. சுக்கிரன்—6, 11, 12 ,, 3 ,,
7. சனி—3, 5, 6, 11 ,, 4 ,,
8. லக்கினம்—1, 3, 4, 6, 10, 11 ,, 6 ,,

மொத்தம் 39 பரல்.

அயிட்டம் நெ. 13 — சூரியன் முதல் சனிவரையிலு முள்ள ஏழு கிரகங்களின் மொத்த (அல்லது சர்வ) அஷ்டக வர்க்கப் பரல்களாகிய 48, 49, 39, 54, 56, 52, 39–யைக் கூட்ட மொத்தம் 337 பரல் வரும். இந்த 337 பரல்களை மொத்த சர்வாஷ்டக வர்க்கப் பரல்கள் என்று சொல்லுவ துண்டு.

அயிட்டம் நெ. 14 — இனிமேல் அஷ்டக வர்க்கத் தைப் போடும் வழியை ஒரு உதாரண ஜாதகத்தால் விளக் கிக் காட்டுவோம்.

வர்த்தமான சாலிவாகன சகாப்தம் 1792ளு கலி யுகாதி 4971–வது வருஷமாகிய சுக்கிலளு புரட்டாசிமீ 18உக்குச் சரியான இங்கிலீஷ் 1869ளு அக்டோபர்மீ 2உ சனிக்கிழமை பம்பாய் ராஜதானியிலுள்ள கத்தியவார் என்ற நகரத்திற்கு அடுத்த போர்பந்தர் என்ற ஊரில் காலை சூரிய உதயாதி நாழிகை 3 விஞடி 12½–க்குக் கெடி யார ரீதியாய்க் காலை 7–மணி 13–நிமிஷத்துக்கு ஜெனித்த "ஜெயசீலர்" என்ற ஒரு புண்ணிய மகாத்மாவின் ஜாத கத்தை எடுத்துக்கொள்வோம். இந்த ஜாதகம் விஷய மாய் எமது ஜாதக கணிதம் ஓராம் பாகம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம் மூன்றும் பதிப்பு

	குரு		
	ஜனன காலத்தில் இராசிச் சக்கிரம்		ரா சந்
கே	1-வது கட்டம்		
	சனி	அ-சு-பு ல	சூரி

.... IIII	குரு .. IIIIII	 IIII	.. IIIIII
.... IIII	அங்காரகன் அஷ்டக வர்க்கம்		சந் IIII
..... III	2-வது கட்டம்		 III
... IIIII	சனி ... IIIII	அ-சு-பு ல .. IIIIII	சு IIII

என்ற புத்தகத்தின் 26–வது, 39–வது பக்கங்களைப் பார்க் கவும்). இந்த ஜாதகத்திற்குக் அங்காரகனுடைய அஷ்டக வர்க்கத்தைப் போடுவோம்.

செவ்வாய் அஷ்டக வர்க்கம் போடும் வழி :— முன்னே சென்ற 8-வது அயிட்டமாகிய "செவ்வாய்" அஷ்டகவர்க்கம் பரல் 39 என்பதை உபயோகப்படுத்தவும். முதல் முதல் 2-வது கட்டத்தில் கண்டபடி ஒரு ராசிச் சக்கரம் வரைந்து அதில் ஏழு கிரகங்களையும் லக்கினத்தை யும் ஒவ்வொரு ராசியிலும் தலைப்பு வரிசையில் பிறக்கும் போது ராசிச் சக்கிரத்திலுள்ளபடி எழுதவும். இரண்டா வது வரிசையில் சுபபலத்தைக் குறிக்கும் பிந்துவை வரிசை யாக பின் சொல்லப்போகும் விதமாக எழுதவும். சுப பல பிந்து என்பது முற்றுப்புள்ளியாகிய. இக்குறியால் காட்டப் படும். (சுப பலபிந்துவை பூஜ்ஜியம் என்ற சுன்னங்களா லும் குறிப்பிடுகிற வழக்கமுண்டு). பிறகு மூன்ருவது வரி சையில் அசுப பலத்தைக் குறிக்கும் ரேகையை வரிசை யாகப் பின் சொல்லப்போகும் விதமாக எழுதவும். அசுப பலன் ரேகை என்பது என்ற இக் குறியால் காட்டப் படும். 8-வது அயிட்டத்தில் செவ்வாய் அஷ்டக வர்க்கத் தில் சூரியனுக்கு எதிரில் 3, 5, 6, 10, 11 என்று இருப்பதை முதல் முதல் எடுத்துக்கொள்ளவும். இந்த 3, 5, 6, 10, 11 என்பது சுப பலத்தைத் தருகின்ற இராசிகளைக் குறிக்கும். இவைகளை ஜெனன காலத்தில் இராசிச் சக்கரத்தில் சூரியன் இருந்த ராசியிலிருந்து எண்ணவேண்டும். முதல் எண் 3 என்றிருக்கிறது. ஆகையால் சூரியன் இருக்கின்ற ராசியாகிய கன்னியிலிருந்து (கன்னியைச் சேர்த்து) மூன்று ராசி எண்ண வருகின்ற விருச்சிக ராசியில் சுப பலத்தைக் குறிக்கின்ற. என்ற ஒரு முற்றுப்புள்ளியை எழு தவும். பிறகு அஷ்டக வர்க்கத்தில் சூரியனுக்கு எதிரில் 3-க்கு அடுத்தபடியுள்ள 5-ஐ எடுத்துக்கொண்டு மறுபடி யும் சூரியனிருக்கின்ற கன்னியா ராசியிலிருந்து 5 ராசி எண்ண வருகின்ற மகர ராசியில். என்ற ஒரு முற்றுப் புள்ளியை எழுதவும். அஷ்டகவர்க்கத்தில் சூரியனுக்கு எதிரில் 5-க்கு அடுத்தபடியுள்ள 6-ஐ எடுத்துக்கொண்டு மறுபடியும் சூரியனிருக்கின்ற கன்னியா ராசியிலிருந்து 6 ராசி எண்ண வருகின்ற கும்பத்தில். என்ற ஒரு முற்றுப் புள்ளியை எழுதவும். இவ்விதமாகவே அடுத்தபடியே

யுள்ள 10, 11-ஐ எடுத்துக்கொண்டு கன்னியிலிருந்து 10 ராசி, 11 ராசி எண்ண வருகின்ற மிதுனத்தில் ஒரு புள்ளியும், கடகத்தில் ஒரு புள்ளியும் எழுதவும்.

பிறகு சூரியனுக்கு எதிரில் சொல்லியுள்ள 3, 5, 6, 10, 11-வது ராசிகள் போக மிகுதி (சொல்லப்படாத) ராசிகளாகிய 1, 2, 4, 7, 8, 9, 12-யை எடுத்துக்கொள்ளவும். இந்த 1, 2, 4, 7, 8, 9, 12 ராசிகள் அசுப பலத்தைக் கொடுக்கக்கூடிய ராசிகளின் எண்கள் ஆகும். இவைகளை முன்போலவே சூரியன் ஜெனன காலத்தில் இராசிச் சக்கரத்திலுள்ள ராசியாகிய கன்னியா ராசியிலிருந்து எண்ணவேண்டும். இவைகளை அசுப பலத்தைக் குறிக்குங் குறியாகிய என்ற ரேகையால் குறிக்கவும். முதல் எண் ஆகிய 1 (ஒன்றை) ஐ எடுத்துக்கொண்டு முன்போலவே சூரியனிருக்கின்ற ராசியாகிய கன்னியிலிருந்து ஒரு ராசி (கன்னியைச் சேர்த்து) எண்ண கன்னியா ராசியில் 3-வது வரிசையில் அசுப பலத்தைக் குறிக்கின்ற ரேகையாகிய என்ற இக் குறியை எழுதவும். பிறகு அடுத்தபடியேயுள்ள அசுபபல எண்களாகிய 2, 4, 7, 8, 9, 12-ஐ எடுத்துக்கொண்டு கன்னியிலிருந்து 2 ராசி எண்ண வருகின்ற துலாத்தில் ஒரு ரேகையும், 4 ராசி எண்ண வருகின்ற தனுசில் ஒரு ரேகையும், 7 ராசி எண்ண வருகின்ற மீனத்தில் ஒரு ரேகையும், 8 ராசி எண்ண வருகின்ற மேஷத்தில் ஒரு ரேகையும், 9 ராசி எண்ண வருகின்ற ரிஷபத்தில் ஒரு ரேகையும், 12 ராசி எண்ண வருகின்ற சிம்மத்தில் ஒரு ரேகையும், இரண்டாவது வரிசையில் முன்போலவே தனித்தனியாக எழுதவும். இப்படிச் செய்தால் 8-வது அயிட்டத்தில் செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் சூரியனுக்கு எதிரில் கொடுத்துள்ள 3, 5, 6, 10, 11 என்ற இவைகளால் ஏற்படும் பிந்து உள்ள ராசிகளும், சூரியனுக்கு எதிரில் கொடுத்திராத 1, 2, 4, 7, 8, 9, 12 என்றவைகளால் ஏற்படும் ரேகை உள்ள ராசிகளும் தெரியவரும். பிறகு இவ்விதமாகவே சந்திரனுக்கு எதிரில் கொடுத்துள்ள 3, 6, 11-ஐ எடுத்துக்கொண்டு மேலே சொல்லியபடி

சந்திரனிருக்கும் ராசியிலிருந்து கணக்கிட்டு புள்ளிகளை வைக்கவும். பிறகு சந்திரனுக்கு எதிரில் சொல்லியிராத எண்களாகிய 1, 2, 4, 5, 7, 8, 9*, 12 எடுத்துக்கொண்டு மேலே சொல்லியபடி சந்திரனிருக்கும் ராசியிலிருந்து கணக்கிட்டு ரேகைகளை எழுதவும்.

* சந்திரனுக்கு எதிரில் சொல்லப்படாத எண்களின் 10 என்ற எண் நிஷ்பலத்தைக் குறிக்குமாதலால் அதை ரேகை போடும் கணக்கில் இங்கு எடுத்துக்கொள்ளவில்லை என்பதை ஜாக்கிரதையாய்க் கவனிக்கவும். பிறகு செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, லக்கினம் இவைகளைத் தனியாய் எடுத்துக்கொண்டு இவைகளுக்கு எதிரில் கொடுத்துள்ள எண்களுக்காக புள்ளியையும், கொடுத்திராத எண்களுக்காக ரேகையையும் முன்போல ராசிகளில் எழுதவும். இவ்விதமாக முழுக்கப் புள்ளிகளையும், ரேகைகளையும் எழுதுவோமானுல் இங்கு 2-வது கட்டத்தில் காட்டியபடி புள்ளிகளும், ரேகைகளும் இராசிகளில் வரும். அப்போது இந்த 2-வது கட்டம் செவ்வாய் அஷ்டக வர்க்கத்தைக் குறிக்கும்.

அயிட்டம் நெ. 15 — இந்த இரண்டாவது கட்டத்திலுள்ள புள்ளிகளை எண்ணினுல் மொத்தம் 39 புள்ளிகள் வரும். இந்த 39 தான் செவ்வாயின் அஷ்டக வர்க்க மொத்த பிந்து ஆகும். ரேகைகளை எல்லாம் கூட்ட மொத்தம் 56 ரேகைகள் வரும். இந்த 56 தான் செவ்வாய் அஷ்டக வர்க்கத்தின் மொத்த ரேகை யாகும். இவ்விரண்டையும் அதாவது 39 பிந்துக்களையும் 56 ரேகைகளையும் கூட்ட மொத்தம் (39+56=95) 95 வரும். சந்திரனுக்கு 10-ல் சந்திரன் இருந்தால் நிஷ்பலன் ஆகும். அதற்காக ஏற்படுகின்ற ஒன்றை மேலே வந்த 95 உடன் கூட்ட மொத்தம் 96 ஆகும். ஒவ்வொரு ராசிக்கும் மொத்தம் அம்சங்கள் 8 ஆனதால் 12 ராசிகளுக்கும் மொத்தம் (8×12=96) 96 அம்சங்களாகும். ஆகையால் மொத்த பிந்துக்களையும், ரேகைகளையும் நிஷ்பலத்தையும் கூட்ட செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் 96 வரவேண்டும். மீதி ஆறு கிரகங்களின் அஷ்டக

வர்க்கத்தில் நிஷ் பல அம்சம் இல்லாததால் மொத்த பிந்துக்களையும் ரேகைகளையுங் கூட்ட மொத்தம் 96 வரும். இதைக் கவனித்து நாம் போட்ட அஷ்டக வர்க்கங்கள் சரியா அல்லவா என்று பரீட்சை செய்யவேணும்.

அயிட்டம் நெ. 16 :—மேலே கொடுத்துள்ள அஷ்டக வர்க்கச் சக்கிரமாகிய 2–வது கட்டத்தில். என்பது முன்னமே சொல்லியபடி சுபபலத்தை கொடுக்கக்கூடிய பரல் என்ற பிந்துவை அல்லது சுப பல பிந்துவைக் குறிக்கும். | என்பது முன்னமே சொல்லியுள்ளபடி அசுப பலத்தைக் கொடுக்கக்கூடிய ரேகையை அல்லது அசுப பல ரேகையைக் குறிக்கும். செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் சுப பலனைக் கொடுக்கக்கூடிய ராசிகளைக் குறிக்கும் எண்களின் ராசியில் சுப பல பிந்துவையும், மற்ற ராசிகளில் (அதாவது குறிக்கப்படாத, அசுப பலனைக் கொடுக்கக்கூடிய) ராசிகளில் அசுப பல ரேகையையும்; முன்னமே சொல்லியபடி காட்டப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு அஷ்டக வர்க்கத்திலும் சூரியன் முதல் லக்கினம் வரையில் எட்டு அம்சங்கள் இருப்பதால் ஒவ்வொரு ராசியிலும் சுப பல பிந்துவும் அசுப பல ரேகையும் சேர்ந்து மொத்தம் எட்டு அம்சம் ஆகும். சுப பல பிந்து பூஜ்யம் பிந்து முதல் எட்டு பிந்து வரையிலும் வரலாம்; அசுப பல ரேகை பூஜ்யம் ரேகை முதல் எட்டு ரேகை வரையிலும் வரலாம். ஆகையால் ஒரு ராசியில் சுப பல பிந்து எட்டு வந்தால், அசுப பல ரேகை (8-ல் மீதி) பூஜ்யம் ஆகும். அப்போது சுப பலம் முழு பலம், அல்லது பூர்ண பலம், அல்லது ஒரு பலம் ஆகும். மேலும் சுப பலம் பிந்து 5-ம், அசுப பல ரேகை (8-ல் மீதியாகிய) 3-ம் வந்தால, சுப பல பிந்தாகிய 5–ல் அசுப பல ரேகையாகிய 3-போக மிகுதி நின்ற 2-ம் நிகர சுப பல அம்சமாகும். ஒரு சுப பலத்திற்கு 8 அம்சம் ஆனதால் இங்கு வந்த 2-க்குக் கால் சுப பலம் ஆகும். ஆகையால் ஒரு ராசியில் 5 சுப பல பிந்து அல்லது 3 அசுப பல ரேகை இருந்தால் நிகர சுபா அசுப பலம் என்பது கால் சுப பலமாகும். இதை நன்ருய அறியவும். இவ்விதமாகச் செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் சிம்மத்தில் 5 பிந்தும் 3 ரேகையும் இருப்பதால் நிகர சுப பலம் கால் பலமாகும். மிதுனத்தில் 2 பிந்தும், (8–ல் 2 போக மிகுதியான) 6 ரேகையும் இருக்கின்றன. ஆகையால் அசுப பல அம்சம் 6–ம், சுப பல அம்சம் 2–ம் ஆகும். நிகர அசுப பல அம்சம் 6-ல், 2 போக வருகிற 4 அம்சம் ஆகும். ஒரு முழு அசுப

பலத்திற்கு 8 அம்சம் ஆனதால் நிகரம் வந்த 4 அசுப அம்சத்திற்கு அரை அசுப பலமாகும். ஆகையால் ஒரு ராசியில் 6 ரேகை இருந்தால் நிகர சுபா, அசுப பலம் என்பது அரை அசுப பலமாகும். ஆகையால் மிதுனத்தில் நிகர பலம் அரை அசுப பலமாகும். நிகர சுபா அசுப பலங்களை அடியிற்கண்ட வாக்கியத்தால் சுலபமாக அறிந்துகொள்ளலாம்.

அயிட்டம் நெ. 17 — நிகர சுபா, அசுப பல வாக்கியம்.

ஒரு ராசியிலிருக்கும் தொகை		நிகர பலம்	
பிந்து	ரேகை	சுபம்	அசுபம்
0	8	—	1
1	7	—	$\frac{3}{4}$
2	6	—	$\frac{1}{2}$
3	5	—	$\frac{1}{4}$
4	4	—	—
5	3	$\frac{1}{4}$	—
6	2	$\frac{1}{2}$	—
7	1	$\frac{3}{4}$	—
8	0	1	—

நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் மேஷத்தில் ஒரு பிந்து இருக்கிறது, 6 அசுப ரேகை இருக்கின்றது. இது ஏனென்றால் செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் சந்திரனிருந்து 10-வது ராசியில் செவ்வாய்க்கு சுப பலமுமில்லாமலும் அசுப பலமுமில்லாமலும் நிஷ்பலம் ஏற்படுகின்றது. அயிட்டம் நெ. 8 ஆகிய செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் (a) என்ற குறிப்பைப் பார்க்கவும். ஆகையால் செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் மேஷத்தில் நிகர சுபா அசுப பலம் என்பது $\frac{6-1}{8}=\frac{5}{8}$ அதாவது அரையே அரைக்கால் அசுப பலமாகும். ஆகையால் மேலே 17-வது நெ. அயிட்டத்தில் கொடுத்துள்ள நிகர சுபா அசுப பல வாக்கியத்தை செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் சந்திரனிலிருந்து 10-வது ராசிக்கு மாத்திரம் தவிர செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் மற்ற பதினோரு ராசிகளுக்கும் மீதி கிரகங்கள் அஷ்டக வர்க்கத்தில் 12-இராசிகளுக்கும் உபயோகப்படுத்தலாம். இதை ஜாக்கிரதையாய்க் கவனிக்கவும்.

அயிட்டம் நெ. 18 — அனுஷ்டானத்தில் அஷ்டக வர்க்கம் போடும்போது சுப பலத்தைக் காட்டும் பிந்துக்களை மாத்திரம் சக்கரத்தில் புள்ளிகளால் குறிப்பதுண்டு. ஆனால் அசுப பலத்தைக் காட்டும் ரேகைகளைச் சக்கரத்தில் எழுது வது கிடையாது. ஏனென்றால் ஒரு ராசியில் வருகின்ற பிந்துக்களின் மொத்தத் தொகை தெரிந்துவிட்டால் அதை 8-லிருந்து கழிக்க அந்த ராசியில் வரும் மொத்த ரேகை தெரியவரும். செவ்வாய் அஷ்டக வர்க்கத்தில் சந்திரனி லிருந்து 10-வது ராசியில் வரும் மொத்த பிந்துவை மாத் திரம் 8—லிருந்து கழிப்பதற்குப் பதிலாக 7-லிருந்து கழித்து விட்டால் அந்த 10-வது ராசியில் வரும் மொத்த ரேகை தெரியவரும். ஆகையால் ஏழு கிரகங்களுக்கும் அஷ்டக வர்க்கம் போடும்போது பிந்துக்களை மாத்திரம் புள்ளிகளால் குறிப்பிடுவது போதுமானது; ரேகைகளைப் போடவேண் டிய அவசியமில்லை. இப்படிச் செய்தால் அதிக சிரமம் நீங்கும்; கணக்கிலும் தவறுதல்கள் அவ்வளவு ஏற்படாது. ஆகையால் உண்மையில் அஷ்டக வர்க்கம் போடும்போது பலர் பிந்துக்களை மாத்திரம் புள்ளிகளாலோ (அல்லது பல கறைகளாலோ அல்லது மொச்சைக்கொட்டை அல்லது பட்டாணி முதலிய தமக்குக் கிடைக்கக்கூடிய அடையாள வஸ்துக்களாலோ) குறிப்பிடுவதுண்டு; சுபபல பிந்து தெரிந்தால் 17—வது அயிட்டத்தில் கண்ட வாக்கியத்தால் பிந்தைக் கொண்டே நிகர சுப அசுப பலத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

அயிட்டம் நெ. 19 — இதுவரையில் விவரமாகச் சொல்லிவந்தது அஷ்டக வர்க்கம் போடும் வழியில் ஒரு வழி ஆகும். இது கஷ்டமான வழி. இன்னொரு வழி இருக்கிறது. அது மிகவும் சுலபமான, மிகவும் உபயோக மான வழி. அந்த வழி அஷ்டக வர்க்க சக்கரம் என்ற ஒரு சக்கரக் கருவியின் உதவியால் போடும் வழி ஆகும்.

அஷ்டக வர்க்கச் சக்கரம்

அயிட்டம் நெ. 20 — இந்தச் சக்கரத்தைச் செய்யும் விதம்:—முதல் முதல் 9 (ஒன்பது) தகடுகள் அல்லது அட்டைகளை எடுத்துக்கொள்ளவும். இந்தத் தகடுகள் துத்தநாகம் (Zinc) அல்லது தகரம் (Tin) இவைகளில் இருப்பது நல்லது. அதிக கனமில்லாமல் மெல்லியதாகவும் சீக்கிரம் வளையாமல் மொரப்பாக இருக்கும்படியான

கனமாக விருந்தால் நல்லது; ஒரு அங்குலத்தில் நாற்பதில் ஒரு பங்கு கனமிருந்தால் போதுமானது. அட்டையை உபயோகப்படுத்தினுல் அட்டையும் இவ்வளவு கனமிருந்தால் போதுமானது. இந்தத் தகடுகளை வட்டங்களாக (Circles) வெட்டவேண்டும்; எல்லாவற்றையும்விடமிகவும் பெரிய வட்டமானது (அதாவது முதலாவது வட்டம்) ஒரு அடி நீட்டு இருக்கட்டும்; அதாவது நீட்டு என்ருல் வட்டத்தின் முழு விட்டம் (diameter) ஒரு அடி நீட்டு இருக்க வேண்டும். இந்த வட்டத்தைச் செய்வதற்கு முன்னமே இதன் தலைப்பில் கைப்பிடியாக உபயோகப்படுவற்காக ஒரு அரை வட்டம் (Semi-circle) இங்கு சக்கரத்தில் நாட்டியுள்ளபடி விட்டு சக்கரத்தைச் செய்யவும்; இந்த அரை வட்டத்தின் அரை விட்டம் (radius) $1\frac{3}{4}$ அங்குலம் இருந்தால் போதுமானது. இந்த அரை வட்டத்தில் மா. து. என்ற மாட்டுந் துளை ஒன்று, கயிரோ, கம்பியோ நுழையும் படியான அளவு உள்ளதைச் செய்யவும். இந்தத் துளை வட்ட வடிவமாக இருந்தால் அழகாய் இருக்கும். இதன் முழு விட்டம் ஒரு அங்குலத்தில் பத்தில் மூன்று பங்கு நீட்டு இருந்தால் போதுமானது. இந்த ஒரு அடி நீட்டு உள்ள பெரிய வட்டத்திற்கு லக்கின வட்டம் என்று பெயரிடுவோம் இந்த லக்கின வட்டத்தின் மத்தியில் ஸ். ஆ. என்ற ஸ்குரு ஆணி துளை ஒன்று செய்யவும். இந்த ஸ். ஆ. துளை வட்ட வடிவமாகவும் இதன் முழு விட்டம் ஒரு அங்குலத்தில் பத்தில் இரண்டு பாகம் நீட்டு உள்ளதாகவும் இருந்தால் போதுமானது. இந்த லக்கின வட்டத்தை இதன் ஸ். ஆ.-வின் மத்தியிலிருந்து செல்லும் பன்னிரண்டு அரை விட்டம் (radius) என்ற கோடுளால் பன்னிரண்டு சம பாகமாகப் பங்கிடவும். இப்படிச் செய்ய இந்த வட்டம் பன்னிரண்டு சம பாகங்களாகப் பங்கிடப்படும் ஒவ்வொரு சமபாகத்திற்கும் விருத்தகோணம்சம் (Sector of a circle) என்று சொல்லுவோம்.

பிறகு இரண்டாவது வட்டம் செய்யவும். இந்த இரண்டாவது வட்டத்தைச் சனி வட்டம் என்று சொல்லுவோம். இந்தச் சனி வட்டத்தின் நீட்டு (அதாவது முழு விட்டம்) பத்து அங்குலம் இருக்கட்டும். பிறகு மூன்ருவது வட்டத்தைச் செய்யவும். இந்த வட்டத்திற்குக் குரு வட்டம் என்று சொல்லுவோம். இந்த குரு வட்டத்தின் நீட்டு (அதாவது முழு விட்டம்) ஒன்பது அங்குலம் இருக்கட்டும். பிறகு நான்காவது வட்டத்தைச் செய்யவும். இதை அங்காரக வட்டம் என்றும் இந்த அங்காரக வட்டத்தின் நீட்டு (அதா

வது முழு விட்டம்) எட்டு அங்குலம் இருக்கட்டும். பிறகு ஐந்தாவது வட்டத்தைச் செய்யவும். இந்த வட்டத்தைச் சூரிய வட்டம் என்று சொல்லும்வோம். இந்தச் சூரிய வட்டத்தின் நீட்டு (அதாவது முழு விட்டம்) ஏழு அங்குலம் இருக்கட்டும். பிறகு ஆருவது வட்டத்தைச் செய்யவும். இந்த வட்டத்தைச் சுக்கிர வட்டம் என்று சொல்லுவோம். இந்த சுக்கிர வட்டத்தின் நீட்டு (அதாவது முழு விட்டம்) ஆறு அங்குலம் இருக்கட்டும். பிறகு ஏழாவது வட்டத்தைச் செய்யவும். இந்த வட்டத்தைப் புதன் வட்டம் என்று சொல்லுவோம். இந்தப் புதன் வட்டத்தின் நீட்டு (அதாவது முழு விட்டம்) ஐந்து அங்குலம் இருக்கட்டும். பிறகு எட்டாவது வட்டத்தைச் செய்யவும். இந்த வட்டத்தைச் சந்திர வட்டம் என்று சொல்லுவோம். இந்தச் சந்திர வட்டத்தின் நீட்டு (முழு விட்டம்) நான்கு அங்குலம் இருக்கட்டும். பிறகு ஒன்பதாவது (அலலது கடைசி அல்லது மிகவும் சிறிய) வட்டத்தைச் செய்யவும். இந்த வட்டத்தை இராசி வட்டம் என்று சொல்லுவோம். இந்த ராசி வட்டத்தின் நீட்டு (அதாவது முழு விட்டம்) இரண்டு அங்குலம் இருக்கட்டும். இவ்விதமாக ஒன்பது வட்டங்களையும் ஒன்றுக்கொன்று சிறியதாய் இருக்கும்படியாய்ச் செய்யவும். லக்கின வட்டத்தில் மத்தியில் ஸ். ஆ. என்ற துளை செய்ததுபோலவே மீதி ஒவ்வொரு வட்டத்திலும் மத்தியில் அதே அளவுள்ள ஒரு வட்டத் துளையைச் செய்யவும். பிறகு லக்கின வட்டம் தவிர மீதி எட்டு வட்டங்களையையுஞ் சுழற்ற ஒரு சிறிய பிடிபோல் இருக்கும்படியாக ஒரு பொத்தானைப் போன்றதைச் சக்கரத்தில் காட்டியது போல கிரகங்களுக்கு அருகில் அசையாமலும் ஆடாமலும் இருக்கும்படியாய்க் கெட்டியாய்ப் புதைக்கவும். உதாரணமாகச் சனி வட்டத்தில் சனிக்கு முன்னே குறித்திருப்பது பொத்தான் ஆகும். பொத்தானுக்குப் பதிலாக ஆணியைக் கூட பதியவைக்கலாம். பிறகு (1) லக்கின வட்டந் தவிர மீதியுள்ள எட்டு வட்டங்களை அதாவது (2) சனி, (3) குரு, (4) அங்காரகன், (5) சூரியன், (6) சுக்கிரன், (7) புதன், (8) சந்திரன், (9) ராசி வட்டங்களை லக்கின வட்டத்தின் பேரில் (ஒவ்வொரு வட்டத்தின் மத்தியிலுள்ள ஸ். ஆ. துளை ஒன்றின்மேல் ஒன்ருய் வரும்படியாக) வரிசையாக ஒவ்வொன்ருய் வைக்கவும். இப்படி வைத்தால் ஒன்பது வட்டத்திலும் மத்தியிலுள்ள ஸ். ஆ. துளை நன்ருய் வட்டமாகத் தெரியும். லக்கின வட்டத்தை நாம் முன்பே 12 அரை விட்டங்களால்

சமபாகமாகப் பங்கிட்டு இருக்கின்றோம். ஒன்பது வட்டங்களையும் முன் சொல்லியபடி ஒன்றின்மேல் ஒன்றாய் வைத்த பிறகு லக்கின வட்டத்திலுள்ள 12 அரை விட்டங்களின் சிறிது பாகமானது லக்கின வட்டத்திற்கும் சனி வட்டத்திற்கும் இடையில் சக்கரத்திற் கண்டபடி தெரியும். ம- என்பது ஒவ்வொரு வட்டத்தின் மத்தி (Centre) ஆகும். ஒன்பது வட்டங்களையும் ஒன்றின்மேல் ஒன்றாக (சரியாய் ஸ். ஆ என்ற துளை சரியாய் வரும்படியாய்) மேலே சொல்லியபடி வைத்தபிறகு ம. என்ற மத்தியிலிருந்து லக்கின வட்டத்தில் தெரியும்படியான அரைவிட்டக் கோடுகளைச் சேர்த்து 12-கோடுகள் வரைய மீதி 8 வட்டங்களில் ஒவ்வொரு வட்டமும் 12 சமபாகங்களாக ஆக்கப்படும். எட்டு வட்டங்களையும் இவ்விதமாக 12-சம பாகங்களாகப் பங்கிடலாம். [அல்லது லக்கின வட்டத்தை 12-சம பாகமாகப் பங்கிட்டது போலவே தனித் தனியாய் ஒவ்வொரு வட்டத்தையும் எடுத்துக்கொண்டு 12 கோடுகளை ஒவ்வொரு வட்டத்திலும் பூராகவும் வரைந்து 12-சம பாகங்கள் ஏற்படுத்தலாம்.] பிறகு தலை அகலமாயுள்ள ஒரு ஸ்குரு ஆணி (ஸ். ஆ. யை எடுத்து ஸ். ஆ. துவாரத்தில் போடவும். இந்த ஸ்குரு ஆணி முக்கால் அல்லது ஒரு அங்குல நீட்டு இருந்தால் போதுமானது. இவ்விதமாக ஒன்பது வட்டங்களையும் ஒன்றின்மேல் ஒன்றாக வரிசையாகவும் சரியாகவும் வைத்து ஸ். ஆ என்ற துவாரத்தில் ஸ்குரு ஆணியைப் போட்டபிறகு, லக்கின வட்டத்திற்குப் பின் பாகத்தில் வெளியே தெரிகிற ஸ்குரு ஆணியின் பாகத்தில் ஒரு நெட்டு (என்ற மரை) போட்டு முடுக்கவும். (மடிப்பு நாற்காலிகளில் ஸ்குரு ஆணிகளுக்குப்போடும் மரை போன்றது இந்த நட்டு அல்லது மரை ஆகும்.) இப்படி மரை போட்டு முடுக்கினால் ஒன்பது வட்டங்களும் பிகுவுபட்டு சக்கரத்தில் காட்டியதுபோலத் தோன்றும். வட்டங்களைச் சுழற்ற வேண்டுமானால், மரையைத் தளர்த்தினால் வட்டங்கள் சுலபமாகச் சுழலும்.

இவ்விதமாக ஒன்பது வட்டங்களைச் செய்துகொண்டு இவைகளின் வெள்ளை வர்ண பெயிண்டு அடிக்கவும். 12 சமபாகமாகப் பங்கிடும் கோடுகளின் (அதாவது அரை விட்டங்களின்) பேரில் சிவப்பு வர்ண பெயிண்டு எழுதவும். பிறகு இந்தப் புத்தகத்தில் 13-வது பக்கத்தில் கொடுத்துள்ள அஷ்டக வர்க்கச் சக்கிரத்தில் கண்டபிரகாரம் எண்களையும் எழுத்துக்களையும், துவாரம் பொத்தான் முதலிய

வைகளையும் கறுப்பு வர்ணமுள்ள பெயிண்ட்டால் எழுதவும்.

அயிட்டம் நெ. 21 :— அஷ்டக வர்க்கச் சக்கரத்தில் காணப்படுபவைகளின் விபரம்:— சூ, சந், அ, பு, சு, என்பன முறையே சூரியன், சந்திரன், அங்காரகன், புதன் சுக்கிரன் என்ற கிரகங்களைக் குறிக்கும்; வி-என்பது வியாழன் என்ற குருவைக் குறிக்கும். ஒவ்வொரு வட்டத்திலும் 1 என்பது சூரியனையும், 2 என்பது சந்திரனையும், 3 என்பது அங்காரகனையும், 4 என்பது புதனையும், 5 என்பது குருவையும், 6 என்பது சுக்கிரனையும், 7 என்பது சனியையும் குறிக்கும். மிகவும் சிறிய வட்டத்திற்குள்ளே இருக்கும் ஒன்று முதல் 12 வரையிலுமுள்ளவை, லக்கினத்திலிருந்து ஒன்று முதல் பன்னிரண்டு ராசிகளையுங் குறிக்கும். லக்கின வட்டத்தின் தலைப்பிலுள்ள சிறிய அரை வட்டத்திலுள்ள 1. சூ. 48 என்பது, ஒன்றால் தெரிவிக்கப்பட்ட சூரியனுக்கு மொத்தப் பரல் 48 என்று தெரிவிக்கும். 2. சந். 49 என்பது இரண்டால் தெரிவிக்கப்பட்ட சந்திரனுக்கு மொத்தப் பரல் 49 என்று தெரிவிக்கும். இவ்விதமாகவே 7. சனி 39 என்பது ஏழால் தெரிவிக்கப்பட்ட சனிக்கு மொத்தப் பரல் 39 என்று தெரிவிக்கும். ஏழு கிரகங்களின் மொத்தப் பரலாகிய 337 ஐயும் மொ.=337 என்று தெரிவித்திருக்கின்றது. (மே. என்பது மேஷத்தையும, ரி. என்பது ரிஷபத்தையும், மி. என்பது மிதுனத்தையும், கட. என்பது கடகத்தையும், சி. என்பது சிம்மத்தையும், கன். என்பது கன்னியையும், து. என்பது துலாத்தையும், வி. என்பது விருச்சிகத்தையும், த. என்பது தனுசையும், ம. என்பது மகரத்தையும், கு. என்பது கும்பத்தையும், மீ. என்பது மீனத்தையும் குறிக்கும்). நம் முன்னோர்கள் பூமியை மத்தியில் வைத்து கிரக கோளங்களை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்த (டாளமிக் சிஸ்டம் (Ptolemic System என்ற) வரிசைக் கிரகமாக இந்த ஒன்பது வட்டங்களையும் ஒன்றின்மேல் ஒன்றாக வைத்திருக்கின்றோம்.

அயிட்டம் நெ. 22 :— அஷ்டக வர்க்கச் சக்கரத்தை உபயோகிக்கும் விதம்:— இந்த அஷ்டக வர்க்கச் சக்கரத்தை உபயோகிக்கும் விதத்தை ஓர் உதாரணத்தால் விளக்கிக் காட்டுவோம். 14-வது அயிட்டத்தில் நாம் எடுத்துக்கொண்ட உதாரண ஜாதகத்தை எடுத்துக் கொண்டு, அந்த ஜாதகருக்கு அங்காரகனுடைய அஷ்டக

வர்க்கத்தைப் போடுவோம். முதல் முதல் அஷ்டக வர்க்க சக்கரத்தை எடுத்துக்கொண்டு, தான் எழுதும்படியான மேஜையின்மீதோ அல்லது இடது கால் மடியின் மீதோ வைத்துக்கொள்ளவும். பிறகு லக்கின வட்டத்தின் கீழே ஸ்குரு ஆணியில் முடுக்கப்பட்டிருக்கிற மரையைத் தளர்த்தவும். லக்கின வட்டத்தின் மேலேயுள்ள 8 வட்டங்களில் ஒவ்வொரு வட்டமும் நன்ருய்ச் சுழலும்படி மறையைத் தளர்த்தவும். பிறகு தன்னுடைய இடது கையின் கட்டைவிரலுக்கு அடுத்த பெரிய விரலை மா. து. என்ற துவாரத்தின் பேரில் ஊன்றிக்கொண்டு அதற்கு அடுத்த 3 விரல்களையும் லக்கின வட்டத்தின் கீழேவிட்டு லக்கின வட்டத்தைப் பிடித்துக்கொள்ளவும். கட்டைவிரல் மாத்திரம் அடிக்கடி ஆடும்படியாக மேலே தூக்கிக்கொண்டிருக்கவேண்டும். இப்படிச் செய்துகொண்ட பிறகு கட்டைவிரலைச் சிறிய வட்டத்திற்குள்ளிருக்கும் 12-க்கு அருகில் வைத்து லக்கின வட்டத்தை அழுத்திக்கொண்டு சனி வட்டத்தைச் சனிக்கு அருகில் சனி வட்டத்திலுள்ள பொத்தானுல் சனி லக்கினத்திற்கு இரண்டாவது வீட்டில் வரும் வரையிலும் சனி வட்டத்தைச் வலது கையால் சுழற்றவும். சனி வட்டத்தில் சனிக்கு முன்னே பின்னே இருக்கின்ற சிகப்பு வர்ணக் கோடுகளும் லக்கின வட்டத்தில் 2-வது ராசியில் முன் பின் உள்ள சிகப்புக் கோடுகளும் கூடியமட்டும் நேர்நேராய் வந்து நிற்கும்படியாகச் சனி வட்டத்தைச் சுழற்றவேண்டும்: பிறகு கட்டைவிரலை லக்கின வட்டத்திலிருந்து எடுத்துக் கொண்டு சனி வட்டத்தில் கட்டை விரலை வைத்து அழுத்திக் கொள்ளவும். இப்படிக் கட்டை விரலால் அழுத்திக்கொண்டால் சனி வட்டம் அசையாமல் இருக்கும். சனியை இரண்டாவது இராசிக்கு நேராய் வரும்படியாயச் சுழற்றி நிறுத்திவிட்ட பிறகு எவ்விதமான காரணத்தைக் கொண்டும் அந்தச் சனி அந்த இடத்தை விட்டு அசையாமல் இருக்கும்படியாய்ப் பார்த்துக்கொள்ளவும்; அதாவது மீதி வட்டங்களை இனிமேல் சுழற்றும்போது இந்தச் சனி வட்டம் அசையக்கூடாது என்பதாம். ஆதலால்தான் சனியைச் சரியாய் நிறுத்திவிட்ட பிறகு கட்டை விரலைச் சனி வட்டத்தின் பேரில் வைத்து அழுத்திக் கொள்ளவேணும் என்று சொன்னது. பிறகு குரு வட்டத்தை அதிலுள்ள பொத்தானுல் வலதுகையில் பிடித்துக்கொண்டு லக்கினத்திலிருந்து ஏழாவது இராசியில் குரு வரும் வரையிலும் முன்போலவே குருவின் வட்டத்தைச்

சுழற்றவேணும். குருவின் வட்டத்தில் குருவுக்கு (விக்கு) முன்னும் பின்னும் உள்ள சிகப்புக் கோடுகளும், அதற்கு அடுத்தபடியே சனி வட்டம், லக்கின வட்டம் இவைகளில் உள்ள சிகப்புக் கோடுகளும் கூடியமட்டும் நேர்நேராய் வரும்படியாகவும், குரு 7-வது ராசியில் இருக்கும்படியாக வும் குருவை அசைத்து நிறுத்தவேண்டும். பிறகு இடது கட்டை விரலைச் சனி வட்டத்திலிருந்து எடுத்து குரு வட்டத்தில் வைத்து அழுத்திக்கொள்ளவும். பிறகு இம்மாதிரி யாகவே சந்திரன் வரையிலும் செய்யவும்; அதாவது பிறகு அங்காரகன் வட்டத்தை அங்காரகன் லக்கின ராசியில்; அதாவது 1-வது ராசியில், வரும்படியாய் வலது கையால் சுழற்றவும். பிறகு இடது கட்டை விரல் அங்காரகன் வட்டத்தில் வைத்துக்கொண்டு, சூரியன் வட்டத்தை வலதுகையால் சூரியன் 12-வது ராசியில் வரும்படியாய்ச் சுழற்றவும். பிறகு சூரிய வட்டத்தை இடது கட்டை விரலால் அழுத்திக்கொண்டு சுக்கிர வட்டத்தை சுக்கிரன் 1-வது ராசியில் வந்து நிற்கும்படியாய் வலது கையால் சுழற்றவும். பிறகு சுக்கிர வட்டத்தை இடது கட்டை விரலால் அழுத்திக்கொண்டு புதன் வட்டத்தைப் புதன் 1-வது ராசியில் வந்து நிற்கும்படியாய் வலது கையால் சுழற்றவும். பிறகு புதன் வட்டத்தை இடது கட்டை விரலால் அழுத்திக்கொண்டு சந்திரன் வட்டத்தைச் சந்திரன் 10-வது ராசியில் வந்து நிற்கும்படியாய் வலது கையால் சுழற்றவும். பிறகு சந்திர வட்டத்தை இடது கட்டை விரலால் அழுத்திக்கொண்டு ராசி வட்டத்தைத் துலாம் 1-வது ராசியில், அதாவது லக்கின ராசியில், வந்து நிற்கும்படியாய் வலது கையால் சுழற்றவும். பிறகு ராசி வட்டத்தை இடது கட்டை விரலால் அழுத்திக்கொண்டு அதன் பிறகு லக்கின வட்டத்தின் கீழே ஸ்குரு ஆணி யில் தளர்த்திவைத்திருக்கும் மரையை நன்றாக முடுக்கி, ஒன்பது வட்டங்களும் இனிமேல் அசையாமல் இருக்கும் படியாய்க் கெட்டிப்படுத்தவும். இவ்விதம் செய்தபிறகு மா. து. இடம் இருக்கும் இடதுகையின் முதல் விரலையும் அதற்கு அடுத்த மூன்று விரல்களையும் இடது கட்டை விரலையும், அதாவது இடது கையை, சக்கரத்திலிருந்து எடுத்துவிடவும். இப்படிச் செய்தால் ஜெனன காலத்தில் ராசிச்சக்கரத்தில் ஏழு கிரகங்களும் லக்கினமும் இருந் ததுபோல இந்த அஷ்டக வர்க்கச் சக்கிரத்தில் ஏழு கிரகங்களும் லக்கினமும் வந்து நிற்கும். இந்த ஜாதகத் தின் பரிசோதனை பூர்த்தயாகி மறு ஜாதகத்தைத் தொடும்

வரையிலும் கடைசியாக முடுக்கின மரையைத் தளர்த்தக் கூடாது; அல்லது வட்டங்களை முன்னும் பின்னும் அசைய விடக்கூடாது ; இது முக்கியமானது இனிமேல் நமக்குத் தேவையான அங்காரகன் அஷ்டக வர்க்கத்தை (அல்லது நமக்குத் தேவையான வேறு எந்த கிரகத்தின் அஷ்டக வர்கத்தையாவது) போடும் வழியைச் சொல்லுவோம்

அயிட்டம் நெ. 23 — அங்காரகன் அஷ்டக வர்க்கம் போடும் விதம்:— மேலே 22-வது அயிட்டத்தில் சொல்லிய பிரகாரம் ஜெனன காலத்தில் இராசிச் சக்கிரத்தில் ஏழு கிரகங்களும் லக்கினமும் இருந்தது போலவே இருக்கும்படியாய் அஷ்டக வர்க்க சக்கரத்தில் உள்ள லக்கின வட்டம் தவிர மீதி எட்டு வட்டங்களைத் திருப்பி வைத்துக் கொள்ளவும். பக்கலில் காட்டியபடி 3-வது கட்டம் ஒன்று போட்டுக் கொள்ளவும். இந்த அஷ்டக வர்க்கச் சக்கரத்தை இப்போது பார்க்க லக்கினம் துலாத்தில் இருக்கிறது. ஒரு வட்டத்தைப் பன்னிரண்டு சமபாகமாகப் பங்கிட வருகின்ற ஒவ்வொரு சம பாகத்திற்கும் விருத்தகோணும்சம் (Sector of a circle) என்று சொல்லவும். இபபோது லக்கினம் முதல் துலாம் வரையிலும் அடங்கியுள்ள 1–வது விருத்த கோணும்சத்தைப் பார்க்கவும். அங்காரகனைக் குறிக்கும் எண் 3ஆகும். ஆகையால் இந்த 1-வது விருத்தகோணும்சத்தில் எத்தனை 3 இருக்கின்றது என்று பார்க்கவும்; இப்படிப் பார்க்க லக்கின வட்டத்தில் ஒரு 3, அங்காரகன் வட்டத்தில் ஒரு 3, ஆக மொத்தம் இரண்டு '3' இருக்கின்றது. ஆகையால் 3-வது கட்டத்தில் லக்கினம் உள்ள துலாத்தில் 2 எழுதவும். பிறகு அஷ்டக வர்க்கச் சக்கரத்தில் லக்கினத்திற்கு இரண்டாம் ராசியாகிய விருச்சிகத்தைப் பார்க்கவும். இந்த விருச்சிகம் இருக்கின்ற 2-வது விருத்தகோணும்சத்தில் சனி வட்டத்தில் ஒரு 3, அங்காரகன் வட்டத்தில் ஒரு 3, சூரியன் வட்டத்தில் ஒரு 3, ஆக மொத்தம் மூன்று 3 இருக்கின்றது. ஆகையால் 3-வது கட்டத்தில் விருச்சிகத்தில் 3-எழுதவும்.

மீன 4	மேஷ குரு 1	ரிஷ 4	மிது 2
கும் 4	அங்காரகன் அஷ்டக வர்க்கம் சுப பல பிந்து 39		கட சந் 4
மக 3	3-வது கட்டம்		சிங் 5
தனு 3	விரு சனி 3	துலா—லக் அ-பு-சு 2	கன் சூரி 4

பிறகு தனுசு (அதாவது லக்கினத்திற்கு 3-வது ராசி) உள்ள 3-வது விருத்தகோணும்சத்தைப் பார்க்க இதில்கூட மூன்று 3 இருக்கிறது. ஆகையால் 3-வது கட்டத்தில் தனுசில் 3 எழுதவும். பிறகு மகரம் (அதாவது லக்கினத்திற்கு 4-வது ராசி) உள்ள 4-வது விருத்த கோணும் சத்தைப் பார்க்க இதில்கூட மூன்று 3 இருக்கிறது; ஆகையால் 3-வது கட்டத்தில் மகரத்தில் 3 எழுதவும். பிறகு கும்பம் (அதாவது லக்கினத்திற்கு 5-வது ராசி) உள்ள 5-வது விருத்தகோணும்சத்தைப் பார்க்க இதில் நான்கு 3 இருக்கிறது; ஆகையால் கும்பத்தில் 4 எழுதவும்; பிறகு மீனம் (அதாவது லக்கினத்திலிருந்து 6-வது ராசி) உள்ள 6-வது விருத்தகோணும்சத்தைப் பார்க்க இதில் நான்கு 3 இருப்பதால் மீனத்தில் 4 எழுதவும். இவ்விதமாக மீதி ராசிகளை (அதாவது லக்கினத்திலிருந்து எண்ண வரும் 7-வது முதல் 12-வது வரை உள்ள ராசிகளை)ப் பார்த்து மேஷத்தில் 1-ம், ரிஷபத்தில் 4-ம், மிதுனத்தில் 2-ம், கடகத்தில் 4-ம், சிம்மத்தில் 5-ம், கன்னியில் 4-ம் எழுதவும். இப்போது இந்த அஷ்டக வர்க்கச் சக்கிர வழி ரீதியாய் அங்காரகன் அஷ்டக வர்க்கம் போட்ட 3-வது கட்டத்தை முந்தி சாதாரணமான வழிப் பிரகாரம் போட்ட 14-வது அயிட்டத்திலுள்ள 2-வது கட்டத்துடன் ஒத்திட்டுப் பார்க்கவும். இப்படிப் பார்க்க 2-வது, 3-வது கட்டங்களில் ஒவ்வோர் இராசியிலும் சுப பல பிந்து ஒன்ருக ஒத்து இருப்பதைக் காணலாம். ஆகையால் இரண்டு வழிகளாலும் அங்காரகனுடைய அஷ்டக் வர்க்கத்தை அடையலாம் என்று ஏற்படும். ஆனல் அஷ்டக வர்க்கச் சக்கரத்தினுல் அஷ்டக வர்க்கத்தைசாதாரண வழியைவிட மிகவும் சுலபமாய்ப் போடலாம். மேலும் அஷ்டக வர்க்கச் சக்கரத்தினுல் சாதாரண வழியில் இல்லாத இன்னும் சில அனுகூலங்கள் இருக்கின்றன. அவைகளைப் பின்னுல விளக்கிக் காட்டுவோம். ஆதலால் பலா பலன்களை அடிக்கடி சொல்லுகின்ற ஒவ்வொரு ஜோதிடரும் தம்மிடத்தில் மேற்சொல்லியபடி ஒரு சக்கரத்தைத் தயார் செய்து வைத்துக்கொள்வது மிகவும் அவசியமானது.

அயிட்டம் நெ. 24 — இனி மீதி கிரகங்களின் அஷ்டக வர்க்கத்தைப் போடுவோம்:—

சூரியன் அஷ்டக வர்க்கம் — சூரியனுடைய அஷ்டக வர்க்கத்தை இனிமேல் போடுவோம்:— அஷ்டக வர்க்கச் சக்கிரத்தில் சூரியனைக் குறிக்கும் எண் 1 ஆகும்.

4	மே 4	4	4
3	சூரியன் அஷ்டக வர்க்கம் சுப பல பிந்து 48 4-வது வட்டம்		5
2			5
6	2	ல 2	சூ 7

ஆகையால் ஒவ்வொரு விருத்தகோணும்சத்திலுள்ள 1ஐ எண்ணி அந்த விருத்தகோணும்சத்திலுள்ள ராசியில் முன்போல எழுதவும். துலாம் உள்ள விருத்தகோணும்சத்தில் அங்காரகன் வட்டத்தில் ஒரு 1-ம், சூரியன் வட்டத்தில் ஒரு 1-ம், இருப்பதால் இந்த விருத்தகோணும்சத்தில் மொத்தம் இரண்டு 1 இருக்கிறது. ஆகையால் 4-வது கட்டத்தில் துலாத்தில் 2 எழுதவும். இவ்விதமாக ஒவ்வொரு ராசி உள்ள விருத்தகோணும்சத்திலுள்ள 1ஐ எண்ணி 4-வது கட்டத்தில் அந்த அந்த ராசியில் எழுதவும். இப்படி எழுத 4-வது கட்டத்திற் கண்டபடி சூரியனது அஷ்டக வர்க்கம் வரும.

அயிட்டம் நெ. 25 — சந்திரன் அஷ்டக வர்க்கம்—

5	மே 6	2	3
5	சந்திரன் அஷ்டக வர்க்கம். சுப பல பிந்து 49 5-வது வட்டம்		சந் 7
5			4
5	3	ல 2	2

சந்திரனுடைய அஷ்டக வர்க்கத்தைப் போடுவோம். அஷ்டக வர்க்கச் சக்கரத்தில் சந்திரனைக் குறிக்கும் எண் 2 ஆகும். ஆகையால் ஒவ்வொரு விருத்தகோணும்சத்திலுள்ள 2ஐ எண்ணி அந்த விருத்தகோணும்சத்திலுள்ள ராசியில் முன்போல எழுத சந்திரனுடைய அஷ்டக வர்க்கம் 5-வது கட்டத்தில் கண்ட மாதிரி வரும்.

அயிட்டம் நெ. 26 — புதன் அஷ்டக வர்க்கம் —

3	மே 2	6	4
6	புதன் அஷ்டக வர்க்கம் சுப பல பிந்து 54. 6-வது கட்டம்		5
4			7
4	5	ல-பு 5	3

புதனுடைய அஷ்டக வர்க்கத்தைப் போடுவோம். அஷ்டகவர்க்கச் சக்திரத்தில் புதனைக் குறிக்கும் எண் 4 ஆகும். ஆகையால் ஒவ்வொரு விருத்த கோணும் சத்திலுள்ள 4-யை எண்ணி அந்த விருத்தகோணும் சத்திலுள்ள ராசியில் முன்போல எழுக புதனுடைய அஷ்டகவர்க்கம் 6-வது கட்டத்தில் கண்டமாதிரி வரும்.

அயிட்டம் நெ. 27 — புதன் அஷ்டக வர்க்கம்—குருவினுடைய அஷ்டக வர்க்கத்தைப் போடுவோம்.

6	மே-கு 5	4	5
4	குரு அஷ்டக வர்க்கம் சுப பல பிந்து 56. 7-வது கட்டம்		6
6			5
1	7	ல 6	.1

அஷ்டகவர்க்கச் சக்கரத்தில் குருவைக் குறிக்கும் எண் 5 ஆகும். ஆகையால் ஒவ்வொரு விருத்தகோணும்சத்தில் உள்ள 5-ஐ எண்ணி அந்த விருத்தகோணும் சத்திலுள்ள ராசியில் முன்போல எழுத குருவினுடைய அஷ்டகவர்க்கம் ஏழாவது கட்டத்தில் கண்ட மாதிரி வரும்.

அயிட்டம் நெ. 28 — சுக்கிரன் அஷ்டக வர்க்கம்—

4	மே 1	3	6
7	சுக்கிரன் அஷ்டக வர்க்கம் சுப பல பிந்து 52. 8-வது கட்டம்.		4
4			8
5	4	ல-சு 3	3

சுக்கிரனுடைய அஷ்டக வர்ககத்தைப் போடுவோம். அஷ்டகவர்க்கச் சக்கரத்தில் சுக்கிரனைக் குறிக்கும் எண் 6 ஆகும். ஆகையால் ஒவ்வொரு விருத்தகோணும்சத்தில் உள்ள 6-ஐ எண்ணி அந்த விருத்தகோணும் சத்திலுள்ள ராசியில் முன்போல எழுத சுக்கிர

னுடைய அஷ்டகவர்க்கம் எட்டாவது கட்டத்தில் கண்ட மாதிரி வரும்.

அயிட்டம் நெ. 29 — சனியின் அஷ்டக வர்க்கம்— சனியின் அஷ்டக வர்க்கத்தைப் போடுவோம். அஷ்டகவர்க்கச் சக்கிரத்தில் சனியைக் குறிக்கும் எண் 7 ஆகும். ஆகையால் ஒவ்வொரு விருத்த கோணும்சத்தில் உள்ள 7-ஐ எண்ணி அந்த விருத்த கோணும்சத்திலுள்ள ராசியில் முன் போல எழுத சனியினுடைய அஷ்டக வர்க்கம் 9-வது கட்டத்தில் கண்ட மாதிரி வரும்.

7	மே 2	2	2
2	சனி அஷ்டக வர்க்கம் சுப பல பிந்து 39. 9-வது கட்டம்.		4
2			5
4	சனி 0	ல 2	7

அயிட்டம் நெ. 30 — சர்வாஷ்டக வர்க்கம்—இனி சர்வாஷ்டக வர்க்கத்தைப் போடும் வழியைப் பற்றி இங்கு சொல்லுவோம். சர்வம் என்ருல் எல்லாம்என்று அர்த்தம். சர்வாஷ்டக வர்க்கம் என்பது எல்லா (அதாவது சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய எல்லா) கிரகங்களின் ஏழு அஷ்டக வர்க்கங்களைக் கூட்டி ஒரு இராசிச் சக்கரத்தில் போட வருவது தான் சர்வாஷ்டக வர்க்கம் ஆகும். இந்த சர்வாஷ்டக வர்க்கத்தை இதுவரையிலும் சொல்லி வந்த இரண்டு வழிகளாலும், அதாவது (1) சாதாரண வழியாலும், (2) அஷ்டக வர்க்கச் சக்கர வழியாலும் போடலாம்.

33	மே-கு 21	25	26
31	சர்வாஷ்டக வர்க்கம் சுப பல பிந்து 337. 10-வது கட்டம்.		சந்-ரா 35
கே 26			39
28	சனி 24	ல-அ-பு சு 22	சூரி 27

வழி (1) சாதாரண வழிப் பிரகாரம் :— ஒவ்வொரு கிரகத்தின் அஷ்டக வர்க்கத்திலும் மேஷ ராசியில் வந்த பிந்துக்களைக் கூட்டி மேஷ ராசியில் சர்வாஷ்டக வர்க்கமாகிய 10-வது கட்டத்தில் போடவும். 3-வது முதல் 9-வ

வரையிலுள்ள கட்டங்களில் மேஷத்திலுள்ள 1, 4, 6, 2, 5, 1. 2, இவைகளைக் கூட்ட 21 வரும்; இந்த 21-ஐ 10-வது கட்டத்தில் மேஷத்தில் போடவும். 3-வது முதல் 9-வது வரையிலுமுள்ள கட்டங்களில் ரிஷபத்திலுள்ள 4, 4, 2, 6, 4,3,2 இவைகளைக்கூட்ட வருகின்ற 25-யை 10-வது கட்டத்தில் ரிஷபத்தில் போடவும். இவ் விதமாகவே 3-வது முதல் 9-வது கட்டம் வரையிலும் மீதி பத்து ராசிகளில் உள்ள எண்களின் தொகைகளைக் கூட்டி மீதி அந்தந்த ராசிகளில் 10-வது கட்டத்தில் போட, 10-வது கட்டத்தில் காட்டிய படி சர்வாஷ்டக வர்க்கம் வரும். சர்வாஷ்டக வர்க்கத்தில், அதாவது 10-வது கட்டத்தில், ஒவ்வொரு ராசியிலுமுள்ள எண்களின் தொகையைக் கூட்ட 337 வரும். இந்த 337 தான் சர்வாஷ்டக வர்க்க மொத்தச் சுப பல பிந்து ஆகும்.

வழி (2) அஷ்டக வர்க்கச் சக்கர வழி பிரகாரம்:— அஷ்டக வர்க்கச் சக்கரத்தைக்கொண்டு சர்வாஷ்ட வர்க்கம் வெகு சுலபமாகப் பின் சொல்லிய பிரகாரம் போடலாம். அஷ்டக வர்க்கச் சக்கரத்தில் மேஷ ராசி உள்ள விருத்த கோணும்சத்தில் உள்ள எண்களைக் கூட்ட வரும் தொகையை 10-வது கட்டத்தில் மேஷ ராசியில் எழுதவும். அதாவது மேஷ ராசி உள்ள விருத்த கோணும் சத்தில் லக்கின வட்டத்தில் 5 என்ற எண்ணும், சனி வட்டத்தில் 2, 5, 7 என்ற 3 எண்களும், குரு வட்டத்தில் 2, 5 என்ற 2 எண்களும், அங்காரகன் வட்டத்தில் 1, 3, 4, 5 என்ற 4 எண்களும், சூரியன் வட்டத்தில் 1. 2, 5, 6, 7 என்ற 5 எண்களும், சுக்கிரன் வட்டத்தில் 1, 2 என்ற 2 எண்களும், புதன் வட்டத்தில் 2 என்ற 1 எண்ணும், சந்திரன் வட்டத்தில் 1, 2, 4 என்ற 3 எண்களும் இருக்கின்றன. அதாவது இந்த ஏழு வட்டங்களில் மேஷத்திற்கு எதிரிலுள்ள மொத்த எண்களாகிய 1, 3, 2, 4, 5, 2, 1, 3 இவைகளின் தொகையைக் கூட்ட 21 வரும். இந்த 21-ஐ சர்வாஷ்டக வர்க்கத்தில் (அதாவது 10-வது கட்டத்தில்) மேஷத்தில் போடவும். பிறகு ரிஷபம் இருக்கும்படியான விருத்தகோணும்சத்தில் ஏழு கிரகங்களின் வட்டத்திலுள்ள எண்களை எண்ண 25 வரும். அதாவது லக்கின வட்டம் முதல் சந்திர வட்டம் வரையிலும் 2, 3, 1, 4, 3, 3, 2, 7 எண்கள் வரும்: இவைகளைக் கூட்ட 25 வரும். இந்த 25-ஐ 10-வது கட்டத்தில் ரிஷபத்தில் போடவும். பிறகு மிதுனம் உள்ள விருத்த கோணும்சத்தில் உள்ள மொத்த எண்களாகிய 2, 4, 4, 5, 4, 5, 1 இவைகளைக் கூட்ட வருகின்ற 26-ஐ 10-வது கட்டத்தில் மிதுனத்தில்

போடவும். பிறகு கடகம் உள்ள விருத்த கோணும்சத்தில் உள்ள மொத்த எண்களாகிய 6, 4, 2, 6, 7, 3, 5, 2 இவை களைக் கூட்ட வருகின்ற 35ஐக் கடகத்தில் போடவும். இவ்விதமாகவே சிம்மம் முதல் மீனம் வரையிலுமுள்ள மீதி எட்டு ராசிகளிருக்கின்ற விருத்த கோணும்சங்களில் இருக்கின்ற மொத்த எண்களின் தொகையைக் கூட்டி, சிம்மம் முதல் மீனம் வரையிலுள்ள ராசிகளில் போட 10-வது கட்டத்தில் கண்டபடி 39, 27, 22, 24, 28, 26, 31, 33 முறையே வரும். இவ்விதமாக அஷ்டக வர்க்கச் சக்கரத் தைக் கொண்டு சர்வாஷ்டக வர்க்கம் போடவும்.

(3) இவ்விரண்டு வழிகளில் சாதாரண வழியை விட அஷ்டக வர்க்கச் சக்கர வழி மிகவும் சுலபமானது. ஜெனன காலத்தில் ராசிச் சக்கரத்தில் 7 கிரகங்கள் இருப் பதுபோலவே அஷ்டக வர்க்கச் சக்கரத்தில் கிரகங்களும் லக்கினமும் வரும்படி வட்டங்களைத் திருப்பிக்கொண்டு சக்கரத்தை நிலை நிறுத்திக்கொண்ட பிறகு ஒவ்வொரு ராசியிலும் வரும் சர்வாஷ்டக வர்க்க பிந்துக்களை வெகு சுலபமாக எண்ணிப் போட்டுவிடலாம். இப்படிப்போட ஒவ்வொரு கிரகத்தின் அஷ்டக வர்க்கம் போடவேண்டிய அவசியமில்லை. அதாவது நமக்குச் சர்வாஷ்டக வர்க்கம் மாத்திரம் தேவையானல் சக்கரத்தை மேற்சொல்லியபடி நிலை நிறுத்திக்கொண்டு ஒவ்வொரு கிரகத்தின் அஷ்டக வர்க்கம் போடாமலேயே நேராய்ச் சர்வாஷ்டக வர்க்கம் போட்டுவிடலாம். ஆனல் சாதாரண வழிப் பிரகாரம் சர்வாஷ்டக வர்க்கம் தேவையானல் ஒவ்வொரு கிரகத் திற்கும் அஷ்டக வர்க்கம் போட்ட பிறகுதான் சர்வாஷ்டக வர்க்கம் மேலே 1-வது வழியில் சொல்லியபடி போட முடியும். இந்த அனுகூலம் அஷ்டக வர்க்க சக்கரத்தில் ஏற்படும் பல அனுகூலங்களில் ஒன்று என்று அறியவும்.

(4) சாதாரண வழியைவிட அஷ்டக வர்க்கச் சக்கரத்தினலுண்டாகும் இன்னொரு முக்கியமான அனு கூலத்தை இங்கு இனி விவரித்துச் சொல்லுவோம். உதா ரணமாகக் குருவினுடைய அஷ்டக வர்க்கமாகிய 7-வது கட்டத்தைப் பார்க்கவும். இந்தக் கட்டத்தில் லக்கினம் இருக்கும் ராசிக்கு ஐந்தாவது ராசியாகிய கும்ப ராசியில் நான்கு பரல்கள் அல்லது பிந்துக்கள் இருக்கின்றன. இந்தப் பிந்துக்களை குரு அஷ்டக வர்க்கத்தில் எந்த எந்த கிரகம் கொடுத்தது; அவைகள் ஆண் கிரகம் கொடுத் தது எவ்வளவு; பெண் கிரகம் கொடுத்தது எவ்வளவு; அலி கிரகம் கொடுத்தது எவ்வளவு என்று அறியலாம்.

இப்போது நாம் நிலை நிறுத்தி வைத்திருக்கின்ற அஷ்டக வர்க்கச் சக்கரத்தைப் பார்ப்போம். அதில் கும்ப ராசி இருக்கும் விருத்த கோணும்சத்தில் குருவைக் குறிக்கின்ற எண் ஆகிய 5 என்பது நான்கு தடவை வந்து இருக்கின்றது. ஆகையால் தான் கும்ப ராசியில் நான்கு பிந்து போட்டிருக்கின்றது. இந்த நான்கு 5–களில் ஒரு 5 லக்கின வட்டத்தில் இருக்கின்றது. ஆகையால் இந்த பிந்தை குரு அஷ்டக வர்க்கத்தில் லக்கினம் கொடுத்தது என்று அறியவும். பிறகு 2-வது 5 என்பது குரு வட்டத்தில் இருக்கின்றது. ஆகையால் இந்த பிந்தைக் குரு கொடுத்தது என்றும், குரு ஆண் கிரகமானதால் ஆண் கிரகம் கொடுத்தது என்றும் அறியவும். 3-வது 5 என்பது சுக்கிரனுடைய வட்டத்திலிருக்கின்றது. ஆகையால் இந்தப் பிந்தைச் சுக்கிரன் கொடுத்தது என்றும், சுக்கிரன் பெண் கிரகமானதால் பெண் கிரகம் கொடுத்தது என்றும் அறியவும். பிறகு 4-வது 5 என்பது புதனுடைய வட்டத்திலிருக்கிறது. ஆகையால் இந்தப் பிந்தைப் புதன் கொடுத்தது என்றும், புதன் அலிக் கிரகமானதால் அலிக் கிரகம் கொடுத்தது என்று அறியவும். இவ்விதமாக நமக்கு வேண்டிய விவரங்களை அஷ்டக வர்க்கச் சக்கரத்தினுதவியால் வெகு சுலபமாக அறியலாம்.

அயிட்டம் நெ. 31 — சர்வாஷ்டக வர்க்கம் போட மூன்ருவது வழி—சர்வாஷ்டக வர்க்க நிலையான பிந்துக்கள்.

11-வது கட்டம்—(பிரஸ்தாரர்ஷ்டக வர்க்கம்).

வரிசை எண்		1	2	3	4	5	6	7	8	9	10	11	12	மொத்தம்
சூரியன்	...	3	3	3	3	2	3	4	5	3	5	7	2	43
சந்திரன்	...	2	3	5	2	2	5	2	2	2	3	7	1	36
அங்காரகன்	...	4	5	3	4	3	3	4	4	4	6	7	2	49
புதன்	...	3	1	5	2	6	6	1	2	5	5	7	3	46
குரு	...	2	1	1	2	3	4	2	4	2	4	7	4	36
சுக்கிரன்	...	2	3	3	3	4	4	2	3	4	3	6	3	40
சனி	...	3	2	4	4	4	3	3	4	4	4	6	1	42
லக்கினம்	...	5	3	5	5	2	6	1	2	2	6	7	1	45
													மொத்தம் ...	337

இந்த 11-வது கட்டத்திற்குப் பிரஸ்தாராஷ்டக வர்க்கம் என்று பெயர். இந்த 11-வது கட்டத்தில் கொடுத்துள்ள எண்களைப் பின்னுல் கொடுத்திருக்கின்ற 12-வது கட்டத்தில் கண்டபடி, ஜெனன காலத்தில் இராசிச் சக்கரத்தில் கிரகம் இருக்கும் இராசியிலிருந்து ஆரம்பித்து வரிசையாக 1 முதல் 12 வரையிலும் 12 ராசிகளிலும் எழுதவும். 12-வது கட்டத்தைப் போடும் வழியைப் படிக்கவும்.

சர்வாஷ்டக வர்க்கம்—12-வது கட்டம்.

கிரகம் முதலியன	மே	ரிஷ	மிது	கட	சிம்	கன்	துலா	விரு	தனு	மக	கும்	மீன	மொத்தம்
சூரியன் ...	5	3	5	7	2	3	3	3	3	2	3	4	...
சந்திரன் ...	3	7	1	2	3	5	2	2	5	2	2	2	...
அங்காரகன் ...	4	4	4	6	7	2	4	5	3	4	3	3	...
புதன் ...	1	2	5	5	7	3	3	1	5	2	6	6	...
குரு ...	2	1	1	2	3	4	2	4	2	4	7	4	...
சுக்கிரன் ...	2	3	4	3	6	3	2	3	3	3	4	4	...
சனி ...	3	3	4	4	4	6	1	3	2	4	4	4	...
லக்கினம் ...	1	2	2	6	7	1	5	3	5	5	2	6	...
மொத்தம் சர்வாஷ்டக பிந்து ...	21	25	26	35	39	27	22	24	28	26	31	33	337

12-வது கட்டம் போடும் வழி :—மேலே 12-வது கட்டத்தில் கண்டபடி ஒரு கட்டம் வரைந்துகொள்ளவும். பிறகு சூரியனை எடுத்துக்கொள்ளவும். சூரியன் ஜெனன காலத்தில் இராச்சக்கரத்தில் கன்னியிலிருக்கிறது. ஆகையால் 11-வது கட்டத்தில் சூரியனுக்கு எதிரில் வரிசை எண்களாகிய 1 முதல் 12-வரையிலுமுள்ள வரிசை எண்களுக்குக் கீழே உள்ள எண்களாகிய 3, 3, 3, 3, 2, 3, 4, 5, 3, 5, 7, 2 ஆகிய இவைகளை 12-வது கட்டத்தில் சூரியனிருக்கின்ற கன்னியா ராசியிலிருந்து ஆரம்பித்து வரிசையாக சிம்ம ராசிவரையிலும் வரிசை

யாக எழுதவும். பிறகு 11-வது கட்டத்தில் சந்திரனுக்கு எதிரில் வரிசை எண்களாகிய 1 முதல் 12 வரையிலுமுள்ள வரிசை எண்களுக்குக் கீழே உள்ள எண்களாகிய 2, 3, 5, 2, 2, 5, 2, 2, 2, 3, 7, 1 ஆகிய இவைகளை 12-வது கட்டத்தில் சந்திரன் இருக்கின்ற கடக ராசியிலிருந்து ஆரம்பித்து வரிசையாக மிதுனராசி வரையிலும் வரிசையாக எழுதவும். பிறகு இவ்விதமாக அங்காரகன் முதல் லக்கினம் வரையிலுமுள்ளவைகளுக்கு எதிரில் 11-வது கட்டகித்தில் கொடுத்துள்ள எண்களை 12-வது கட்டத்தில் இக் கிரகங்களும் லக்கினமும் இருக்கும் ராசியிலிருந்து வரிசையாக 12 ராசிகளிலும் வரிசையாக எழுதவும். இவ்விதமாக எழுத 12-வது கட்டத்தில் கண்டபடி வரும். பிறகு 12-வது கட்டத்தில் ஒவ்வொரு ராசியின் கீழே சூரியன் முதல் லக்கினம் வரையிலுமுள்ளவைகளுக்கு எதிரில் உள்ள எண்களைக் கூட்டவும். இவ்விதமாகக் கூட்ட மேஷத்தில் 21-ம், ரிஷபத்தில் 25-ம், மீனத்தில் 33-ம் வரும். இந்த 21-ம், 25-ம், 33-ம் தான் சர்வாஷ்டக வர்க்கத்தில் மேஷத்திலும், ரிஷபத்திலும், மீனத்திலும் வருகின்ற மொத்த பிந்து ஆகும். இப்போது 30-வது அயிட்டத்தில் 10-வது கட்டத்தைப் பார்க்க அதில் கூட மேஷத்தில் 21-ம், ரிஷபத்தில் 25-ம், மீனத்தில் 33-ம் வந்திருப்பதைக் கவனிக்கவும். இவ்விதமாக அஷ்ட வர்க்கச் சக்கரம் இல்லாமலேயே சர்வாஷ்டக வர்க்கத்தை பிரஸ்தாராஷ்டக வர்க்கம் என்ற 11-வது கட்டத்தின் உதவியால் வெகு சுலபமாகப் போடலாம் என்று அறியவும்.

மேலும் 12-வது கட்டத்தில் மேஷத்தில் சூரியனுக்கு எதிரில் 5-ம், சந்திரனுக்கு எதிரில் 3-ம் இருக்கின்றது. ஆகையால் மேஷத்திலுள்ள மொத்த சர்வாஷ்டக வர்க்கப் பரலாகிய 21-ல் சூரியன், 5-ம், சந்திரன் 3-ம் கொடுத்ததாக அறியலாம். இவ்விதமாகவே சர்வாஷ்டக வர்க்கத்தில் ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு கிரகம் கொடுத்த பிந்துவை அறியலாம்.

அயிட்டம் நெ. 32 — பின்னுஷ்டக வர்க்கமும்; சமுதாய அஷ்டக வர்க்கம்—பின்னுஷ்டகவர்க்கம் என்பது ஒவ்வொரு கிரகத்திற்கும் தனித்தனியாய்ப் போட்டு வரும் அஷ்டக வர்க்கம் ஆகும். ஒவ்வொரு கிரகத்தின் பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒவ்வொரு ராசியிலிருக்கும் பிந்துக்குப் பின்னுஷ்டக வர்க்க பிந்து என்று பெயர்.

சமுதாய அஷ்டக வர்க்கம் என்பது சர்வாஷ்டக வர்க்கம் ஆகும்; அதாவது சமுதாய அஷ்டக வர்க்கம் என்பது சர்வாஷ்டக வர்க்கத்திற்கு இன்னொரு பெயராகும். சமுதாய அஷ்டக வர்க்கத்தில் ஒவ்வொரு ராசியிலுமுள்ள பிந்துக்குச் சமுதாய பிந்து அல்லது சமுதாய பரல் என்று பெயர். சமுதாயம் என்பது சர்வம் அல்லது மொத்தம் என்று அர்த்தம்.

அத்தியாயம் 2

திரிகோண சோதனை

அயிட்டம் நெ. 1 :— திரிகோண சோதனை என்பது திரிகோண ராசிகளாகிய 1, 5, 9–வது ராசிகளிலுள்ள பிந்துக்களைச் சோதிப்பது என்பதாம். திரிகோண ராசிகள் அடியிற்கண்டபடி நான்கு பகுதிகள் (அதாவது நான்கு வகைகள்) ஆகும்.

நான்கு பகுதிகள்

பகுதி 1—மேஷம், சிம்மம், தனுசு இவைகள் ஒன்றுக்கொன்று திரிகோண ராசிகள்

பகுதி 2—ரிஷபம், கன்னி, மகரம் இவைகள் ஒன்றுக்கொன்று திரிகோண ராசிகள்.

பகுதி 3—மிதுனம், துலாம், கும்பம் இவைகள் ஒன்றுக்கொன்று திரிகோண ராசிகள்.

பகுதி 4—கடகம், விருச்சிகம், மீனம் இவைகள் ஒன்றுக்கொன்று திரிகோண ராசிகள்.

ஆகையால் திரிகோண சோதனை என்பது மேஷம், சிம்மம், தனுசு ஆகிய இந்த மூன்று ராசிகளுள்ள 1-வது பகுதியிலுள்ள பிந்துக்களைச் சோதிப்பது ஆகும். இவ்விதமாக மற்ற மூன்று பகுதிகளையும் தனித்தனியே எடுத்துக்கொண்டு ஒவ்வொரு பகுதியில் அடங்கிய இராசிகளிலுள்ள பிந்துக்களையும் சோதிக்கவேண்டும். இப்படி எல்லா ராசிகளிலுமுள்ள பிந்துக்களைச் சோதிப்பதற்குத் திரிகோண சோதனை என்று பெயர்.

அயிட்டம் நெ. 2 :—திரிகோண சோதனையை இரண்டு வழிகள் பிரகாரம் செய்து வருகின்றார்கள். இவ்விரண்டு வழிகளும் அடியிற்கண்டபடி ஆகும்.

1-வது வழி

சோதனை விதிகள்

அயிட்டம் நெ. 3

விதி நெ. 1.— திரிகோண ராசிகள் மூன்றிலும் பிந்துக்கள் இருந்து இவைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக விருந்தால் (அதாவது மூன்று ராசிகளிலும் பிந்துக்கள் இருந்து இம்மூன்று பிந்துக்களும் வெவ்வேருக இருந்தால்) மிகவும் சிறியதாயிருக்கின்ற எண்ணிற்குச் சமமாக வரும்படி மற்ற இரண்டு ராசிகளிலுமுள்ள பிந்துக்களின் எண்ணைக் குறைக்கவும். அதாவது மூன்று ராசிகளிலுமுள்ள பிந்துக்களைச் சமமாக ஆகும்படியாய்ச் சமப்படுத்தவும்.

உதாரணம் :— உதாரணமாக 1-வது அத்தியாயம் 27-வது அயிட்டத்திலுள்ள குருவின் அஷ்டக வர்க்கத்தை எடுத்துக் கொள்ளவும். இதில் ரிஷபம், கன்னி, மகரம் என்ற திரிகோண ராசிகளில் 4, 1, 6 என்ற எண்கள் முறையே இருக்கின்றன. இவைகள் மூன்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. இவைகளில் 1 என்பது மிகவும் சிறியது. ஆகையால் 4, 6-ஐ 1 ஆக வரும்படியாய்க் குறைக்கவும். இப்படிச் செய்ய 4, 1, 6 என்பது திரிகோண சோதனை ஆன பிறகு 1, 1, 1 என்று மூன்றும் சமமாக விருக்கும்படியாய் வரும்.

விதி நெ. 2. திரிகோண ராசிகள் மூன்றில் இரண்டு ராசிகளில் பிந்துக்கள் சமமாக விருந்து ஒரு ராசி பிந்து வேருகவிருந்தால் மேலே ஓராவது விதியில் சொல்லியபடி செய்யவும்.

உதாரணம் :— உதாரணமாக 1-வது அத்தியாயம் 27-வது அயிட்டத்தில் குருவின் அஷ்டக வர்க்கத்தில் மேஷத்தில் 5-ம், சிம்மத்தில் 5-ம், தனுசில் 1-ம் இருக்கின்றன. இவைகளை முன்போலவே சோதனை செய்ய, அதாவது மிகவும் சிறிய பிந்துவாகிய 1க்குச் சமப்படுத்த, மூன்று ராசிகளிலும் 1, 1, 1 என்று சமமாக வரும்.

விதி நெ. 3:—திரிகோண ராசிகள் மூன்றில் ஏதாவது ஒரு ராசியில் பிந்து இல்லாமல் பூஜ்யமாகவிருந்தால் திரிகோண சோதனை செய்யவேண்டியதில்லை அதாவது இருக்கின்ற பிந்துக்களை அப்படியே வைத்துக்கொள்ளவும். அதாவது திரிகோண சோதனை செய்வதற்கு முன்னே உள்ள பிந்துக்களைத் திரிகோண சோதனை செய்த பிறகு கூட வந்ததாகப் பாவித்துக்கொள்ளவும்.

உதாரணம்—உதாரணமாக 1-வது அத்தியாயம் 29-வது அயிட்டத்தில் சனியின் அஷ்டக வர்க்கத்தில் கடகம், விருச்சிகம், மீனம் என்ற திரிகோண ராசிகளில் முறையே 4, 0, 7 பிந்துக்கள் இருக்கின்றன. இங்கு ஏதாவது ஒரு ராசியாகிய விருச்சிகத்தில் பூஜ்யபிந்து இருப்பதால் சோதனை செய்யாமல் கடகத்தில் 4-ம், விருச்சிகத்தில் பூஜ்யமும், மீனத்தில் 7-ம் திரிகோண சோதனை செய்த பிறகு கூட வந்ததாகப் பாவித்துக்கொள்ளவும்.

விதி நெ. 4—திரிகோண ராசிகள் மூன்றில் ஏதாவது இரண்டு ராசிகளில் பிந்து இல்லாமல் பூஜ்யமாகவிருந்தால் மூன்ருவது ராசியிலுள்ள பிந்தை எடுத்துப்போடவும். அதாவது திரிகோண சோதனை செய்த பிறகு மூன்று ராசிகளிலும் பிந்துக்கள் பூஜ்யமாக வரும்.

உதாரணம்—உதாரணமாக ஒரு ஜாதகத்தில் சூரியன் அஷ்டக வர்க்கத்தில் மேஷத்தில் பூஜ்யமும், சிம்மத்தில் 3-ம், தனுசில் பூஜ்யமும் இருந்தால் சிம்மத்திலுள்ள 3-ஐயும் எடுத்துப்போட மேஷத்தில் பூஜ்யமும், சிம்மத்தில் பூஜ்யமும் தனுசில் பூஜ்யமும் திரிகோண சோதனை செய்த பிறகு வரும்.

விதி நெ. 5—திரிகோண ராசிகள் மூன்றிலும் பிந்துக்கள் சமமாகவிருந்தால் மூன்று ராசிகளிலுமுள்ள பிந்துக்களையும் எடுத்துவிடவும். அதாவது திரிகோண சோதனை செய்த பிறகு மூன்று ராசிகளிலும் பிந்துக்கள் பூஜ்யமாக வரும்.

உதாரணம்—உதாரணமாக 1-வது அத்தியாயத்தில் 28-வது அயிட்டத்தில் சுக்கிரன் அஷ்டக வர்க்கத்தில் திரிகோண ராசிகளாகிய கடகத்தில் 4-ம், விருச்சிகத்தில் 4-ம், மீனத்தில் 4-ம் ஆக இம் மூன்று திரிகோண ராசிகள் மூன்றிலும் பிந்துக்கள் சமமாக விருத்தலால், இம் மூன்று

ராசிகளிலுமுள்ள பிந்துக்களை எடுத்துவிடவும். இப்படிச் செய்ய கடகத்தில் பூஜ்யமும், விருச்சிகத்தில் பூஜ்யமும், மீனத்தில் பூஜ்யமும் திரிகோண சோதனை செய்தபிறகு வரும்.

விதி நெ. 6—திரிகோண ராசிகள் மூன்றிலும் பிந்துக்கள் பூஜ்யமாக விருந்தால் திரிகோண சோதனை செய்ய வேண்டியதில்லை. இந்த 6-வது விதி 5-வது விதியைப் போன்றது.

முக்கிய குறிப்பு:—இந்த 1-வது வழியைத் தான் பெரும்பானமையோர் அனுஷ்டித்து வருகின்றார்கள் என்று அறியவும்.

2-வது வழி

சோதனை விதிகள்

அயிட்டம் நெ. 4 :—

விதி நெ. 1—திரிகோண ராசிகள் மூன்றிலும் பிந்துக்கள் இருந்து இவைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தால் (அதாவது மூன்று ராசிகளிலும் பிந்துக்கள் இருந்து இம் மூன்று பிந்துக்களும் வெவ்வேருக இருந்தால்) மிகவும் சிறியதாயிருக்கின்ற பிந்துவின் எண்ணை மூன்று ராசிகளிலுமுள்ள எண்ணிலிருந்து கழித்து வரும் மிச்சத்தை அந்தந்த ராசியில் போடவும். இப்படிச் செய்ய மிகவும் சிறிய பிந்து உள்ள ராசியில் பிந்து பூஜ்யமாக வரும்.

உதாரணம்—உதாரணமாக 1-வது அத்தியாயம் 27-வது அயிட்டத்திலுள்ள குருவின் அஷ்டக வர்க்கத்தை எடுத்துக்கொள்ளவும். இதில் ரிஷப, கன்னி, மகரம் என்ற திரிகோண ராசிகளில் 4, 1, 6 என்ற எண்கள் முறையே இருக்கின்றன. இவைகள் மூன்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. இவைகளில் 1 என்பது மிகவும் சிறியது. ஆகையால் இந்த ஒன்றை 4, 1, 6-ல் இருந்து கழிக்க 3, 0, 5 வரும்; ஆகையால் ரிஷபத்தில் 3-ம், கன்னியில் 0-மும் மகரத்தில் 5-ம் திரிகோண சோதனை செய்த பிறகு வரும். இவ்விதமாகவே மிதுனத்தில் 1-ம், துலாத்தில், 2-ம், கும்பத்தில் பூஜ்யமும் குரு அஷ்டக வர்க்கத்தில் வரும்.

விதி நெ. 2—திரிகோண ராசிகள் மூன்றில் இரண்டு ராசியில் பிந்துக்கள் சமமாக விருந்து ஒரு ராசியில் பிந்து வேறுக விருந்தால் மேலே ஓராவது விதியில் சொல்லியபடி செய்யவும்.

உதாரணம்—உதாரணமாக 1-வது அத்தியாயம், 27-வது அயிட்டத்தில் குருவின் அஷ்டகவர்க்கத்தில் மேஷத்தில் 5-ம் சிம்மத்தில் 5-ம் தனுசில் 1-ம் இருக்கின்றன. இவைகளை முன்போல சோதனை செய்ய, அதாவது மிகவும் சிறியதாயுள்ள 1-யை, 5, 5, 1 என்பதிலிருந்து கழிக்க முறையே 4, 4, 0-ம் வரும். ஆகையால் மேஷத்தில் 4-ம் சிம்மத்தில் 4-ம், தனுசில் பூஜ்யமும் திரிகோண சோதனை செய்த பிறகு வரும்.

விதி நெ. 3—திரிகோண ராசிகள் மூன்றில் ஏதாவது ஒரு ராசியில் பிந்து இல்லாமல் பூஜ்யமாக விருந்தால், திரிகோண சோதனை செய்ய வேண்டியதில்லை; அதாவது இருக்கின்ற பிந்துக்களை அப்படியே வைத்துக்கொள்ளவும். அதாவது திரிகோண சோதனை செய்வதற்கு முன்னே உள்ள பிந்துக்களைத் திரிகோண சோதனை செய்தபிறகு கூட வந்ததாகப் பாவித்துக்கொள்ளவும்.

உதாரணம்—உதாரணமாக 1-வது அத்தியாயம், 29-வது அயிட்டத்தில் சனியின் அஷ்டக வர்க்கத்தில் கடகம், விருச்சிகம், மீனம் என்ற திரிகோண ராசிகளில் முறையே 4, 0, 7 பிந்துக்கள் இருக்கின்றன. இங்கு ஏதாவது ஒரு ரரசியாகிய விருச்சிகத்தில் பூஜ்ய பிந்து இருப்பதால் சோதனை செய்யாமல் கடகத்தில் 4-ம் விருச்சிகத்தில் பூஜ்யமும், மீனத்தில் 7-ம் திரிகோண சோதனை செய்த பிறகு கூட வந்ததாக பாவித்துக்கொள்ளவும்.

விதி நெ. 4—திரிகோண ராசிகள் மூன்றில் ஏதாவது இரண்டு ராசிகளில் பிந்து இல்லாமல் பூஜ்யமாக விருந்தால் மூன்ருவது ராசியிலுள்ள பிந்தை எடுத்துப்போடவும். அதாவது திரிகோண சோதனை செய்த பிறகு மூன்று ராசிகளிலும் பிந்துக்கள் பூஜ்யமாக வரும்.

உதாரணம்—உதாரணமாக ஒரு ஜாதகத்தில் சூரியன் அஷ்டக வர்க்கத்தில் மேஷத்தில் பூஜ்யமும், சிம்மத்தில் 3-ம், தனுசில் பூஜ்யமும் இருந்தால் சிம்மத்திலுள்ள 3-யும் எடுத்துப்போட மேஷத்தில் பூஜ்யமும், சிம்மத்திலும் பூஜ்யமும், தனுசில் பூஜ்யமும் திரிகோண சோதனை செய்த பிறகு வரும்.

விதி நெ 5—திரிகோணராசிகள் மூன்றிலும் பிந்துக்கள் சமமாக விருந்தால், மூன்று ராசிகளிலுமுள்ள பிந்துக்களையும் எடுத்துவிடவும் அதாவது திரிகோண சோதனை செய்த பிறகு மூன்று ராசிகளிலும் பிந்துக்கள் பூஜ்யமாக வரும்.

உதாரணம்—உதாரணமாக 1-வது அத்தியாயத்தில் 28-வது அயிட்டத்தில சுக்கிரன் அஷ்டகவர்க்கத்தில் திரிகோண ராசிகளாகிய கடகத்தில் 4-ம், மீனத்தில் 4-ம் ஆக இம் மூன்று திரிகோண ராகிகள் மூன்றிலும் பிந்துக்கள் சமமாக விருத்தலால், இம் மூன்று ராசிகளிலுமுள்ள பிந்துக்களை எடுத்துவிடவும். இப்படிச் செய்யக் கடகத்தில் பூஜ்யமும், விருச்சிகத்தில் பூஜ்யமும், மீனத்தில் பூஜ்யமும், திரிகோண சோதனை செய்த பிறகு வரும்.

விதி நெ. 6—திரிகோண ராசிகள் மூன்றிலும் பிந்துக்கள் பூஜ்யமாக விருந்தால் திரிகோண சோதனை செய்ய வேண்டியதில்லை. இந்த 6-வது விதி 5-வது விதியைப் போன்றது.

முக்கிய குறிப்பு:—இந்த 2-வது வழியைச் சிறுபான்மையோர் அனுஷ்டித்து வருகின்றார்கள் என்று அறியவும்.

அயிட்டம் நெ. 5:—1-வது, 2-வது வழிகளுக்குள் உள்ள வித்தியாசம்—1-வது, 2-வது வழிகளில் கொடுத்துள்ள ஆறு விதிகளையும் ஒற்றுப்பார்ப்போமானால் இவ்விரண்டு வழிகளிலும் 1-வது, 2-வது விதிகள் மாத்திரம் வித்தியாசப்படுகின்றன வென்றும், மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது விதிகள் வித்தியாசப்படாமல் ஒன்றாக விருக்கின்றன என்றும் ஏற்படும்.

ஏகாதிபத்திய சோதனை

அயிட்டம் நெ. 6:—திரிகோண சோனையைச் செய்த பிறகு வருகின்ற பிந்துக்களுக்கு அடியிற்கண்டபடி ஏகாதிபத்திய சோதனை செய்யவேண்டும்.

சூரியன், சந்திரன் தவிர மற்றக் கிரகங்களாகிய அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்களில் ஒவ்வொருவருக்கும் இரண்டு இரண்டு இராசிகள் இருக்கின்றன. அங்காரகனுக்கு மேஷம் விருச்சிகமும், புதனுக்கு மிதுனம் கன்னியும், குருவுக்கு தனுசு மீனமும், சுக்கிரனுக்கு ரிஷப துலாமும், சனிக்கு மகர கும்பமும்

ஆகிய இவ்விதமான ஜோடி ராசிகள் இருக்கின்றன. இவ்விதமான ஜோடி ராசிகளுக்கு அதிபதி ஒரே கிரகம் என்றறியவும். அதாவது ஒரே கிரகத்திற்குரிய இரண்டு ராசிகளையும் ஒரு ஜோடியிற் சேர்ந்த ராசிகள் அல்லது "ஜோடி ராசிகள்" என்று சொல்லுவோம். ஏகாதிபத்திய சோதனை செய்யும்போது ஜோடி ராசிகளை எடுத்துக் கொண்டு அவைகளிலுள்ள பிந்துக்களைக் கவனிக்க வேண்டும்.

அயிட்டம் நெ. 7 :—

ஏகாதிபத்திய சோதனை செய்ய விதிகள்

விதி நெ. 1—ஒவ்வொரு கிரகத்திற்கும் வந்த பின்னுஷ்டக வர்க்கத்திலுள்ள பிந்துக்களுக்குத் திரிகோண சோதனை செய்த பிறகு அந்தந்த ஜோடி ராசிகளில் வந்த பிந்துக்களை எடுத்துக்கொண்டு அவைகளுக்கு ஏகாதிபத்திய சோதனை செய்யவும். அதாவது திரிகோண சோதனை செய்த பிறகே தான் ஏகாதிபத்திய சோதனை செய்யவேண்டும்.

[கிரகம் ஜோடி ராசிகளில் இருக்கின்றதா இல்லையா என்று பார்க்கும்போது நவக்கிரகங்களில் இராகு கேதுக்களைக் கவனிக்கக்கூடாது—அதாவது இராகு கேதுக்களை விட்டுவிடவே வேண்டும். மற்ற கிரகங்களாகிய சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய இவ் வேழு கிரகங்களை மாத்திரம் கவனிக்கவேண்டும்.]

A. ஒரு ஜோடி ராசிகள் இரண்டிலும் கிரகமிருக்கும்போது

விதி நெ. 2—இரண்டு ராசியிலும் பிந்து ஏற்றக் குறைச்சலாக விருந்தால் சோதனை இல்லை.

விதி நெ. 3—இரண்டு இராசியிலும் பிந்து சமமாக விருந்தால் சோதனை இல்லை.

விதி நெ. 4—ஒரு ராசியில் பிந்து இருந்து இன்னொரு ராசியில் பிந்து பூஜ்யமானால் சோதனை இல்லை.

விதி நெ. 5—இரண்டு ராசியிலும் பிந்து பூஜ்யமாக விருந்தால் சோதனை இல்லை.

குறிப்பு :—அதாவது ஒரு ஜோடியின் இரண்டு ராசிகளிலும் கிரகம் இருந்து பிந்துக்கள் எவ்விதமாக இருந்த போதிலும் பூஜ்யமாக இருந்தபோதிலும் சோதனை இல்லை என்று அர்த்தம்.

B. ஒரு ஜோடி ராசிகளில் ஏதாவது ஒன்றில் கிரகமிருந்து மற்ருென்றில் கிரக மில்லாமல் இருக்கும்போது

விதி நெ. 6—கிரக மிருக்கும் ராசியிலுள்ள பிந்து கிரக மில்லாத ராசியிலுள்ள பிந்தைவிட அதிகமாக விருந்தால், கிரக மில்லாத ராசியிலுள்ள பிந்தை பூராகவும் எடுத்து விடவும். அதாவது கிரக மில்லாத ராசியிலுள்ள பிந்தைப் பூஜ்யமாக்கவும், கிரக மிருக்கின்ற ராசியின் பிந்தை ஒன்றுஞ் செய்யாமல் அப்படியே வைத்துக் கொள்ளவும்.

விதி நெ. 7—கிரக மிருக்கும் ராசியிலுள்ள பிந்து, கிரக மில்லாத ராசியிலுள்ள பிந்துக்குச் சமமாக விருந்தால், கிரக மில்லாத ராசியிலுள்ள பிந்தை மாத்திரம் பூராகவும் முன்போல எடுத்து விடவும்.

விதி நெ. 8—கிரகமிருக்கும் ராசியிலுள்ள பிந்து, கிரக மில்லாத ராசியிலுள்ள பிந்தைவிடக் குறைந்திருந் தால், இரண்டையும் சமப்படுத்தவும், அதாவது கிரக மில்லாத ராசியிலுள்ள பிந்தை மாத்திரம் கிரக மிருக்கும் ராசியிலுள்ள பிந்துக்குச் சமமாக வரும்படி குறைக்கவும், கிரக மிருக்கின்ற ராசியிலுள்ள பிந்தை ஒன்றுஞ் செய்யாமல் அப்படியே வைத்துக் கொள்ளவும்.

விதி நெ. 9—கிரகம் இருக்கும் ராசியில் பிந்து பூஜ்ய மாகவிருந்து கிரக மில்லாத ராசியில் பிந்து இருந்தால் சோதனை இல்லை.

விதி நெ. 10—கிரகம் இருக்கும் ராசியில் பிந்து இருந்து கிரகம் இல்லாத ராசியில் பிந்து பூஜ்யமாக இருந்தால் சோதனை இல்லை.

விதி நெ. 11—கிரகம் இருக்கும் ராசியில் பிந்து பூஜ்ய மாகவிருந்து கிரக மில்லாத ராசியிலும் பிந்து பூஜ்யமாக இருந்தால் சோதனை இல்லை.

குறிப்பு:—ஒரு ராசியிலாகிலும் இரண்டு ராசியி லாகிலும் பூஜ்யம் இருந்தால் சோதனை இல்லை.

C. ஒரு ஜோடி ராசிகள் இரண்டிலும் கிரக மில்லாமலிருக்கும்போது

விதி நெ. 12—இரண்டு ராசிகளிலும் பிந்து ஏற்றக் குறைச்சலாக விருந்தால் குறைந்தபடி சமமாக்கவும்; அதாவது அதிகமாக விருக்கின்ற பிந்துவைக் குறைந்திருக் கின்ற பிந்துக்குச் சரியாகச் செய்யவும்.

விதி நெ. 13—இரண்டு ராசிகளிலும் பிந்துக்கள் சமமாகவிருந்தால் இரண்டு பிந்துக்களேயும் எடுத்துப் போடவும். அதாவது இரண்டு பிந்துக்களேயும் பூஜ்யமாக் கவும்.

விதி நெ. 14—ஏதாவது ஒரு ராசியில் பிந்து பூஜ்ய மாக விருந்தால் சோதனே இல்லே.

விதி நெ. 15—இரண்டு ராசிகளிலும் பிந்து பூஜ்ய மாக விருந்தால் சோதனே இல்லே.

குறிப்பு :— ஒரு ராசியிலாகிலும் இரண்டு ராசிகளிலா கிலும் பிந்து பூஜ்யமாக விருந்தால் சோதனே இல்லே.

நினைவுக் குறிப்பு

அயிட்டம் நெ. 8 :

(1) மேலே சொல்லிய A, B, C என்ற மூன்று வகைகளி லும் ஏதாவது ஒரு ராசியிலாகிலும், அல்லது இரண்டு ராசி களிலாகிலும், பிந்து பூஜ்யமாக விருந்தால் சோதனே இல்லே என்று ஞாபகம் வைத்துக்கொள்ளவும்.

(2) இரண்டு ராசிகளிலும் கிரகம் இருந்தால் பிந்துக் கள் எவ்விதமாக விருந்தபோதிலும் சோதனே இல்லே.

(3) கடகம், சிம்மம் இவைகளுக்குச் சோதனேயே கிடையாது. அதாவது இவைகளிலுள்ள பிந்துக்களே ஒன்றுஞ் செய்யாமல் அப்படியே வைத்துக்கொள்ளவும்.

ஏகாதிபத்திய சோதனே செய்யும்போது பலவிதமான சந்தேகங்கள் ஏற்படுவது சகஜமானதாலும் இந்த விதி களேச் சுருக்கிச் சொன்னுல் பலவித சந்தேகங்கள் ஏற்படு மாதலாலும், விதிகளே எல்லாம் விபரமாகவும் எவ்வித மான சந்தேகங்களும் கூடிய மட்டும் ஏற்படாமலிருக்கும்படி யாகவும் விஸ்தாரமாக்கிச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதைப் பொறுத்துக்கொள்ளவும்.

அயிட்டம் நெ. 9

உதாரணங்கள்

A. திரிகோண சோதனைக்கும் ஏகாதிபத்திய சோதனைக்கும் உதாரணங்கள்

நாம் எடுத்துக்கொண்ட உதாரண ஜாதகத்திற்கு சூரியாதி சனி வரையிலுமுள்ள ஏழு கிரகங்களுக்கும் பின்னஷ்டகவர்க்கம், ஓராவது வழிப்பிரகாரம் திரிகோண சோதனை ஏகாதிபத்திய சோதனை இவைகளை ஒரே இடத்தில் சௌகரியத்திற்காகச் செய்து காட்டுவோம்.

சூரியன் அஷ்டவர்க்கம்

அத்தியாயம் நெ. 1— அயிட்டம் நெ. 24

4	குரு 4	4	4	2	4	2	2	2	4	0	0
3	சூரியன் பின்னஷ்டக வர்க்கம்		சந் 5	2	திரிகோண சோதனை		2	0	ஏகாதிபத்திய சோதனை		2
2	13-வது கட்டம்		5	2	14-வது கட்டம்		4	0	15-வது கட்டம்		4
6	சனி 2	ல-அ-பு சு 2	சூ 7	4	2	2	2	2	2	2	2

திரிகோண சோதனை—இங்கு அத்தியாயம் 2, அயிட்டம் 3, விதி 1-பிரகாரம் செய்யப் பட்டது.

ஏகாதிபத்திய சோதனை—(1) மேஷ விருச்சிக ஜோடி ராசிகள் இரண்டிலும் குரு, சனி என்ற கிரகங்கள் இருக்கின்றன. ஆகையால் அத்தியாயம் 2, அயிட்டம் 7, விதி 2 பிரகாரம் சோதனை இல்லை. ஆகையால் 14-வது கட்டத்தில் மேஷத்தில் 4-ம் விருச்சிகத்தில் 2-ம் உள்ளதை அப்படியே மேஷத்தில் 4-ம், விருச்சிகத்தில் 2-ம், 15-வது கட்டத்தில் எழுதவும்.

(2) ரிஷப-துலா ஜோடி ராசிகளில் ஒன்றில் அதாவது துலாத்தில் கிரகமிருக்கின்றது; மற்றொன்றில் அதாவது ரிஷபத்தில் கிரகமில்லை. ஆகையால் 14-வது கட்டத்தில் ரிஷபத்தில் 2-ம், துலாத்தில் 2-ம் ஆக சமமாயிருப்பதால் அத்தியாயம் 2, அயிட்டம் 7, விதி 7 பிரகாரம் ரிஷபத்திலுள்ள பிந்தை எடுத்துவிட்டு, 15-வது கட்டத்தில் ரிஷபத்தில் பூஜ்யமும் துலாத்தில் 2-ம் எழுதவும்.

(3) மிதுன-கன்னியா ஜோடி ராசிகளில் கன்னியில் கிரகமிருந்து மிதுனத்தில் கிரகமில்லாததால் அத்தியாயம் 2, அயிட்டம் 7, விதி 7 பிரகாரம் கன்னியில் 2-ம் மிதுனத்தில் பூஜ்யமும் 15-வது கட்டத்தில் எழுதவும். இது மேலே சொல்லிய ரிஷப-துலா ஜோடியைப் போன்றது.

(4) தனசு-மீன ஜோடி ராசிகளில் இரண்டிலும் கிரகமில்லாமலிருந்து 14-வது கட்டத்தில் தனுசில் 4 பிந்தும், மீனத்தில் 2-பிந்தும் இருப்பதால் அத்தியாயம் 2, அயிட்டம் 7, விதி 12 பிரகாரம் தனுசில் 2-ம், மீனத்தில் 2-ம், 15-வது கட்டத்தில் எழுதவும்.

(5) மகர-கும்ப ஜோடி ராசிகளில் இரண்டிலும் கிரகமில்லாமலிருந்து 14-வது கட்டத்தில் மகரத்தில் 2-ம், கும்பத்தில் 2-ம் ஆக சமமாகவிருப்பதால் அத்தியாயம் 2, அயிட்டம் 7, விதி 13 பிரகாரம் மகர-கும்பத்திலுள்ள பித்துக்களை எடுத்துவிட்டு 15-வது கட்டத்தில் மகரத்தில் பூஜ்யமும், கும்பத்தில் பூஜ்யமும் எழுதவும்.

(6) கடகம்-சிம்மம் இவைகளுக்கு அத்தியாயம் 2, அயிட்டம் 8, (3) பிரகாரம் சோதனை இல்லை. ஆகையால் 14-வது கட்டத்தில் கடகத்திலுள்ள 2-ஐ 15வது கட்டத்தில் கடகத்தில் எழுதவும்; 14-வது கட்டத்தில் சிம்மத்திலுள்ள 4-ஐ 15-வது கட்டத்தில் சிம்மத்தில் எழுதவும்.

அயிட்டம் நெ. 10:— இவ்விதமாக 2-வது அத்தியாயம் நெ. 2, 3-வது 7-வது, 8-வது அயிட்டங்களில் கொடுத்துள்ள விதிகள் பிரகாரம் மற்றக் கிரகங்களுக்கும் திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை செய்யவேண்டியது. இவ்

விதமாகச் செய்ய ஏழு கிரகங்களுக்கும் அடியிற்கண்டபடி திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை செய்த பிறகு பிந்துக்கள் வரும். இவ்விதமாகச் சோதனை செய்த பிறகு ஏகாதிபத்திய சோதனை கட்டங்களில் ஒவ்வொரு ராசியிலும் வரும் பிந்துக்களுக்குச் சோத்தியப் பரல் அல்லது சோத்திய பிந்து என்று பெயர். இவ்விதமாக ஒரு கிரகத்திற்கு ஏகாதிபத்திய சோதனை கட்டத்தில் பன்னிரண்டு ராசிகளிலும் வருகின்ற சோத்திய பிந்துக்களைக் கூட்ட வருகின்ற மொத்தத் தொகைக்கு அந்தக் கிரகத்தின் சோத்திய பிண்டம் என்று பெயர்.

சூரியன் அஷ்டக வர்க்கம்

அத்தியாயம் நெ. 1— அயிட்டம் நெ. 24.

4	குரு 4	4	4	2	4	2	2	2	4	0	0
3	சூரியன் பின்னஷ்டக வர்க்கம்		சந் 5	2	சூரியன் திரிகோண சோதனை		2	0	சூரியன் ஏகாதிபத்திய சோதனை		2
2	16-வது கட்டம்		5	2	17-வது கட்டம்		4	0	18-வது கட்டம்		4
6	சனி 2	ல-அ-பு சு 2	சூ 7	4	2	2	2	2	2	2	2

குறிப்பு:—16-வது, 17-வது, 18-வது கட்டங்கள், 13-வது, 14-வது, 15-வது கட்டங்களை இங்கு சௌகரியத்திற்காக எடுத்து எழுத வந்தவைகளாகும்.

அத்தியாயம் நெ. 1—அயிட்டம் நெ. 25:—சந்திரன் அஷ்டக வர்க்கம்.

5	குரு 6	2	3	3	4	2	2	3	4	0	0
5	சந்திர பின்ஞஷ்டக வர்க்கம்		சந் 7	2	சந்திரன் திரிகோண சோதனை		3	0	சந்திர ஏகாதிபத்திய சோதனை		3
5	19-வது கட்டம்		4	2	20-வது கட்டம்		4	0	21-வது கட்டம்		4
5	சனி 3	ல-அ-பு சு 2	சூரி 2	4	3	2	2	3	7	ல 6	1

அத்தியாயம் நெ. 1—அயிட்டம் நெ. 23:—அங்காரகன் அஷ்டக வர்க்கம்.

4	குரு 1	4	2	3	1	3	2	1	1	2	0
4	அங்காரகன் பின்ஞஷ்டக வர்க்கம்		சந் 4	2	அங்காரகன் திரிகோண சோதனை		3	2	அங்காரகன் ஏகாதிபத்திய சோதனை		3
3	22-வது கட்டம்		5	3	23-வது கட்டம்		1	2	24-வது கட்டம்		1
3	சனி 3	ல-அ-பு சு 2	சூ 4	1	3	2	3	1	3	2	3

அத்தியாயம் நெ. 1—அயிட்டம் நெ. 26 :—புதன் அஷ்டக வர்க்கம்.

3	குரு 2	6	4	3	2	3	4	2	2	0	3
6	புதன் பின்னஷ்டக வர்க்கம்		சந் 5	4	புதன் திரிகோண சோதனை		3	3	புதன் ஏகாதிபத்திய சோதனை		3
4	25-வது கட்டம்		7	3	26-வது கட்டம்		2	2	27-வது கட்டம்		2
4	சனி 5	ல-அ-பு சு 5	கு 3	2	3	4	3	2	3	4	3

அத்தியாயம் நெ. 1—அயிட்டம் நெ. 27 :—குரு அஷ்டக வர்க்கம்.

6	குரு 5	4	5	6	1	4	4	1	1	0	1
4	குரு பின்னஷ்டக வர்க்கம்		சந் 6	4	குரு திரிகோண சோதனை		6	1	குரு ஏகாதிபத்திய சோதனை		6
6	28-வது கட்டம்		5	1	29-வது கட்டம்		1	1	30-வது கட்டம்		1
1	சனி 7	ல-அ-பு சு 6	கு 1	1	6	4	1	1	6	4	1

அத்தியாயம் நெ. 1—அயிட்டம் நெ. 28 :—சுக்கிரன் அஷ்டக வர்க்கம்.

4	குரு 1	3	6	0	1	3	3	0	1	0	0
7	சுக்கிரன் பின்னஷ்டக வர்க்கம்		சந் 4	3	சுக்கிரன் திரிகோண சோதனை		0	0	சுக்கிரன் ஏகாதிபத்திய சோதனை		0
4	31-வது கட்டம்		8	3	32-வது கட்டம்		1	0	33-வது கட்டம்		1
5	சனி 4	ல-அ-பு சு 3	சூரி 3	1	0	3	3	1	0	3	3

அத்தியாயம் நெ. 1—அயிட்டம் நெ 29 :—சனி அஷ்டக வர்க்கம்.

7	குரு 2	2	2	7	2	2	0	2	2	2	0
2	சனி பின்னஷ்டக வர்க்கம்		சந் 4	0	சனி திரிகோண சோதனை		4	0	சனி ஏகாதிபத்திய சோதனை		4
2	34-வது கட்டம்		5	2	35-வது கட்டம்		2	2	36-வது கட்டம்		2
4	சனி 0	ல-அ-சு பு 2	சு 7	2	0	0	2	2	0	0	2

சர்வாஷ்டக வர்க்கம்

அத்தியாயம் நெ. 1:—அயிட்டம் நெ. 30:—

33	குரு 21	25	26	24	21	25	22	21	21	22	0
31	சர்வாஷ்டக வர்க்கம் சமுதாயம் 37-வது கட்டம்		சந் 35	22	சர்வாஷ்டக வர்க்கம் திரிகோண சோதனை 38-வது கட்டம்		24	22	சர்வாஷ்டக வர்க்கம் ஏகாதிபத்திய சோதனை 39-வது கட்டம்		24
26			39	25			21	22			21
28	சனி 24	ல-அ-பு சு 22	சூ 27	21	24	22	25	21	24	22	25

இராசி குணகாரம்

அயிட்டம் நெ. 11:—ஒரு கிரகத்திற்கு ஏகாதிபத்திய சோதனை செய்த பிறகு அந்தந்த ராசியில் வந்த பிந்தை அந்தந்த ராசிக்குரிய இராசிமான எண்ணால் பெருக்கவும். இப்படிச் செய்ய வருகின்ற 12 தொகைகளின் மொத்தத் தொகைக்கு இராசி குணகாரம் என்று பெயர்.

இராசிமான எண்கள்

இராசி	இராசிமான எண்	இராசி	இராசிமான எண்
மேஷத்திற்கு	7	துலாத்திற்கு	7
ரிஷபத்திற்கு	10	விருச்சிகத்திற்கு	8
மிதுனத்திற்கு	8	தனுசிற்கு	9
கடகத்திற்கு	4	மகரத்திற்கு	5
சிம்மம்	10	கும்பத்திற்கு	11
கன்னி	5	மீனத்திற்கு	12

உதாரணமாகச் சூரியனுடைய இராசி குணகாரத்தையும் சர்வாஷ்டக வர்க்க இராசி குணகாரத்தையும் போடுவோம்.

சூரியன் அஷ்டக வர்க்கம்

உதாரணம் 1

	மே	ரிஷ	மிது	கட	சிம்	கன்	துலா	விரு	தனு	மக	கும்	மீன
(1) ஏகாதிபத்திய பிந்து	...4	0	0	2	4	2	2	2	2	0	0	2
(2) இராசிமான எண்	7	10	8	4	10	5	7	8	9	5	11	12
(3) பெருக்க வருவது இராசி குணகாரம்	...28	0	0	8	40	10	14	16	18	0	0	24

இங்கு பெருக்கி வந்த 28, 0, 0, 8, 40, 10, 14, 16, 18, 0, 0, 24 ஆகிய இவைகளைக் கூட்ட 158 வரும். இந்த 158 தான் சூரியனுடைய இராசி குணகாரமாகும்.

குறிப்பு:—பூஜ்யத்தை ஒரு எண்ணால் பெருக்கப் பூஜ்யமே வரும். இவ்விதமாகவே மற்ற ஆறு கிரகங்களின் இராசி குணகாரத்தைக் கணிக்கவும்.

சர்வாஷ்டக வர்க்கம்

உதாரணம் 2

	மே	ரிஷ	மிது	கட	சிம்	கன்	துலா	விரு	தனு	மக	கும்	மீன
(1) ஏகாதிபத்திய பிந்து ...	21	22	0	24	21	25	22	24	21	22	22	21
(2) இராசிமான எண் ...	7	10	8	4	10	5	7	8	9	5	11	12
(3) பெருக்க வருவது இராசி குணகாரம் ...	147	220	0	96	210	125	154	192	189	110	242	252

இங்கு பெருக்கி வந்த பன்னிரண்டு தொகைகளையும் முன்போலக் கூட்ட 1937 வரும். இந்த 1937 தான் இராசி குணகாரமாகும்.

கிரக குணகாரம்

அயிட்டம் நெ 12: ஒரு கிரகத்திற்கு ஏகாதிபத்திய சோதனை செய்த பிறகு அந்தந்த ராசியில் வந்த பிந்தை அந்த ராசியிலுள்ள கிரகமான எண்ணால் பெருக்கவும். இப்படிச் செய்ய வருகின்ற 12 ராசிகளிலுமுள்ள எண்களின் மொத்தத் தொகைக்குக் கிரககுணகாரம் என்று பெயர்.

கிரகமான எண்கள்

கிரகம்	கிரகமான எண்	கிரகம்	கிரகமான எண்
சூரியன்	5	குரு	10
சந்திரன்	5	சுக்கிரன்	7
அங்காரகன்	8	சனி	5 ஆகும்.
புதன்	5		

உதாரணமாகச் சூரியனுடைய கிரக குணகாரத்தையும் சர்வாஷ்டக வர்க்கத்திய கிரக குணகாரத்தையும் போடுவோம்:

சூரியன் அஷ்டக வர்க்கம்

உதாரணம் 1.

	மே	ரிஷ	மிது	கட	சிம்	கன்	துலா	விரு	தனு	மக	கும்	மீன
(1) ஏகாதிபத்திய பிந்து ...	4	0	0	2	4	2	2	2	2	0	0	2
(2) கிரகமான எண்.	10	0	0	5	0	5	அ 8 பு 5 சு 7	5	0	0	0	0
(3) பெருக்க வருவது கிரக குணகாரம் ...	40	0	0	10	0	10	அ 16 பு 10 சு 14	10	0	0	0	0

துலாத்தில் அ, பு, சு என்ற மூன்று கிரகங்கள் இருப்பதால் துலாத்திலுள்ள பிந்தாகிய 2 பிந்தை அந்தந்த கிரகங்களின் கிரகமானமாகிய 8, 5, 7 ஆல் தனித்தனியாகப்பெருக்க 16, 10, 14 துலாத்தில் வரும். இப்படிப் பெருக்கி வந்த தொகைகளை எல்லாம் கூட்ட 110 வரும். ஆகையால் இந்த 110 தான் சூரியனுடைய கிரக குணகாரமாகும். இவ்விதமாகவே மற்ற ஆறு கிரகங்களின் கிரக குணகாரத்தைக் கணிக்கவும்.

சர்வாஷ்டக வர்க்கம்

உதாரணம் 2.

	மே	ரிஷ	மிது	கட	சிம்	கன்	துலா	விரு	தனு	மக	கும்	மீன
(1) ஏகாதிபத்திய பிந்து ...	21	22	0	24	21	25	22	24	21	22	22	21
(2) கிரகமான எண் ...	10	0	0	5	0	5	அ8 பு5 சு7	5	0	0	0	0
(3) பெருக்க வருவது ...	210	0	0	120	0	125	அ176 பு110 சு154	120	0	0	0	0

இப்படிப் பெருக்கி வந்த தொகைகளை எல்லாம் கூட்ட 1015 வரும். ஆகையால் இந்த 1015 தான் சர்வாஷ்டக வர்க்க கிரக குணகாரமாகும்.

அயிட்டம் நெ. 13 — இதற்கு மேல் (அதாவது இராசி குணகாரம், கிரக குணகாரம் கணித்த பிறகு) அஷ்டக வர்க்கம் பற்றிச் சொல்லுங் கிரந்தங்களில் அஷ்டக வர்க்கக் கணிதம் பிரகாரம் ஜாதகருடைய ஆயுளை நிர்ணயிக்கும் வழியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ் விதமாக ஆயுளை நிர்ணயிக்கும் வழிகள் பலவிதமாகவும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாகவும் இருப்பதாலும், பூர்வீக கிரந்த கர்த்தர்களே ஒன்றுக்கொன்று வித்தியாசமாகத் தமக்குள் அபிப் பிராயப் பட்டிருப்பதாலும் இவர்களே ஆயுளை அஷ்டக வர்க்க வழியால் கணிக்கும் மார்க்கத்தில்

அதிருப்தி அடைந்திருப்பதாக நன்ருக விளங்கும். மேலும் அனுபவத்தில் அஷ்டக வர்க்கத்தின் உதவியால் எந்த வழியாலாகிலும் ஆயுளைக் கணிப்போமாஞல் உண்மையில் அனுபவப்படி சரிப்பட்டு வராமல் அதிக வித்தியாசம் ஏற்படுவதால் அஷ்டக வர்க்க வழிகளில் எந்த வழியையும் ஆயுளைக் கணிக்க உபயோகப்படுத்தி, காலத்தையும் சிரமத்தையும் செலவழிப்பது இவைகளை வீணுக்குவதாகவே ஏற்படும். ஆகையால் ஜோதிடர்கள் தங்களுடைய காலத்தையும் சிரமத்தையும் இவ்விதமாக ஒரு பிரயோஜனமுமில்லாமல் வீணுக்காமல் இருப்பதற்காகவே இப் புத்தகத்தில் அஷ்டகவர்க்கக் கணிதத்தை இத்துடன் பூர்த்தி செய்யப்பட்டது. இனிமேல் அஷ்டக வர்க்கத்தை உபயோகப்படுத்தி பலாபலன்களைச் சொல்லும் விஷயங்களைப் பற்றி இனி பின்னல் வருகின்ற அத்தியாயங்களில் சொல்லப்படும். நாம் இது வரையிலும் இப்புத்தகத்தில் கணித விஷயமாகச் சொல்லி இருப்பவைகளின் உதவியாலும் பின்னல் சொல்லியுள்ள பலாபலன்களைப் பற்றிய விதிகளாலும் பலாபலன்களைச் சொல்லிப் பயன் அடையும்படியாக இப்புத்தகத்தை வாசித்து, இதை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும்படியாக இதை வாசிக்கும் பெரியோர்களையும் சிறியோர்களையும் மிகவும் வணக்கத்துடன் கோரப்படுகிறது.

அயிட்டம் நெ. 14 — இப்புத்தகத்திற்காக உபயோகப் படுத்தப்பட்ட பூர்வீக கிரந்தங்களின் கிரந்த கர்த்தாக்களுக்கும் அவைகளுக்கு வியாக்கியானம் முதலியவைகளை எழுதியுள்ள பெரியோர்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான வந்தனத்தை இதன் வாயிலாக அளிக்கின்றேன். இனிமேல் பலாபலன்களைச் சொல்லுவோம்.

—G. G. ராஜன், B.A. (Maths.)

37—3—1947.

அத்தியாயம் 3

அஷ்டக வர்க்கங்களைக்கொண்டு பலாபலன்கள் அறியும் வகை

பின்னுஷ்டக வர்க்கப் பலன்

அயிட்டம் நெ. 1 : 1-வது அத்தியாயத்தில் கிரகங்களால் உண்டாகும் சுபபல பிந்துக்களைப் பற்றியும், அசுபல ரேகைகளை பற்றியும் நிகர சுபபலம், நிகர அசுப பலம் இவைகளைப் பற்றியும் 14-வது முதல் 17-வது வரையிலுமுள்ள அயிட்டங்களில் சொல்லியிருக்கின்றோம். கிரகங்கள் ஜெனன காலத்தில் தாங்கள் இருக்கின்ற நிலையைக்கூட அனுசரித்துத் தங்களுடைய அஷ்டகவர்க்கத்தில் வருகின்ற நிகர சுப பலத்தை அல்லது நிகர அசுபபலத்தைத் தருகின்றன. ஒரு கிரகம் தன்னுடைய சுவக்ஷேத்திரம், மித்ருக்ஷேத்திரம் அல்லது உப ஜெய ராசியிலிருந்தால் தன்னுடைய அஷ்டக வர்க்கத்தில் ஏற்படும் சுபபலத்தை அதிகப்படுத்தும். ஒரு கிரகம் தன்னுடைய நீச்சராசி, சத்துருராசி அல்லது அப்ஜய ராசிகளிலிருந்தால் தன்னுடைய அஷ்டகவர்க்கத்தில் ஏற்படும் நிகர சுப பலத்தைக் கொடுப்பதில்லை; கெட்ட பலனையே கொடுக்கும். ஒரு கிரகம் வலுவாக இருந்தால் தான் தனக்கு அஷ்டகவர்க்கத்தில் ஏற்படும் நிகர சுபபலத்தைக் கொடுக்கும்; அதாவது ஜெனன காலத்தில் வலுவாய் இருந்தால் தனக்கு அஷ்டக வர்க்கத்தில் ஏற்படும் நிகர சுபபலத்தைக் கொடுக்கும். வலுவாய் இல்லாமல் பலஹீனமாயிருந்தால் தனக்கு அஷ்டகவர்க்கத்தில் ஏற்படும் நிகர சுபபலத்தைக் கொடுக்காது. அது கெட்டஸ்தானங்களில் ஜெனன காலத்தில் இருந்து அதற்குத் தன்னுடைய அஷ்டக வர்க்கத்தில் நிகர அசுப பலம் இருந்தால் இந்த நிகர அசுபபலத்தை அதிகப்படுத்தி, கெட்ட பலனை அதிகமாகக் கொடுக்கும். ஒரு கிரகம் ஜெனன காலத்தில் வலுவாக நல்ல ஸ்தானத்தில் இருந்து அதற்குத் தன்னுடைய அஷ்டக வர்க்கத்தில் நிகர அசுபபலம் வந்தால் அது மொத்தத்தில் சமபலனைக் கொடுக்கும். இவ்விதமாக ஒரு கிரகம் கொடுக்கும் சுப பலன், அசுபபலன் இவைகளை அறியவேண்டும். உப

ஜெயராசிகளையும், அபஜெய ராசிகளையும், லக்கினமும் சந்திரனும் ஜெனன காலத்தில் இருக்கும் ராசிகளிலிருந்து கணக் கிடவேண்டும். உபஜெய ராசி என்பது லக்கினத்தி லிருந்து அல்லது சந்திரனிலிருந்து 3, 6, 10, 11-வது ராசி களாகும்; மற்ற எட்டு ராசிகளும் அபஜய ராசிகளாகும்.

அயிட்டம் நெ. 2: ஒரு பாவம் இருக்கும்படியான ராசியில் ஒரு கிரகத்தின் அஷ்டக வர்க்கத்தில் எட்டு பிந்து இருந்தால் அந்தக் கிரகம் அந்த பாவத்தை விருத்தி யடையும்படியாய்ச் செய்யும், அந்த பாவத்திற்கு நல்ல தைச் செய்யும். (குறிப்பு: 17-வது அயிட்டம் பார்க்கவும்.)

அயிட்டம் நெ. 3: ஒரு பாவம் இருக்கும்படியான ராசியில் கிரகத்தின் அஷ்டக வர்க்கத்தில் 5 பிந்து, 6 பிந்து, 7 பிந்து இருந்தால் அந்த பாவம் நன்மையை அடையும். (குறிப்பு: 17-வது அயிட்டம் பார்க்கவும்.)

அயிட்டம் நெ. 4: ஒரு பாவம் இருக்கும்படியான ராசியில் ஒரு கிரகத்தின் அஷ்டக வர்க்கத்தில் 3 பிந்து, 2 பிந்து, 1 பிந்து இருந்தால் அந்த பாவம் கெடுதியை அடையும். (குறிப்பு: 17-வது அயிட்டம் பார்க்கவும்.)

அயிட்டம் நெ. 5: ஒரு பாவம் இருக்கும்படியான ராசியில் ஒரு கிரகத்தின் அஷ்டக வர்க்கத்தில் 4-பிந்து இருந்தால் அந்த பாவம் நன்மையையாவது அல்லது கெடுதியையாவது அடையாமல் சமமாகவிருக்கும்; அதாவது அது மிஸ்ரமாக விருக்கும். (குறிப்பு: 17-வது அயிட்டம் பார்க்கவும்.)

அயிட்டம் நெ. 6: ஒரு பாவம் இருக்கும்படியான ராசியில் ஒரு கிரகத்தின் அஷ்டக வர்க்கத்தில் பிந்துவே இல்லாமல் இருந்தால் (அதாவது பிந்து பூஜ்யமாகி ரேகை யானது எட்டாகவிருந்தால் அந்த பாவம் ரோகம், அபவாதம், ஆபத்து இவைகளை விளைவிக்கும். (குறிப்பு: 17-வது அயிட்டம் பார்க்கவும்.)

அயிட்டம் நெ. 7: பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒரு கிரகத்திற்கு ஒரு பிந்து வந்தால் அந்தக் கிரகம் நானுவித மான ரோகங்களையும், துக்கங்களையும், ஆபத்துக்களையும் திரவிய நாசத்தையும், அலைச்சலையும் உண்டுபண்ணும்.

அயிட்டம் நெ. 8: பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒரு கிரகத்திற்கு இரண்டு பிந்து வந்தால் அந்தக் கிரகம் இராஜ மனஸ்தாபம், அபிமான பீடை, அரசாங்க விரோதம், மனக்கவலை, திருடர்பயம், நாசம் முதலியவைகளை உண்டு பண்ணும்.

அயிட்டம் நெ. 9: பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒரு கிரகத்திற்கு மூன்று பிந்து வந்தால் அந்தக் கிரகம் சரீர ஜாட்டியம், சங்கடம், அலைச்சல், திரிச்சல், வியாகூலம், மனக்கவலை, சஞ்சலம், வித்தை நாசம் இவைகளை உண்டு பண்ணும்.

அயிட்டம் நெ 10: பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒரு கிரகத்திற்கு நான்கு பிந்து வந்தால் அந்தக் கிரகம் சுகத்தையும், அசுகத்தையும் கலப்பாகக் கொடுக்கும்; வரும்படியையும் செலவையும் கலந்து கொடுக்கும். மொத்தத்தில் மிஸ்ர பலனை, அதாவது கலப்பு பலனைக் கொடுக்கும்.

அயிட்டம் நெ. 11: பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒரு கிரகத்திற்கு ஐந்து பிந்து வந்தால் அந்தக் கிரகம் வஸ்திர லாபம், புத்திரலாபம், சாதுக்கள் சங்கம், வித்தை லாபம், தனலாபம், விவாகசுத்தி முதலிய இவைகளைக் கொடுக்கும்.

அயிட்டம் நெ. 12: பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒரு கிரகத்திற்கு ஆறு பிந்து வந்தால் அந்தக் கிரகம் மோஹனகரமான ரூபலாவண்யம், நற்குணம், யுத்தத்தில் ஜெயம், செல்வம், கீர்த்தி, பலம், நல்ல வாகனம், வித்தியாலாபம், லக்ஷ்மீகரம் ஆகிய இவைகளைக் கொடுக்கும்.

அயிட்டம் நெ. 13: பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒரு கிரகத்திற்கு ஏழு பிந்து வந்தால் அக்கிரகம் குதிரை முதலிய வாகன லாபம், சேனை, தனலாபம், சுப சோபனம், ஐஸ்வரியம் முதலியவைகளைக் கொடுக்கும்.

அயிட்டம் நெ. 14: பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒரு கிரகத்திற்கு எட்டு பிந்து வந்தால் அந்தக் கிரகம் சப்த குணங்களுடன் கூடிய ராஜ சம்பத்தையும், கீர்த்தியையும், ராஜயோகத்தையும் உண்டாக்கும்.

அயிட்டம் நெ. 15: ஒரு கிரகம் தன் சுய வர்க்கத்திலிருந்தாலும் அல்லது ஐந்து அல்லது ஐந்து பிந்துக்கு மேற்பட்ட பிந்துக்களையுடைய ராசியிலிருந்தாலும் சுப

பலனைக் கொடுக்கும். இவ்விதமாக இல்லாவிட்டால் அது நல்ல பலனைக் கொடுக்காது. பிந்து ஒன்றுமே இல்லாத (அதாவது பிந்து பூஜ்யமாயுள்ள) ராசியில் கோசாரத்தில் ஒரு கிரகம் சஞ்சரிக்கும்போது அக்கிரகம் கெட்ட பலனையே கொடுக்கும்.

அயிட்டம் நெ. 16: அதிக பிந்துக்களையுடைய (அதாவது நான்கு பிந்துக்குக் குறைந்த பிந்துக்களை யுடைய) எல்லா கிரகங்களும் தன் உச்ச க்ஷேத்திரம், சுப வர்க்கம், கேந்திராதி முதலிய பலங்களையுடையதா யிருந்தாலுங்கூடக் கெட்ட பலனையே கொடுக்கும்.

அயிட்டம் நெ. 17: அதிக பிந்துக்களையுடைய (அதாவது நான்கு பிந்துக்களுக்கு மேற்பட்ட பிந்துக்களை யுடைய) கிரகங்கள் நீச்ச க்ஷேத்திரம், சத்துரு க்ஷேத்திரம், கெட்ட ஸ்தானம், இவைகளில் இருந்தாலுங்கூட முதலில் நல்ல பலனையே கொடுத்துப் பிறகு கெட்ட பலனையே கொடுக்கும்.

அயிட்டம் நெ. 18: சூரியாதி ஏழு கிரகங்களின் பின்னுஷ்டக வர்க்கத்தில் பூஜ்ய பிந்துவுள்ள (அதாவது பிந்தே இல்லாத) ராசியில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது அந்தந்த கிரகங்களின் காரகாதிபத்தியத் திற்குரிய பிதுர் முதலிய பந்துக்களுக்குத் தீர்க்க ரோகம், சத்துருக்கள் விரோதம், ஆபத்து, வியாகூலம் முதலிய கஷ்டங்களை உண்டுபண்ணும்.

அத்தியாயம் 4

கிரகங்களின் பலாபலன்கள்

(1) சூரியன் பலன்

(1) சூரியன் லக்கினத்தில் சத்துரு அல்லது நீச்ச ராசி அம்சத்தில் இருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் இரண்டு மூன்று பிந்துக்களுடனிருந்தால் ஜாதகன் ரோகி யாகவிருப்பார்.

(2) சூரியன் லக்கினத்தில் தன் உச்சராசி அல்லது சுவ க்ஷேத்திரத்தில் இருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத் தில் ஐந்து அல்லது ஐந்துக்கு மேற்பட்ட பிந்துக்களுட னிருந்தால் ஜாதகர் அரசனுவர் (அல்லது அரசனுக்குச்

சமானமாய் இருப்பர்); சிராயுசு என்ற பூர்ணயுசுடைய வராவர்.

(3) சூரியன் கேந்திர, திரிகோணங்களிலிருந்து தன் பின்னஷ்டக வர்க்கத்தில் 5, 6, 7 அல்லது எட்டு பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் அல்லது அவருடைய தகப்பனர் ஜாதகருக்கு 22, 30, 35 அல்லது 36-வது வயதில் இறந்து விடுவார்.

(4) சூரியன் கேந்திரத்திலிருந்து, சந்திரன், புதன், சனி இவர்களுடன் கூடி, தன்னுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் இரண்டு (சோத்திய) பிந்துக்களுடனிருந்தால் ஜாதகனுடைய தகப்பனர், ஜாதகருக்குப் பத்து வயதுக்கு மேல் அதிக ராஜ்யாதிகாரம் முதலிய அதிகாரங்களைப் பெறுவார். சோத்திய பிந்து என்பது (1) திரிகோண சோதனை, (2) ஏகாதிபத்திய சோதனை என்ற இவ்விரண்டு சோதனைகளையும் செய்த பிறகு நிற்கும் பிந்து ஆகும். திரிகோண சோதனை, ஏகாதிபத்திய சோதனை இவைகளைச் செய்யும் மார்க்கம் 2-வது அத்தியாயத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது.

(5) சூரியனுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் பிந்து இல்லாமல் (பூஜ்யமாக) இருக்கின்றதோ அந்த ராசியையும் மாதத்தையும் சகல சுபகாரியங்களுக்கும் ஜாதகர் விலக்கவேண்டும். இந்த மாதங்களில் ஜாதகர் நோய், கஷ்டம், சண்டை சச்சரவு இவைகளால் பீடிக்கப் படுவார்.

(6) சூரியனுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் லக்கினத்திற்குப் பத்தாம் பாவம் இருக்கும்படியான ராசியிலுள்ள பிந்துவையும், சூரியனுக்கு ஒன்பதாவது பாவம் இருக்கும்படியான ராசியிலுள்ள பிந்துவையுங் கூட்டி வரும் எண்ணிற்கு அஸ்வனி முதல் எண்ண வருகின்ற நட்சத்திரத்திலும் அதற்குத் திரிகோண நட்சத்திரத்திலும் சனி கோசாரத்தில் வரும்போது ஜாதகருடைய பிதாவுக்கு மரணம் நேரிடும் அல்லது கிலேச முண்டாகும் அல்லது பிதுருக்குச் சமானமான பந்துவுக்கு மரணமுண்டாகும்.

(7) சூரியனுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் சூரியன் இருக்கின்ற ராசியிலுள்ள சோத்திய பரலைச் சூரியனுடைய அஷ்டக வர்க்கத்தில் சூரியனுக்கு எட்டாமிடத்திலுள்ள சோத்தியப் பரலால் பெருக்கி வருகின்ற தொகையை

12-ஆல் வகுத்து வருகின்ற எண்ணின் மாதத்தில் ஜாதக ருடைய பிதுருக்கு மரணமுண்டாம்.

(8) சூரியனுடைய சோத்தியப் பிண்டத்தை (அதாவது சூரிய அஷ்டக வர்க்கத்தில் ஏகாதிபத்திய சோதனை கட்டத்தில் 12-ராசிகளிலும் வந்த பிந்துக்களின் மொத்தத்தை) சூரியனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சூரியனிருக்கும் பாவத்திற்கு ஒன்பதாவது பாவத்திலுள்ள சமுதாய பிந்தால் (அதாவது திரிகோண சோதனை செய்வ தற்கு முன்னே சூரியனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சூரியனுக்கு 9-வது பாவத்திலுள்ள பிந்தால்) பெருக்க வரும் தொகையை இருபத்தேழால் வகுக்கவும். இப்படி வகுக்க வந்த மிச்சத்தை அஸ்வனி முதலாக எண்ண வரும் நட்சத்திரத்திற்கு மந்தவைநாசிக நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்தில் அல்லது இதற்குத் திரிகோண நட்சத்திரத்தில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது அப்போது நடக்கும் தெசையும் கெட்ட தானுல் ஜாதகருடைய தகப்பன் அல்லது சிற்றப்பன் இறப்பார்; அல்லது கஷ்டத்தை அனுபவிப்பார். அப்போது நடக்குந் தெசை நல்ல தெசையானுல் இவர்களுக்குப் பெரும்பாலும் கெண்டம் நேரிடும். அல்லது இவர்களுடைய செல்வம், சம்பத்து முதலியவைகள் குறைவுபடும். இருபத் தேழால் வகுக்கும்போது மிச்சம் வராவிட்டால், மிச்சம் 27 என்று வைத்துக்கொள்ளவும்.

(9) சூரியனுடைய சோத்திய பிண்டத்தை, சூரியனு டைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சூரியனிருக்கும் பாவத் திற்கு எட்டாவது பாவத்திலுள்ள சமுதாய பிந்துவால் பெருக்கி வரும் தொகையைப் பன்னிரண்டால் (12-ஆல்) வகுக்கவும். இப்படி வகுக்க வரும் மிச்சத்தின் (மேஷம் முதலாக எண்ணவரும்) ராசியின் அல்லது இந்த ராசியின் திரிகோண ராசியின் மாதத்தில் ஜாதகர் தான் இறக்கும் வருஷத்தில் இறப்பார்.

(10) சூரியனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் (1) மேஷம், சிம்மம், தனுசு இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைக் கூட்டவும். இவ்விதமாகவே (2) ரிஷப, கன்னியா, மகரம்; (3) மிதுன, துலா, கும்பம்; (4) கடக, விருச்சிக, மீனம் இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைத் தனித்தனியாய்க் கூட்டவும். இப்படியாகக் கூட்ட வரும் நான்கு தொகைகளில் எந்தத் தொகை மிகவும் அதிகமாக விருக்கின்றதோ அந்தத் தொகை எந்த ராசிகளின்

பிந்தைக் கூட்ட வந்ததோ அந்த ராசிகளின் திக்கில் ஜாதகருடைய பூஜை அறை தன்னுடைய வீட்டில் இருப்பது நன்று.

(11) சூரியனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் பிந்து குறைந்திருக்கிற ராசியில் சூரியன் கோசார காலத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது தீமை உண்டாகும். பிந்து குறைந்த ராசி சூரியனுக்குப் பகை, நீச்சமானுல் அதிக நஷ்டமுண்டாகும். பிந்து அதிகப்பட்ட ராசியில் சூரியன் சஞ்சாரம் செய்யும்போது ஜாதகருக்கு லாபமுண்டாகும்.

(12) சூரியன் நான்கு கிரகங்களுடன் கூடித் தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் ஐந்து, ஆறு சமுதாயப் பிந்துவுடன் இருந்தால் ஜாதகருக்கு அதிக லாபமுண்டாகும்.

(13) சூரியனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சூரியன் இருக்கும் பாவத்திற்கு ஒன்பதாவது பாவத்தி லுள்ள சமுதாய பிந்துவின் எண்ணிக்கைப்படி ஜாதகரு டைய பிதாவிற்குச் சகோதர, சகோதரிகள் உண்டு. இவர் களில் ஆண் கிரகர் கொடுத்த பிந்து கணக்குப் பிரகாரம் ஆணும், பெண் கிரகம் கொடுத்த எண்படி பெண்ணும் என்று அறியவும். அலிக்கிரகம் கொடுத்ததானுல் அலிக் கிரகம் கொடுத்த எண்ணைச் சகோதர, சகோதரி கணக்கில் சேர்த்துக்கொள்ளாமல் விட்டுவிடவும்.

(14) சூரியனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் ஜன்ம லக்கினத்திலும், சந்திர லக்கினத்திலும் பிந்து குறைந் திருந்தாலும் சூரியன் நீச்சனுகவிருந்தாலும் பிதாவுக்கு அரிஷ்டமுண்டாகும்.

(15) சர்வாஷ்டக வர்க்கத்தில் லக்கினத்திற்கு ஐந்தாவது, ஒன்பதாவது பாவத்தில் சூரியன் முப்பதுக்குக் குறைந்த பிந்துவுடன் இருந்தால் பிதாவுக்கு அரிஷ்டம் உண்டாகும்.

(16) சூரியனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சூரியன் லக்கினத்திற்கு இரண்டாவது, ஐந்தாவது பாவத்தில் மூன்று பிந்துவுடன் இருந்து ஒன்பதில் ராகு இருந்தால் பிதாவுக்கு ஜாதகருடைய ஐந்தாவது வயதில் நிரியாணம் நேரிடும்.

(17) சூரியனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் லக்கினத்திற்கு ஐந்தாவது பாவத்தில் சூரியன் குறைந்த பிந்துவுடனிருந்தால் ஜாதகருடைய பிதாவுக்கு அரிஷ்டம் நேரிடும்.

அத்தியாயம் 5

(2) சந்திரன் பலன்

(1) சந்திரனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் பிந்து இல்லாமல் (பூஜ்பமாக) இருக்கின்றதோ அந்த ராசியையும் அந்த ராசி மாதத்தையும், அந்த ராசியில் சந்திரன் சஞ்சரிக்கும்போதும் சகல சுப காரியங்களுக்கும் ஜாதகர் விலக்கவேண்டும்.

(2) சந்திரன் லக்கினத்திலிருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் 1, 2, 3 பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் நோய், பலவீனம் முதலியவைகளால் கஷ்டப்படுவார்.

(3) சந்திரன் லக்கினத்திலிருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் 2 அல்லது 3 பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் தனக்கு 37-வது வயதில் மரணமாவார்.

(4) சந்திரன் கேந்திர திரிகோணங்களில் அல்லது 11-வது பாவத்தில் நீச்ச, சத்துரு க்ஷேத்திரத்திலிருந்து, தேய்பிறையாக விருந்து, சந்திரன் இருக்கின்ற ராசியில் சந்திரனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் 2 அல்லது 3 பிந்து இருந்தால் அந்த பாவம் நாசமடையும்.

(5) சந்திரன் பலவானுகிக் கேந்திர கோணங்களில் அல்லது பதினோராவது பாவத்திலிருந்து தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் தான் இருக்கும் பாவ ராசியில் நான்கு அல்லது நான்கிற்கு மேற்பட்ட பிந்துகளிருந்தால் அந்த பாவம் விருத்தியடையும்.

(6) சந்திரன் கேந்திரத்திலிருந்து தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எட்டு பரலுடன் இருந்தால் ஜாதகர் வித்தை, கீர்த்தி தனம், பலம் முதலிய பிரபலங்களுடன் கூடி ஜனங்களுக்கு அதிகாரியாகவும் அரசனுகவும் இருப்பான்.

(7) சந்திரனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் (1) மேஷ, சிம்ம, தனுசு இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைக் கூட்டவும். இவ்விதமாகவே (2) ரிஷப, கன்னியா

மகரம், (3) மிதுன, துலா, கும்பம், (4) கடக, விருச்சிக, மீனம் இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைத் தனித் தனியாய்க் கூட்டவும். இப்படியாகக் கூட்ட வரும் நான்கு தொகைகளில் எந்தத் தொகை மிகவும் அதிகமாக விருக்கின்றதோ அந்தத் தொகை எந்த ராசிகளின் பிந்துக்களைக் கூட்ட வந்ததோ அந்த ராசிகளின் திக்கில் ஜாதகருடைய ஸ்நானஞ் செய்யும் அறை தன்னுடைய வீட்டில் இருப்பது நன்று.

(8) சந்திரனுடைய சோத்திய பிண்டத்தைச் சந்திர னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சந்திரனிருக்கும் பாவத்திற்கு நான்காவது பாவத்திலுள்ள சமுதாய பிந்துவால் பெருக்கி வருந்தொகையை இருபத்தேழால் வகுக்கவும். இப்படி வகுக்க வந்த மிச்சத்தை அஸ்வனி முதலாக எண்ணவரும் நட்சத்திரத்திற்கு மந்தவைநாசிக நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்தில் அல்லது இதற்குத் திரிகோண நட்சத்திரத்தில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது அப்போது நடக்கும் தெசை கெட்டதானுல் ஜாதகருடைய தாய்க்கு அல்லது தாய்க்குச் சமான பந்துவுக்கு மரணம் அல்லது துன்பம் நேரிடும். அப்போது நடக்குந் தெசை நல்லதானுல் கண்டம் நேரிடும். இப் பலன் நடக்காவிட்டால் இவர்களுடைய செல்வம், சம்பத்து முதலியவைகள் குறைவுபடும்.

(9) சந்திரனுடைய சோத்திய பிண்டத்தைச் சந்திர னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சந்திரனிருக்கும் பாவத்திற்கு எட்டாவது பாவத்திலுள்ள சமுதாய பிந்து வால் பெருக்கிவரும் தொகையை இருபத்தேழால் (27-ஆல்) வகுக்கவும். இப்படி வகுக்க வரும் மிச்சத்தை அஸ்வனி முதலாக எண்ண வருகின்ற நட்சத்திரத்தில் அல்லது இந்த நட்சத்திரத்தின் திரிகோண நட்சத் திரத்தில் சந்திரன் செல்லும்போது ஜாதகருக்குச் சண்டை, சச்சரவு, கோபம், துன்பம் முதலியவைகள் உண்டாகும்.

(10) சந்திரனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சந்திரன் இருக்கும் பாவத்திற்கு நான்காவது பாவத்தில் எத்தனை சமுதாய பிந்துக்களிருக்கின்றனவோ அத்தனை பேர் ஜாதகருடைய தாயாருடன் கூடப் பிறந்தவர்கள். இவர்களில் ஆண் கிரகம் கொடுத்தது ஆண் என்றும் பெண் கிரகம் கொடுத்தது பெண் என்றுஞ் சொல்லவும்.

(11) சந்திரனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் லக்கினத்திற்கு நான்காவது பாவத்தில் எத்தனை சமுதயா பிந்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை பேர் ஜாதகருடைய தாயாருடன் கூடப் பிறந்தவர்கள் என்றுஞ் சொல்லுவதுண்டு. இவர்களில் ஆண் கிரகம் கொடுத்தது ஆண் என்றும் பெண் கிரகம் கொடுத்தது பெண் என்றுஞ் சொல்லவும்.

(12) சந்திரனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் லக்கின பாவத்திலும், சந்திரன் இருக்கின்ற பாவத்திலும் சமுதாய பிந்துக்கள் அதிகமாகவிருந்து இப் பாவங்களில் சுபரிருந்தாலும், பார்த்தாலும் இப் பாவாதிபதிகள் வலுவாயிருந்தாலும் ஜாதகருடைய தாயாருக்குத் தீர்க்காயுளுண்டு.

(13) சந்திரனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சந்திரனிருக்கின்ற ராசியின் சோத்தியப் பிந்துவையும், லக்கின பாவம் முதல் நான்காவது பாவம் வரையிலுள்ள பாவங்களிலுள்ள சோத்திய பிந்துக்களைக் கூட்ட வருகின்ற தொகையையும் பெருக்கி வருகின்ற தொகையை 27–ல் வகுக்க வருகின்ற மிச்சத்தை வளர்பிறைக்கு அசுவனி முதலாகவும், தேய்பிறைக்கு அவிட்டம் முதலாக எண்ண வருகின்ற நட்சத்திரத்தில் சனி கோசாரத்தில் சஞ்சாரம் செய்யுங்காலத்தில் ஜாதகருடைய தாயாருக்கு கண்டம் நேரிடும்.

அத்தியாயம் 6

(3) அங்காரகன் பலன்

(1) செவ்வாய் உச்ச, ஸ்வக்ஷேத்திரங்களில் 1, 4, 9, 10–வது பாவங்களிலிருந்து தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எட்டு பிந்துக்களுடன் இருந்தால் ஜாதகர் அனேககோடி தனமுள்ள பிரபுவாவார்.

(2) மேஷம், சிம்மம், விருச்சிகம், தனுசு, மகரம் இவைகள் லக்கினமாகி இவைகளில் செவ்வாய் இருந்து, செவ்வாய் தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் 4 பிந்துவுடனிருந்தால் ஜாதகர் அரசனுவார்.

(3) செவ்வாய் தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் எட்டு பிந்துவுடன் இருந்தால் ஜாதகர் சிற்றரசராவார்.

(4) செவ்வாய் லக்கினத்தில் அல்லது 10-வது பாவத்திலிருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் எட்டு பரலுடன் இருந்தால் ஜாதகர் அரசராவார்.

(5) செவ்வாய் லக்கினத்தில் அல்லது 10-வது பாவத்திலிருந்து தன் பின்னுஷ்டக வர்கத்தில் எட்டு பிந்துவுடனிருந்து ஜாதகர் ராஜ வம்சத்தில் பிறந்தவரானுல் தன்னுடைய தேசத்திற்கெல்லாம் அரசனுவார்.

(6) செவ்வாய் லக்கினத்தில் அல்லது 10-வது பாவத்தில் தன் உச்ச, ஸ்வக்ஷேத்திரத்தில் இருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் எட்டு பிந்துவுடனிருந்து ஜாதகர் ராஜ வம்சத்திற் பிறந்தவரானுல் ஜாதகர் அரசருக்குச் சக்கரவர்த்தியாவார்.

(7) செவ்வாயினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் (1) மேஷம், கும்பம், தனுசு இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைக் கூட்டவும். இவ்விதமாகவே (2) ரிஷப, கன்னியா, மகரம்; (3) மிதுன, துலா, கும்பம்; (4) கடக, விருச்சிக, மீனம் இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைத் தனித்தனியாகக் கூட்டவும். இப்படியாகக் கூட்டவரும் நான்கு தொகைகளில் எந்தத் தொகை மிகவும் அதிகமாக விருக்கின்றதோ அந்தத் தொகை எந்த ராசிகளின் பிந்தைக் கூட்ட வந்ததோ அந்த ராசிகளின் திக்கில் ஜாதகருடைய சமையல் அறை தன்னுடைய வீட்டில் இருத்தல் நன்று.

(8) அங்காரகனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் பிந்து இல்லாமல் (பூஜ்யமாக) விருக்கின்றதோ அந்த ராசியில் சனி, கோசாரக் காலத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது அங்காரன் வலுவாயிருந்தால், ஜாதகர் நோயால் கஷ்டப்படுவார்; அங்காரகன் வலுவாயில்லாமல் பலவீனமாக விருந்து, லக்கினுதிபதியாக இராவிட்டால் ஜாதகர் மரணமடைவார்.

(9) அங்காரகனுடைய சோத்திய பிண்டத்தை அங்காரகனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் அங்காரகனிருக்கும் பாவத்திற்கு மூன்ருவது (அல்லது பதினோராவது) பாவத்திலுள்ள சமுதாய பிந்துவால் பெருக்கி வந்த தொகையை இருபத்தேழால் வகுக்கவும். இப்படி வகுக்க வந்த மிச்சத்தை அஸ்வனி முதலாக எண்ண வரும்

நட்சத்திரத்திற்கு மந்த வைநாசிக நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்தில் அல்லது இதற்குத் திரிகோண நட்சத்திரத்தில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய இளைய சகோதர சகோதரிகளுக்கு (அல்லது மூத்த சகோதர சகோதரிகளுக்கு) முறையே மரணமுண்டாகும், அல்லது கஷ்டமுண்டாகும், அல்லது இவர்களுடைய செல்வம், சம்பத்து இவைகள் குறைவுபடும்.

(10) (எ) அங்காரகனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் லக்கின பாவமுதல் அங்காரகன் இருக்கின்ற பாவம் வரையிலுமுள்ள எல்லா பாவங்களிலுமுள்ள (சமுதாய) பிந்துக்களைக் கூட்டவும்; இப்படிக் கூட்டவரும் தொகையின் எண்ணுள்ள வயதில் ஜாதகர் நோய், துன்பம் இவைகளால் கஷ்டப்படுவார். மேற்சொன்னபடி பாவங்களிலிருக்கும் பிந்துக்களைக் கூட்டும்போது லக்கின பாவத்திலும், அங்காரகன் இருக்கும் பாவத்திலுமுள்ள பிந்துக்களையும் சேர்த்துக் கூட்டவும்.

(பி) அங்காரகனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் அங்காரகன் இருக்கின்ற பாவம் முதல் லக்கின பாவம் வரையிலுமுள்ள எல்லா பாவங்களிலுமுள்ள (சமுதாய) பிந்துக்களைக் கூட்டவும். இப்படிக் கூட்ட வரும் தொகை எண்ணுள்ள வயதில் ஜாதகர் நோய், துன்பம் இவைகளால் கஷ்டப்படுவார். மேற்சொன்னபடி பாவங்களில் இருக்கும் பிந்துக்களைக் கூட்டும்போது அங்காரகன் இருக்கும் பாவத்திலும் லக்கினம் இருக்கும் பாவத்திலுமிருக்கும் பிந்துக்களையுஞ் சேர்த்துக் கூட்டவும்.

(சி) மேலே அயிட்டம் நெ. (10) (எ)-விலும் அயிட்டம் (10) (பி)-யிலும் சொல்லிய இரண்டு மொத்தத் தொகைகளையுங் கூட்ட வருகின்ற மொத்தத் தொகை வயதில் ஜாதகருக்குக் கண்டம் நேரிடும்.

(11) அங்காரகனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் அங்காரகனுக்கு மூன்றாவது பாவத்தில் எத்தனை (சமுதாய) பிந்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை பிந்துவிலிருந்து அங்காரகனுக்குச் சத்துரு கிரகம் அல்லது அஸ்தமனத்திலிருக்குங் கிரகம் கொடுத்த பிந்துவைக் கழித்துவிட நிகர பிந்துக்களின் தொகைப்படி ஜாதகருக்குப் பின் சகோதரம், சகோதரிகள் இருப்பார்கள். இதில் ஆண் கிரகம் கொடுத்த பிந்துக்கள் சங்கியைப்படி சகோ

தரர்களும், பெண் கிரகங்கள் கொடுத்த பிந்துக்களின் சங்கியைப்படி சகோதரிகளும் இருப்பார்கள்.

(12) அங்காரகனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் அங்காரகன் இருக்கும் பாவத்திற்கு மூன்றுவது பாவாதிபதி நின்ற ராசியில் இருக்கும் (சமுதாய) பிந்துக்களின் எண்ணை எடுத்துக்கொண்டு மேலே அயிட்டம் நெ. 11-ல் சொல்லியப் பிரகாரம் சகோதரம் சகோதரி இவர்களை அறியவும்.

(13) அங்காரகனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் அங்காரகனிருக்கும் ராசியின் சோத்தியப் பிந்தை லக்கினத்திற்கு மூன்றுவது பாவத்திலுள்ள சமுதாய பிந்தால் பெருக்க வருகின்ற தொகையை 27 ஆல் வகுக்க வருகின்ற மிச்சத்தை வளர் பிறையில் அஸ்வனி முதலாகவும், தேய் பிறையில் அவிட்டம் முதலாகவும் எண்ண வருகின்ற நட்சத்திரத்தில் சனி கோசாரத்தில் சஞ்சாரம் செய்யும்போது ஜாதகருடைய சகோதரன் அல்லது சகோதரிக்குக் கண்டம் நேரிடும். குரு அந்த நட்சத்திரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய சகோதரன் அல்லது சகோதரிக்கு சௌக்கியமுண்டாகும்.

அத்தியாயம் 7

(4) புதன் பலன்

(1) புதன் கேந்திர திரிகோணங்களிலிருந்து தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எட்டு பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் தன்னுடைய குலவித்தையில் அதிக தேர்ச்சியுடையவர்; போகசாலி.

(2) புதன் தன்னுடைய உச்சத்திலிருந்து தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் ஒன்று, இரண்டு, மூன்று பிந்துக்களுடன் இருந்தால் புதனிருக்கின்ற பாவம் விருத்தியுடையுமே தவிரக் குறைவுபடாது.

(3) சர்வ வித்தையையும் கற்க ஆரம்பிக்கும் வித்தியாரம்பமானது புதனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் மிகவும் அதிகமான பிந்து இருக்கின்றதோ அந்த ராசியின் மாதத்தில் பூர்த்தி அடையும்.

(4) புதனுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் பிந்து இல்லாமல் பூஜ்யமாக விருக்கின்றதோ அந்த ராசியில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய பிள்ளை, அல்லது பந்து அல்லது ஞாதி என்ற பங்காளி அல்லது சினேகிதர் சம்பத்து இவைகள் நாசமாகும்.

(5) புதனுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் (1) மேஷ, சிம்ம தனுசு இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைக் கூட்டவும். இவ்விதமாகவே (2) ரிஷப, கன்யா, மகரம்; (3) மிதுன, துலா, கும்பம்; (4) கடக, விருச்சிக, மீனம் இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைத் தனித்தனியாகக் கூட்டவும் இப்படிக் கூட்ட வரும் நான்கு தொகைகளில் எந்தத் தொகை மிகவும் அதிகமாக விருக்கின்றதோ அந்தத் தொகை எந்த ராசிகளின் பிந்துக்களைக் கூட்ட வந்ததோ அந்த ராசிகளின் திக்கில் ஜாதகருடைய விளையாடுமிடம் வீட்டில் இருப்பது நன்று.

(6) புதனுடைய சோத்திய பிண்டத்தைப் புதனுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் புதனிருக்கும் பாவத்திற்கு நான்காவது பாவத்திலுள்ள சமுதாய பிந்துவால் பெருக்கி வருந்தொகையை இருபத்தேழால் வகுக்கவும். இப்படி வகுக்க வந்த மிச்சத்தை அஸ்வனி முதலாக எண்ண வரும் நட்சத்திரத்திற்கு மந்த வைநாசிக நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்தில் அல்லது இதற்குத் திரிகோண நட்சத்திரத்தில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய பந்துக்கு மரணம் அல்லது கண்டம் அல்லது கஷ்டம் நேரும்; அல்லது ஜாதகருடைய பந்துவின் செல்வம், சம்பத்து முதலியவைகள் குறைவுபடும்.

(7) புதன் கேந்திர கோணங்களிலிருந்து தன்னுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் தான் இருக்கும் ராசியில் ஐந்து (சமுதாய) பிந்துவுக்கு மேற்பட்ட பிந்துவுடனிருந்து குருவின் பார்வையை அடைந்தால் ஜாதகருக்கு நல்ல வித்தையுண்டு.

(8) இரண்டாம் பாவாதிபதி, பகை, க்ஷேத்திரம், நீச்ச ஸ்தானம் இவைகளில்லாமல் தன்னுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் ஐந்து (சமுதாய) பிந்துவுடனிருந்தால் ஜாதகருக்குச் சிற்ப வித்தையும் கணித வித்தையும் உண்டு.

(9) புதனிருக்கும் ராசியாதிபதி சுபனுகிக் கேந்திர கோணத்திலிருந்து புதனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் ஐந்து பிந்துக்கு மேற்பட்ட (சமுதாய) பிந்துவுடன் இருந்தால் ஜாதகன் வித்துவானுவார்.

அத்தியாயம் 8

(5) குரு பலன்

(1) குருவினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் மிகவும் அதிகமான பிந்து இருக்கின்றதோ அந்த ராசி லக்கினத்தில் நிஷேகம் செய்தால் அதாவது கெற்பா தானஞ் செய்தால் அது பலிதமாகி சாந்தி உண்டாகும்.

(2) குருவினிடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் மிகவும் அதிகமான பிந்து இருக்கின்றதோ, அந்த ராசியின் திக்கில் வீட்டில் கோ முதலிய கால் நடைகளில் தனம், வாகனம் இவைகளை வைத்துக் காப்பாற்றினுல் இவைகள் விருத்தியடையும்.

(3) ஜெனன காலத்தில் சூரியன் இருக்கின்ற ராசி யில் குருவினுடைய பின்னுஷ்டக வர்க்கத்திலிருக்கும் பிந்துவானது இந்த அஷ்டக வர்க்கத்திலுள்ள பிந்துக்களை விட மிகவும் சிறிய பிந்துவாக விருந்தால் ஜாதகர் தன் னுடைய சுபத்திற்காகச் செய்கின்ற எல்லாக் காரியங் களிலும் நாசத்தை அடைவார்.

(4) குரு, ஆறு, எட்டு, பன்னிரண்டாம் பாவங்களி லிருந்து, தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் சிராயுசு என்ற பூர்ணுயுசு, அதிக செல்வம், சத்துரு ஜெயம் இவைகளை உடையவர்.

(5) குரு தன் உச்சத்தில் அல்லது சுவ க்ஷேத்திரத் தில் அல்லது ஒன்பதாவது பாவத்தில் அல்லது நீச்ச, சத்துரு க்ஷேத்திரமல்லாத மற்ற ராசியில் இருந்து அஸ்த மன மில்லாமலிருந்து குரு தன்னுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில்

1. எட்டு பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் தன்னுடைய சுய கீர்த்தியாலும், கார்யத்தாலும் அரசராவார். இந்தக் கிரக யோகத்தில் பிறந்தவர் பிராம்மண குலத்திலுதித்தவரானுல், இவர் நரபால துல்யர், பிரசித்தமான புத்தியும், குணங்களுமுடைய சிரேஷ்டராவார்.

2. ஏழு பிந்துக்களுடனிருந்து சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகர் வெகு ஸ்திரீகள், அதிக தனம், அதிக புத்திரர்கள் ஆகிய இவைகளை உடையவர்.

3. ஆறு பிந்துக்களுடனிருந்து சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகரனேக வாகனங்களும் வெகு செல்வமும் உடையவர்.

4 ஐந்து பிந்துக்களுடனிருந்து சந்திரனுடன் கூடியிருந்தால் ஜாதகர் ஜெயசீலராவார்; அதாவது ஜெயத்தையும், குணங்களையுடையவராவர்.

(6) குருவினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் (1) மேஷ, சிம்ம, தனுசு இவைகளிலுள்ள சமுதாயப் பிந்துக்களைக் கூட்டவும். இவ்விதமாக (2) ரிஷப, கன்யா, மகரம், (3) மிதுன, துலா கும்பம், (4) கடக, விருச்சிக, மீனம் இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைத் தனித் தனியே கூட்டவும். இப்படிக் கூட்ட வரும் நான்கு தொகைகளில் எந்தத் தொகை மிகவும் அதிகமாகவிருக்கின்றதோ அந்தத் தொகை எந்த ராசிகளின் பிந்துக்களைக் கூட்ட வந்ததோ அந்த ராசிகளின் திக்கில் ஜாதகருடைய பொக்கிஷ அறை அல்லது உக்கிரான அறையைத் தன்னுடைய வீட்டில் அமைப்பது நல்லது.

(7) குருவினுடைய சோத்திய பிண்டத்தைக் குருவினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் குரு இருக்கும் பாவத்திற்கு ஐந்தாவது பாவத்திலுள்ள சமுதாய பிந்துவால் பெருக்கி வருந் தொகையை இருபத்தேழால் வகுக்கவும். இப்படி வகுக்க வந்த மிச்சத்தை அஸ்வனி முதலாக எண்ண வரும் நட்சத்திரத்திற்கு மந்தவைநாசிக நட்சத்திரமென்று பெயர். இந்த நட்சத்திரத்தில் அல்லது திரிகோண நட்சத்திரத்தில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருடைய புத்திரன் அல்லது புத்திரனுக்குச் சமானமானவருக்கு மரணம் அல்லது கண்டம் நேரிடும், அல்லது ஜாதகருடைய செல்வம், சம்பத்து முதலியவைகள் குறைவுபடும்.

(8) குரு பலவானுகவிருந்து குருவினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் குருவிருக்கும் பாவத்திற்கு ஐந்தாவது பாவத்தில் எத்தனை சமுதாய பிந்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை சந்ததிகள் ஜாதகருக்கும் ஏற்படும். இந்தப் பிந்துக்களைக் கொடுத்த கிரகங்களில் எந்தக் கிரகம் தன்னுடைய நீச்ச, சத்துரு ராசியிலிருக்கின்றதோ அந்தக் கிரகம் கொடுத்த சந்ததியானது அற்பாயுசுடையதாகும். ஆண் கிரகம் கொடுத்தது ஆண் சந்ததி என்றும் பெண் கிரகம் கொடுத்தது பெண் சந்ததி என்றும் அறியவும்.

(9) குருவினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் லக்கினத்திற்கு ஐந்தாவது பாவத்தில் எத்தனை சமுதாய பிந்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை சந்ததிகள் ஜாதகருக்கு ஏற்படும் என்றும் சொல்லலாம். முன் போலவே ஆண் கிரகம் கொடுத்தது ஆண் சந்ததி என்றும், பெண் கிரகம் கொடுத்தது பெண் சந்ததி என்றும் அறியவும். இதற்கும் குரு பலவானுய் இருக்க வேண்டும். லக்கினத்திற்கு ஐந்தாவது பாவத்தில் மூன்று (சமுதாய) பிந்து இருந்தால் ஜாதகருக்கு அற்ப புத்திர யோகமுண்டு.

(10) குருவினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் ஐந்தாவது பாவத்திலுள்ள சமுதாய பிந்துவை ஐந்தாவது பாவத்திலுள்ள சோத்திய பிந்துவால் பெருக்கி வரும் தொகையை 27 ஆல் வகுக்க வரும் மிச்சத்திற்கு வளர்பிறைக்கு அஸ்வனி முதலாகவும், தேய்பிறைக்கு அவிட்டம் முதலாகவும் எண்ணவரும் நட்சத்திரத்தில் குரு கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு சந்ததி உண்டாகும்.

அத்தியாயம் 9

(6) சுக்கிரன் பலன்

(1) சுக்கிரன் கேந்திர திரிகோணங்களிலிருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் எட்டு பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் சேனாதிபதியாகவும், அதிக வாகனாதிபதியாகவுமிருப்பான்.

(2) சுக்கிரன் கேந்திர திரிகோணங்களிலிருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் ஏழு பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் தன் ஆயுள் முடிவு பரியந்தம் விநாசமடையாத போகவான், செல்வவான், நவரத்தினங்களையுடையவராவார்.

(3) சுக்கிரன் நீச்சத்திலிருந்தாலும், அல்லது ஏழாவது, எட்டாவது, பன்னிரண்டாவது பாவத்திலிருந்து தன் பின்னுஷ்டக வர்க்கத்தில் எட்டு அல்லது ஏழு பிந்துக்களுடனிருந்தாலுங் கூட 1-வது, 2-வது அயிட்டங்களில் சொல்லிய இராஜயோகங்கள் எல்லாம் நாசம் அடையும். அதாவது மேற்சொல்லிய ராஜயோகங்கள் உண்டாகாது.

(4) சுக்கிரனுடைய பின்னுஷ்டக வாக்கத்தில் எந்த ராசியில் மிகவும் குறைந்த பிந்துக்கள் இருக்கின்றதோ அந்த ராசிக்குரிய திக்கில் வீட்டில் ஸ்திரீகளை வசியஞ் செய்யும்படியான சயனசம்போகப் பள்ளியறை இருந்தால் ஜாதகர் தன் ஸ்திரீகளை வசியத்தில் வைத்துக்கொண்டிருக்கலாம்.

(5) சுக்கிரனுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் (1) மேஷ, சிம்ம, தனுசு இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைக் கூட்டவும். இவ்விதமாகவே (2) ரிஷப, கன்யா, மகரம், (3) மிதுன, துலா, கும்பம், (4) கடக, விருச்சிக, மீனம் இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைத் தனித்தனியாய்க் கூட்டவும். இப்படியாகக் கூட்ட வரும் நான்கு தொகைகளில் எந்தத்தொகை மிகவும் அதிகமாக விருக்கின்றதோ அந்தத் தொகை எந்த ராசிகளின் திக்கில் ஜாதகருடைய படுக்கை அறை தன்னுடைய பிந்தைக் கூட்ட வந்ததோ, அந்த ராசிகளின் வீட்டில் இருப்பது நன்று.

(6) சுக்கிரனுடைய அஷ்டக வர்க்கத்தில் ஏகாதிபத்திய சோதனை செய்த பிறகு எந்தராசியில் மிகவும் அதிகமான (சோத்திய) பிந்து இருக்கின்றதோ அந்த ராசியில் சுக்கிரன் கோசாரத்தில் சஞ்சாரஞ் செய்யும் போது ஜாதகருக்கு ஸ்திரீ, பூமி, தனம் ஆகிய இச்செல்வங்கள் கிடைக்கும்.

(7) சுக்கிரனுடைய சோத்திய பிண்டத்தைச் சுக்கிரனுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் சுக்கிரனிருக்கும் பாவத்திற்கு ஏழாவது பாவத்திலுள்ள சமுதாய பிந்துவால் பெருக்கி வருந் தொகையை இருபத்தேழால் வகுக்கவும். இப்படி வகுக்க வந்த மிச்சத்தை அஸ்வனி முதலாக எண்ண வரும் நட்சத்திரத்திற்கு மந்தவைநாசிக நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்தில் அல்லது இதற்குத் திரிகோண நட்சத்திரத்தில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ்செய்யும்போது ஜாதகருடைய மனைவி அல்லது மனைவிக்குச் சமானமான பந்துக்கு மரணம் அல்லது கண்டம், அல்லது கஷ்டம், முதலியவைகள் நேரும், அல்லது இவர்களுடைய செல்வம், சம்பத்து முதலியவை குறைவுபடும்.

(8) சுக்கிரனுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் சுக்கிரன் இருக்கும் பாவத்திற்கு ஏழாவது பாவத்தில் எத்தனை சமுதாய பிந்துக்கள் இருக்கின்றனவோ அத்தனை ஸ்திரீகளிடம் ஜாதகருக்கு யோனி சம்பந்தம் ஏற்படும். இந்தப் பிந்துக்களில் சூரியன் கொடுத்த பிந்துக்குத் தகப்பன் வழியிலும், சந்திரன் கொடுத்த பிந்திற்குத் தாய் வர்க்கத்திலும், செவ்வாய், சனி இவர்கள் கொடுத்த பிந்துவுக்கு அன்னிய வர்க்கத்திலும் உள்ள ஸ்திரீ என்று அறியவும்.

அத்தியாயம் 10

(7) சனி பலன்

(1) சனியினுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் பிந்து இல்லாமல் பூஜ்யமாக விருக்கின்றதோ அந்த ராசியில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகர் மரணமடைவார், அல்லது தன் தனமாகிலும் க்ஷயமடையும், அதாவது செல்வம் குறைவுபடும்.

(2) சனி கேந்திரத்திலிருந்து தன்னுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பிந்துக்களுடனிருந்து, அந்தக் கேந்திர ராசியானது தன் உச்ச ராசியானாலும்கூட ஜாதகருக்கு அல்பாயுசாகும்.

(3) சனி பலவானகி லக்கின பாவத்தில் இருந்து தன்னுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் ஆறு அல்லது ஐந்து பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் தன்னுடைய ஜனன காலமுதல் துக்கத்தையே அனுபவிப்பார். மேலும் தன நாசத்தை அடைவர்.

(4) சனி நீச்சத்திலாகிலும் அல்லது சத்துரு ராசியிலாகிலுமிருந்து தன்னுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் ஐந்து அல்லது ஐந்திற்கு அதிகமான பிந்துக்களுடனிருந்து, சந்திரன் சுபவர்க்கத்திலிருந்தால் ஜாதகருக்குச் சிராயுசு என்ற பூர்ணயுளுண்டு.

(5) சனி லக்கின பாவத்தில் அல்லது பஞ்சம பாவத்தில் மூடம், நீச்சம், சத்துரு க்ஷேத்திரம் இவைகளை அடைந்து தன்னுடைய பின்னஷ்டக வர்க்கத்தில்

1. ஐந்து அல்லது நான்கு பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் தாசிகள் (அதாவது பெண் வேலைக்காரர்கள்) ஓட்டை செல்வம் இவைகளை உடையவர்.

2. எட்டு பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் மந்திர தந்திர எந்திரங்களடங்கியுள்ள புரங்களுக்கும், நகரங்களுக்கும் அதிகாரியாக விருப்பார்.

3. ஏழு பிந்துக்களுடனிருந்தால் ஜாதகர் அதிக தனமுடையவராவர்.

(6) சனியினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் (1) மேஷ, சிம்ம, தனுசு இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைக் கூட்டவும். இவ்விதமாகவே (2) ரிஷப, கன்னியா, மகரம், (3) மிதுன, துலா, கும்பம், (4) கடக, விருச்சிக, மீனம் இவைகளிலுள்ள சமுதாய பிந்துக்களைத் தனித் தனியாய்க் கூட்டவும். இப்படியாகக் கூட்ட வரும் நான்கு தொகைகளில் எந்தக் தொகை மிகவும் அதிகமாக விருக்கின்றதோ அந்தத் தொகை எந்த ராசிகளின் பிந்தைக் கூட்ட வந்ததோ அந்த ராசிகளின் திக்கில் ஜாதகர் தன்னுடைய வீட்டுமனையில் குப்பை, கூலம் முதலிய வஸ்துக்களைச் சேர்த்து வைப்பது நன்று.

(7) சனியினுடைய சோத்திய பிண்டத்தைச் சனியினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சனி இருக்கும் பாவத்திற்கு எட்டாவது பாவத்திலுள்ள சமுதாய பிந்துவால் பெருக்கிவருந்தொகையை இருபத்தேழால் வகுக்கவும். இப்படி வகுக்க வந்த மிச்சத்தை அஸ்வனி முதலாக எண்ண வரும் நட்சத்திரத்திற்கு மந்த வைநாசிக நட்சத்திரம் என்று பெயர். இந்த நட்சத்திரத்தில் கோசாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு, ஜாதகருக்குச் சாமனமான பந்துக்கு மரணம், கெண்டம் முதலியவைகள் நேரிடும், அல்லது இவர்களுடைய செல்வமும், சம்பத்தும் குறைவுபடும்.

(8) சனியினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் எந்த ராசிகளில் மிகவும் குறைவான (சமுதாய) பிந்து இருக்கின்றதோ அந்த இராசிகளில் சூரியனும். சந்திரனும் ஜாதகர் இறக்கும் வருஷத்தில் கோச்சாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகர் மரணமாவார்.

(9) 1. சனியினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் லக்கின பாவம் முதல் சனி இருக்கின்ற பாவம் வரையிலுமுள்ள எல்லா பாவங்களிலும் உள்ள (சமுதாய) பிந்துக்களைக் கூட்டவும். இப்படிக் கூட்ட வரும் தொகையின் எண்ணுள்ள வயதில் ஜாதகர் நோய், துன்பம், இவைகளால் கஷ்டப்படுவார். மேற்சொன்னபடி பாவங்களிலிருக்கும் பிந்துக்களைக் கூட்டும்போது லக்கின பாவத்திலும் சனியிருக்கும் பாவத்திலுமுள்ள பிந்துக்களையும் சேர்த்துக் கூட்டவும்.

2. சனியினுடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் சனி இருக்கின்ற பாவம் முதல் லக்கின பாவம் வரையிலுமுள்ள

எல்லா பாவங்களிலுமுள்ள (சமுதாய) பிந்துக்களைக் கூட்டவும்; இப்படிக் கூட்டவரும் தொகையின் எண்ணுள்ள வயதில் ஜாதகர் நோய், துன்பம் இவைகளால் கஷ்டப் படுவார். மேற்சொன்னபடி பாவங்களில் இருக்கும் பிந்துக்களைக் கூட்டும்போது சனி இருக்கும் பாவத்திலும், லக்கினம் இருக்கும் பாவத்திலுமிருக்கும் பிந்துக்களையுஞ் சேர்த்துக் கூட்டவும்.

3. மேலே அயிட்டம் (9)-1-லும், அயிட்டம் (9)-2-லும் சொல்லிய இரண்டு மொத்தத் தொகைகளையும் கூட்ட வருகின்ற மொத்தத் தொகை வயதில் ஜாதகருக்குக் கண்டம் நேரும்.

(10) சனியினுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் சனி இருக்கும் பாவத்தின் சோத்திய பிந்தை லக்கினத்திற்கு எட்டாவது பாவத்திலுள்ள சமுதாய பிந்தால் பெருக்க வரும் தொகை வயதில் ஜாதகருக்குக் கண்டம் உண்டு. இந்தத் தொகையை 27-ல் கழித்து வரும் மிச்சத்தை வளர் பிறையில் பிறந்த ஜாதகருக்கு அசுவனி முதலாகவும், தேய்பிறையில் பிறந்தவருக்கு அவிட்டம் முதலாகவும் எண்ண வருகின்ற நட்சத்திரத்தில் சனி கோசார காலத்தில் வரும்போது ஜாதகருக்குத் தேகபீடை உண்டாகும்.

(11) சனியினுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் லக்கினத்தின் சமுதாய பிந்தைச் சனி இருக்கும் ராசியின் சோத்திய பிந்தால் பெருக்கி வரும் தொகையை 27 ஆல் வகுத்து வரும் மிச்சத்திற்கு முன்போல அசுவனி அல்லது அவிட்டம் முதலாக எண்ண வரும் நட்சத்திரத்தில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குத் தேகபீடை உண்டாகும்.

(12) சனியினுடைய பின்னஷ்டக வர்க்கத்தில் லக்கினம் முதல் சனியிருக்கும் ராசி வரையிலுமுள்ள சோத்திய பிந்துக்களின் தொகையைக் குளிகனிருக்கும் ராசி முதல் லக்கினம் வரையிலுமுள்ள சோத்திய பிந்துக்களின் தொகையால் பெருக்கி 27 ஆல் வகுத்து வரும் மிச்சத்திற்கு முன்போல அசுவனி அல்லது அவிட்டம் முதலாக எண்ணவரும் நட்சத்திரத்தில் கோச்சாரத்தில் சனி சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்குக் கண்டம் அல்லது மரணம் நேரிடும்.

அத்தியாயம் 11

சர்வாஷ்டக வர்க்கம் என்னும் சமுதாய அஷ்டக வர்க்கப் பலன்

(1) சர்வாஷ்டக வர்க்கத்தில் இருபத்தைந்துக்குக் குறைவுபட்ட பிந்துக்களையுடைய ராசியிலுள்ள பாவம் அல்லது இதில் கோசாரத்தில் சஞ்சரிக்குங் கிரகம் அதம பலனைக் கொடுக்கும் இருபத்தைந்து முதல் முப்பது வரையி லுமுள்ள பிந்துக்களையுடைய ராசியிலுள்ள பாவம் அல்லது கோசாரத்தில் சஞ்சரிக்குங் கிரகம் மத்திம பலனைக் கொடுக்கும் முப்பதுக்கு மேற்பட்ட பிந்துக்களையுடைய ராசியிலுள்ள பாவம் அல்லது இதில் கோசாரத்தில் சஞ்சரிக்கும் கிரகம் சுகம், செல்வம், கீர்த்தி முதலியவை களைக் கொடுப்பதுமன்றி, இந்த பாவமும் விருத்தியு மடையும்.

(2) ஒரு கிரகமானது தன் உச்சம், சுவக்ஷேத்திரம், மித்துரு க்ஷேத்திரம், திரிகோணம், கேந்திரம், உபஜெய ராசி முதலியவைகளிலிருந்தாலும் அல்லது சுபவர்க்கங் களிலிருப்பதால் பலமடைந்தாலும் கூட சர்வாஷ்டக வர்க்கத்தில் குறைந்த பிந்துவை அடைந்திருந்தால் நாசபலனையே அதாவது கெட்ட பலனையே கொடுக்கும்.

(3) 1. ஒரு கிரகம் ஆறுவது, ஏழாவது, எட்டாவது, பன்னிரண்டாவது பாவத்திலிருந்தால் அது பொதுவாய்க் கெட்ட பலனைக் கொடுக்கும்.

2. ஒரு கிரகம் தன்னுடைய நீச்சவர்க்க ராசியி லாவது அல்லது தன்னுடைய சத்துரு வர்க்கத்திலாவது அல்லது பாபக் கிரக வர்க்கத்திலாவது இருந்தால் பொதுவாய்க் கெட்ட பலனைக் கொடுக்கும்.

3. ஒரு கிரகம் கெட்ட பலனைக் கொடுக்கக்கூடிய மாந்தி இருக்கின்ற ராசியின் அதிபதியுடன் சம்மந்தப்பட் டிருந்தால் பொதுவாய்க் கெட்ட பலனைக் கொடுக்கும்.

இந்த மூன்றுவித கிரகங்களும் சர்வாஷ்டக வர்க்கத் தில் அதிகமான பிந்துக்களுடனிருந்தால் ஜாதகருக்குத் தன் வாழ்நாளில் நடக்கக்கூடிய முக்கியமான சுபபலனைக் கொடுக்கும்.

முக்கிய குறிப்பு :— இனிமேல் சொல்லப் போவதில் ஒரு பாவத்தில் உள்ள பிந்து என்றால் அந்த பாவம் இருக்கும்படியான ராசியில் இருக்கின்ற பிந்து என்று

அர்த்தம் செய்துகொள்ளவும். ஒரு பாவம், இரண்டு மூன்று ராசிகளில் பரவி இருந்தால் அந்தப் பாவத்தின் மத்தி என்ற பாவ மத்தியம் இருக்கும் ராசியிலுள்ள பிந்துவை எடுத்துக்கொள்ளவும்.

(5) சர்வாஷ்டக வர்க்கத்தில் பதினோராவது (11-வது) பாவத்திலிருக்கும் பிந்துவானது பத்தாவது (10-வது) பாவத்திலுள்ள பாவத்திலிருக்கும் பிந்துவைவிட அதிகமாகவிருந்து பன்னிரண்டாவது (12-வது) பாவத்திலுள்ள பிந்து பதினோராவது பாவத்திலுள்ள பிந்துவைவிடக் குறைவாகவிருந்து லக்கின பாவத்திலுள்ள பிந்து பன்னிரண்டாவது (12-வது) பாவத்திலுள்ள பிந்துவைவிட அதிகமாகவிருந்தால் ஜாதகர் சுகவான், செல்வமுடையவர்; கீர்த்தியும் பலமுமுடையவராவார்.

(6) கண்டத்திரயம் என்ற மூன்று கண்டங்கள்:—

1. மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம் இந்த நான்கும் முதற் கண்டம் ஆகும். இந்த நான்கு ராசிகளிலும் சர்வாஷ்டக வர்க்கத்திலுள்ள (சமுதாய) பிந்துக்களின் மொத்தத்தை முதற்கண்ட பிந்து என்று சொல்லுவோம். இந்த முதற் கண்டம், ஜாதகருடைய ஆயுள் காலத்தை மூன்று சமபாகங்களாகப் பங்கிட வருகின்ற முதலாவது பாகத்தைக் குறிக்கும். இந்த முதலாவது பாகத்தைக் குறிக்கும் காலத்தை முதற் காலம் என்று சொல்லுவோம்.

2. கடகம், சிம்மம், கன்னி, துலாம் இந்த நான்கும் நடுக் கண்டம் ஆகும். இந்த நான்கு ராசிகளிலும் சர்வாஷ்டக வர்க்கத்திலுள்ள (சமுதாய) பிந்துக்களின் மொத்தத்தை நடுக்கண்ட பிந்து என்று சொல்லுவோம். இந்த நடுக்கண்டம், ஜாதகருடைய ஆயுள் காலத்தை மூன்று சமபாகங்களாகப் பங்கிட வருகின்ற நடுப்பாகத்தைக் குறிக்கும். இந்த நடுப்பாகத்தைக் குறிக்கும் காலத்தை நடுக்காலம் என்று சொல்லுவோம்.

3. விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் இந்த நான்கும் கடைக் கண்டம் ஆகும். இந்த நான்கு ராசிகளிலும் சர்வாஷ்டக வர்க்கத்திலுள்ள (சமுதாய) பிந்துக்களின் மொத்தத்தைக் கடைக் கண்ட பிந்து என்று சொல்லுவோம். இந்தக் கடைக்கண்டம் ஜாதக

ருடைய ஆயுள்காலத்தை மூன்று சமபாகங்களாகப் பங்கிட வருகின்ற கடைப் பாகத்தைக் குறிக்கும். இந்தக் கடைப் பாகத்தைக் குறிக்குங் காலத்தைக் கடைக் காலம் என்று சொல்லுவோம்.

சிலருடைய அபிப்பிராயம் என்னவென்றால் மீனத்திலிருந்து 12 ராசிகளையும் மூன்று கண்டங்களாகப் பங்கிடுவதற்குப் பதிலாக ஜாதகத்திலுள்ள பன்னிரண்டாவது பாவத்திலிருந்து 12 பாவங்களையும் மூன்று கண்டங்களாகப் பங்கிடவேணும் என்பது; இது அனுஷ்டானத்தியில்லை என்று அறியவும்.

இன்னும் சிலருடைய அபிப்பிராயம் என்னவென்றால் எட்டாவது பாவம், பன்னிரண்டாவது பாவம் ஆகிய இவைகளிலுள்ள பிந்துக்களை இந்தப் பாவங்கள் அடங்கியிருக்கும் கண்டங்களில் சேர்க்காமல் விட்டுவிட வேணும் என்பது. இது அனுஷ்டானத்திலில்லை என்று அறியவும்.

(7) இந்த மேற்சொல்லிய மூன்று கண்ட பிந்துக்களும் (அதாவது முதற்கண்ட பிந்து, நடுக்கண்ட பிந்து, கடைக் கண்ட பிந்து) சமமாகவிருந்தால் ஜாதகருடைய வாழ்நாளில் சுகதுக்கங்கள் சமமாகப் பரவி இருக்கும். ஏற்றக்குறைச்சலாக விருந்தால் சுக துக்கங்கள் ஏற்றக் குறைச்சலாகவிருக்கும். அதாவது குறைந்த தொகையை யுடைய கண்டத்தின் காலத்தில் குறைந்த சுகபோகமும் (அதாவது கஷ்டமும்) அதிக தொகையையுடைய கண்டத்தின் காலத்தில் அதிக சுகபோகமும், நடுத்தரமான தொகையையுடைய காலத்தில் நடுத்தரமான சுகபோகங்களையும் ஜாதகர் அனுபவிப்பார்.

(8) ஒரு கண்டத்தின் ராசிகளில் சுபக் கிரகங்களிருந்தால் அந்தக் கண்டத்திற்குரிய காலத்தில் ஜாதகர் சுகங்களை அனுபவிப்பார்.

(9) ஒரு கண்டத்தின் ராசிகளில் பாபக் கிரகங்களிருந்தால் அந்தக் கண்டத்திற்குரிய காலத்தில் ஜாதகர் கஷ்டங்களை அனுபவிப்பார்.

(10) ஒரு கண்டத்தின் ராசிகளில் சுபக்கிரகங்களும், பாபக் கிரகங்களுமிருந்தால் அந்தக் கண்டத்திற்குரிய காலத்தில் ஜாதகர் சுகத்தையும் அசுகத்தையும் கலந்து அனுபவிப்பார், அதாவது மிஸ்ர பலன் என்ற சமபலனை அனுபவிப்பார்.

(11) ஒரு கண்டத்தின் மொத்தபிந்து குறைவாக விருந்தால் ஜாதகர் அந்தக் கண்ட காலத்தில் நோயாலும் மனஸ்தாபங்களாலும் கவலைப்படுவார்.

(12) ஒரு கண்டத்தின் மொத்த பிந்து அதிகமாக விருந்தால் அந்தக் கண்ட காலத்தில் ஜாதகர் அதிக சம்பத்தை அடைவார்.

(13) ராஜயோக சம்பத்தை அடையக்கூடிய யோக முள்ள ஜாதகத்தில் லக்கின ராசியில் சர்வாஷ்டக வர்க் கத்தில் எத்தனை சமுதாய பிந்துக்கள் இருக்கின்றனவோ அத்தனையாவது வயது காலத்தில் ஜாதகர் நல்ல வாகனம், செல்வம், புத்திரர், ஞானம் முதலிய ராஜயோக சம்பத் துக்களை அடைய ஆரம்பிப்பார்.

(14) சனியினுடைய ராசி லக்கினமாகி அதில் பன்னிரண்டாவது பாவாதிபதி இருந்து, லக்கின அஷ்டம பாவாதிபதிகள் பலவீனமாகவிருந்தால் சர்வாஷ்டக வர்க்கத்தில் லக்கின பாவத்தில் எத்தனை (சமுதாய) பிந்துக்கள் இருக்கின்றனவோ அத்தனையாவது வயது வரையில் ஜாதகர் ஜீவித்திருப்பார்.

(15) நான்காவது பாவாதிபதி லக்கின பாவத்தி லிருந்து லக்கின பாவாதிபதி நான்காவது பாவத்தி லிருந்து இந்த இரண்டு பாவாதிபதிகளுமிருக்கும் ராசிகளில் சர்வாஷ்டக வர்க்கத்தில் 33 (சமுதாய) பிந்துக்கள் இருந்தால் ஜாதகர் ஜனநாயகராகவும் இராஜகீர்த்தி முதலியவை யுடையவராவர்.

(16) ஓராவது, நான்காவது, பதினோராவது பாவங் கள் ஒவ்வொன்றிலும் சர்வாஷ்டக வர்க்கத்தில் முப்ப துக்கு மேற்பட்ட (சமுதாய) பிந்துக்களிருந்தால் ஜாதகர் நாற்பது வயதிற்குமேல் ராஜ சம்பத்து, அதிகாரம், கீர்த்தி முதலியவைகளை அடைவார்.

(17) சர்வாஷ்டக வர்க்கத்தில் லக்கினத்திற்கு நான்காவது, ஒன்பதாவது பாவங்கள் ஒவ்வொன்றிலும் (சமுதாய) பிந்துக்கள் 25 முதல் 30 வரையிலுமிருந்தால் ஜாதகர் தனக்கு இருபத்தெட்டாவது வயதிலாகிலும் அதற்கு மேற்பட்டாகிலும் அதிக செல்வத்தை அடைவார்.

(18) லக்கினம் மேஷமாகி அதில் சூரியனிருந்து நான்காவது பாவத்தில் குரு தன் உச்சத்திலிருந்து சர்வாஷ்டக வர்க்கத்தில் குரு நாற்பது (சமுதாய)

பிந்துவுடன் கூடியிருந்தால் ஜாதகர் அரசனுவார், லக்ஷ சங்கியா அஸ்வநாதனுவார் அதாவது லக்ஷம் குதிரை களுக்கு நாயகனுவர்.

(19) லக்கினம் தனுசாகி அதில் குருவிருந்து சர்வாஷ்டக வர்க்கத்தில் குரு நாற்பது (சமுதாய) பிந்து வுடன் கூடி இருந்து சுக்கிரன் மீனத்திலும், செவ்வாய் தன் உச்சத்திலும், சனி கும்பத்திலுமிருந்தால் ஜாதகர் சர்வ சம்பத்துக்களையுமுடைய சக்கிரவர்த்தியாவர்.

(20)

கிழக்கு	தெற்கு	மேற்கு	வடக்கு
மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்
சிம்மம்	கன்னி	துலாம்	விருச்சிகம்
தனுசு	மகரம்	கும்பம்	மீனம்

சர்வாஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் அதிகமான (சமுதாய) பிந்து இருக்கின்றதோ அந்த ராசியின் திக்கிலுள்ள தேசத்தில் ஜாதகருக்குத் தனம் விருத்தி யாகும் அல்லது ஜாதகர் தனத்தைச் சேர்ப்பார்.

(21) சர்வாஷ்டக வர்க்கத்தில் லக்கின பாவம் முதல் சனி இருக்கின்ற பாவம் வரையிலுமுள்ள பாவங் களிலுள்ள (சமுதாய) பிந்துக்களைக் கூட்டி வந்த தொகையை 7ஆல் (ஏழால்) பெருக்கி வந்த தொகையை 27ஆல் (இருபத்தேழால்) வகுக்க வரும் மிச்ச எண்ணை அறியவும். இந்த மிச்ச எண் வரையிலும் அசுவனியிலிருந்து எண்ண வருகின்றன நட்சத்திரத்தில் அல்லது அதற்குத் திரிகோண நட்சத்திரத்தில் சூரியன் அல்லது மற்ற பாபக்கிரகங்கள் கோசாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு ரோகம், பீடை, கஷ்டம் முதலியவைகள் அதிகமாக நேரும். ஒரு நட்சத்திரத்தின் திரிகோண நட்சத்திரம் என்பது அந்த நட்சத்திரத்திற்கு (அந்த நட்சத்திரத்தைச் சேர்த்து எண்ண) பத்தாவது அல்லது பத்தொன்பதாவது நட்சத்திரமாகும்.

(22) லக்கின பாவம் முதல் சனி இருக்கின்ற பாவம் வரையிலுமுள்ள பாவங்களில் எந்த பாவங்களில் சுபக் கிரகங்கள் இருக்கின்றனவோ, அந்தப் பாவங்களில் சர்வாஷ்டக வர்க்கத்தில் உள்ள (சமுதாய) பிந்துக்களை எல்லாம் கூட்டி வந்த தொகையை 21வது அயிட்டத்தில் சொல்லியபடி 7ஆல் (ஏழால்) பெருக்கி 27ஆல் (இருபத் தேழால்) வகுக்க வரும் மிச்ச எண்ணிற்கு முன்போல அசுவனி முதல் எண்ண வருகின்ற நட்சத்திரத்தில்

அல்லது அந்த நட்சத்திரத்திற்குத் திரிகோண நட்சத்திரத்தில் சுபக்கிரகம் கோசார காலத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு நல்ல பலன்கள் நடக்கும்.

இம்மாதிரியாகவே அங்காரன் இருக்கின்ற பாவம் முதல் லக்கின பாவம் வரையிலுமுள்ள பாவங்களை எடுத்துக் கொண்டு இம்மாதிரியாகப் பார்க்க வருகின்ற மூன்று (திரிகோண) நட்சத்திரங்களில், சுபகிரகம் கோசார காலத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதருக்கு நல்ல பலன்கள் நடக்கும்.

இம்மாதிரியாகவே லக்கின பாவம் முதல் அங்காரகன் இருக்கின்ற பாவம் வரையிலுமுள்ள பாவங்களை எடுத்துக்கொண்டு இம்மாதிரியாகப் பார்க்க வருகின்ற மூன்று (திரிகோண) நட்சத்திரங்களில் சுபகிரகம் கோசரா காலத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு நல்ல பலன்கள் நடக்கும்.

(23) சர்வாஷ்டக வர்க்கத்தில் எந்த ராசியில் மிகவும் அதிகமான (சமுதாய) பிந்து இருக்கின்றதோ அந்த ராசி உதயமாகும்போது (அதாவது லக்கினமாக விருக்கும்போது) சகல நல்ல காரியங்களை ஜாதகர் செய்ய ஆரம்பிப்பது நல்லது அல்லது இந்த ராசிக்குரிய நட்சத்திரங்களில் ஏதாவது ஒரு நட்சத்திரத்தில் பிறந்தவருடன் ஜாதகர் தன் விவாகம் முதலிய சம்மந்தங்களை ஏற்படுத்திக்கொள்வது நல்லது.

(24) லக்கினத்திலிருந்து எட்டாவது பாவாதிபதி யாரோ அவருடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் (அதாவது அவர் இருக்கும் ராசியில்) உள்ள (சமுதாய) பிந்தைச் சர்வாஷ்டக வர்க்கத்தில் லக்கினத்திற்கு எட்டாவது பாவத்திலுள்ள (சமுதாய) பிந்தால் பெருக்க வருந் தொகையைப் பன்னிரண்டால் வகுக்கவும். இப்படி வகுக்க வருகின்ற மிச்ச எண்ணிற்குரிய ராசி மாதத்தில் ஜாதகர் (தான் இறக்கும் வருஷத்தில்) இறப்பார். மிச்சம் பூஜ்யமாக வந்தால் அதை 12-ஆகப் பாவித்து 12-வது ராசியாகிய மீன ராசிக்குரிய மீனமாசமாகிய பங்குனி மாதத்தில் ஜாதகர் இறப்பார் என்று அறியவும்.

(25) லக்கினத்திற்கு ஒன்பதாவது பாவாதிபதி யாரோ அவருடைய பின்னுஷ்டக வர்க்கத்தில் உள்ள (சமுதாய) பிந்தைச் சர்வாஷ்டக வர்க்கத்தில் லக்கினத்திற்கு ஒன்பதாவது பாவத்திலுள்ள (சமுதாய) பிந்தால்

பெருக்க வருந் தொகையைப் பன்னிரண்டால் வகுக்க வருகின்ற மிச்ச எண்ணிற்குரிய மாதத்தில் ஜாதகருடைய பிதுர் (அவர் இறக்கும் வருஷத்தில்) இறப்பார்.

(26) லக்கினத்திற்கு நான்காவது பாவாதிபதி யாரோ அவருடைய பின்னுஷ்டக வர்க்கத்திலுள்ள (சமுதாய) பிந்தைச் சர்வாஷ்டகவர்க்கத்தில் லக்கினத்திற்கு நான்காவது பாவத்திலுள்ள (சமுதாய) பிந்தால் பெருக்க வருந் தொகையைப் பன்னிரண்டால் வகுக்க வருகின்ற மிச்ச எண்ணிற்குரிய மாதத்தில் ஜாதகருடைய மாதுர் (மாதுர் இறக்கும் வருஷத்தில்) இறப்பார்.

(27) ஆறுவது, எட்டாவது, பன்னிரண்டாவது (6, 8. 12)-வது பாவங்கள் தவிர மற்ற பாவங்களில் சர்வாஷ்டக வர்க்கத்தில் (சமுதாய) பிந்துக்கள் அதிகமாக விருந்தால் இந்தப் பாவங்கள் (அதாவது பாவங்களுக்குரிய ஆதிபத்திய அம்சங்கள்) விருத்தியடையும்.

(28) சர்வாஷ்டக வர்க்கத்தில் லக்கினம், அங்காரகன், சனி இவர்கள் இருக்கும் ராசிகளில் உள்ள (மூன்று) சமுதாய பிந்துக்களை எல்லாம் கூட்டவருந் தொகை வயதில் ஜாதகர் நோயாலும் துன்பங்களாலும் வருந்துவார்.

(29) சர்வாஷ்டக வர்க்கத்தில் அங்காரகன், சனி, ராகு இவர்கள் இருக்கும் ராசிகளில் உள்ள (மூன்று) சமுதாய பிந்துக்களை எல்லாம் கூட்ட வருந்தொகை வயதில் ஜாதகர், பாஷாணம் ஆயுதங்கள், காயங்கள் இவைகளால் கஷ்டப்படுவார்.

(30) சுபகிரகங்கள் இருக்கின்ற பாவங்களில் சர்வாஷ்டக வர்க்கத்தில் உள்ள (சமுதாய) பிந்துக்களை எல்லாம் கூட்ட வருகின்ற தொகை வயதில் ஜாதகருக்குச் சந்ததி, செல்வம் முதலிய சம்பத்துக்கள் உண்டாகும்.

(31) சர்வாஷ்டக வர்க்கத்தில் எந்தராசியில் மிகவும் அதிகமான சமுதாய பிந்து இருக்கிறதோ அந்த ராசிக்குரிய திக்கில் ஜாதகர் மாட்டுத்தொழுவம், கழனிகள், விவசாயப் பணிகள் இவைகளை வைத்திருப்பதும் செய்வதும் நல்லது; ராசிகளின் திக்குகள் விஷயமாக 20-வது அயிட்டம் பார்க்கவும்.

(முற்றிற்று)

C. G RAJAN, B. A. (Maths.) என்னும்
C. கோவிந்தராஜன் அவர்களால் எழுதப்பட்டதும்,
பார்வையிடப்பட்டதுமான
இப்போது கைவசம் விற்பனையாகிக் கொண்டிருக்கும்
புத்தக விலைப்பட்டியல்

குறிப்பு:— முன்பணம் அனுப்பவும்.

நெ 1. ஜாதக கணிதம் முதல் பாகம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்— நான்காம் பதிப்பு (அச்சில்)

நெ 2. ஜாதக கணிதம் இரண்டாம் பாகம் என்னும் ஜாதக பலாபலன்கள் நிர்ணயம் விலை ரூ. 6-75 பை.

நெ. 3. ஜாதக ராஜ மனோரஞ்சிதம்—மலர் 1. இதில் மேஷம் முதல் மீனம் வரையிலுள்ள ஒவ்வொரு லக்கினத்திற்கும் 165 முதல் 214 வரையிலும் கிரக அமைப்பு விதிகளும் (Cofigurations Yogas—கிரகவரிசை என்ற யோகங்கள்), இவற்றின் விவரமான பலாபலன்களும் சுக்கிர நாடி. துருவ நாடி முதலிய பல நாடிக கிரந்தங்களிலிருந்து திரட்டி (அனுபவங்களை ஒட்டிய விதிகள் (Prevedents) கொடுக்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 6–75 பை.

நெ. 4. ஜாதக ராஜ மனோரஞ்சிதம்—மலர் 2 இது ஷை மலர் 1ஐப் போன்றது. இதில் புதிய விதிகள் இருக்கின்றன; மலர் 1க்கும் மலர் 2க்கும் சம்பந்தம் கிடையாது. மலர் 1 இல்லாமலே மலர் 2ஐ வாசித்து உபயோகப்படுததலாம். (அச்சில்)

நெ. 5. ஜாதக சிரோன்மணி என்னும் வராஹ மிஹிருடைய பிருஹத் ஜாதகம் (இதற்கு வராஹவோரை என்ற பெயருமுண்டு) மூன்றும் பதிப்பு. விலை ரூ. 4-00

நெ. 6. தசாபுக்தி சிந்தாமணி விலை ரூ. 3-88

நெ. 7. ஜாதக தசாரிஷ்ட நிவாரணி விலை ரூ. 1-12 பை,

நெ 8. லக்கினஸ்புட பாவஸ்புட கணிதம். இதைக்கொண்டு துவாதச பாவஸ்புடமும் கணிக்கலாம்; பாவசக்கரமும் போடலாம்.

இங்கிலீஷில் விலை ரூ. 2-75 பை.

தமிழில் விலை ரூ. 3-37 பை.

நெ. 9. (1) ஜாதக ராஜ பாவ இருவாக்ஷி; ஆயுள் பாவம், விலை ரூ. 1-88

(2) களத்திரபாவம்; இதில் செவ்வாய் தோஷம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1-88

(3) புத்திரபாவம் விலை ரூ. 2-12

(4) ஜீவனபாவம்; இதில் யோக விஷயங்களும் அடங்கி இருக்கின்றன. (அச்சில்)

நெ. 10. ஜாதக ஜம்பு நாதீயம்—இதில் துவாதச பாவ பலா பலன்கள் ஜோதிடத்தில் வல்லவராயிருந்த ஜம்பு நாதீயர் என்பவரால் சொல்லப்பட்டிருக்கின்றது. விலை. ரூ. 1-37

நெ. 11. ஜாதக "சர்வார்த்த சிந்தாமணி"; இது ஜோதிட வல்லுநரான ஸ்ரீவெங்கடேச தெய்வக்ஞரால் எழுதப்பட்டது (அச்சில்)

நெ. 12. 1883 ஆம் ஷை முதல் 1945 ஆம் ஷை வரையிலும் 1946 ஆம் ஷை முதல் 1953 ஆம் ஷை வரையிலும் உள்ள சென்ற 71 வருஷங்களுக்கு கிராந்தி அடங்கி உள்ள புத்தகம்; இது ஜாதக கணிதம் 1-ம் பாகத்தில் கண்டுள்ள அயன பலம் கணிக்க மிகவும் உபயோகமானது. விலை ரூ. 2-25

நெ. 13. சர்வ முகூர்த்த நிர்ணயவிதிகள் என்னும் கால விதானம். விலை ரூ. 1-88

நெ 14. ஸ்திரீ ஜாதகம் விருத்த யவனவர் சொன்ன ஸ்திரீ ஜாதகம் என்னும் பெண்கள் ஜனன ஜாதகமும் உடன் சேர்ந்திருக்கின்றது. விலை ரூ 1-75

நெ. 15. சுகப்பிரம ரிஷிவாக்கியம் என்னும் ஜாதக சுகர் வாக்கியம்—முதல் பாகம் விலை ரூ. 1-75

ஷை இரண்டாம் பாகம் விலை ரூ. 2-25

நெ. 16. ஜோதிட சுயபோதினி என்ற முதல் வாசகம்; பாலபோதனி. விலை ரூ. 3-25

நெ. 17. கோசார தீபிகை என்னும் ஜோதிட கோசார பலாபலன்கள் நிர்ணயம்: இதில் யூரேநெஸ்-நெப்த்யூன் என்ற க்ரகங்களின் பலாபலன் கூடக் கொடுக்கபபட்டிருக்கின்றன. விலை ரூ 1-88

நெ. 18. ஜாதக அஷ்டவர்க்கமும் அதன் பலாபலன்கள் நிர்ணயமும். விலை ரூ. 2-50

நெ. 19. சத்யாச்சாரீயம் என்னும் சத்யாச்சாரியார் அருளிச் செய்த சோதிடபலாபல கிரந்தமாகிய சத்யரிஷி துவாதச பலாபலன் —தமிழில். விலை ரூ. 2-37

ஷை இங்கிலீஷில் விலை ரூ. 6-75

நெ. 20 ஜாதக சந்திரஹோரை என்னும் ஜாதக சந்திர கலாநாடி துவாதச பலாபலன் விலை ரூ. 3-00

நெ. 21. ஜாதக கர்க ஹோரை-இதில் துவாதச பலாபலன்களும் இரண்டு முதல் ஏழு கிரகங்கள் வரையிலும் கூட்டம் கூட்டமாகப் பன்னிரண்டு பாவங்களிலும் கிரகங்கள் கூடி இருப்பதாலுண்டாகும் பலாபலன்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-37

நெ. 22. ஜாதக பிருஹத் பராசர ஹோரை முதல் பாகம் என்னும் ஜாதக பராசர ஹோரை. இதில் ஜயமுனி மகரிஷி மதப்

பிரகாரம்கூடப் பலாபலன்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கிரகத்தின் புக்தியில் ஏற்படும் அந்திரபலனும், சூட்சும பலனும் பிராண பலனும்கூடக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. விலை ரூ. 3-37

நெ. 23. ஜாதக நாரதீயம் என்னும் நாரத மஹரிஷி அருளிச் செய்த ஹோரையும் சம்ஹிதையும்—முதல் பாகம் விலை ரூ. 1.00

நெ. 24. 6300ஸு நவக்கிரக ஸ்புடகணனம் 3200 B C முதல் 3100 A.D வரையிலுள்ள வருஷங்களுக்குக் கிரக ஸ்புடங்கள் மேல் நாட்டுக் கணிதம் பிரகாரம் [திருக்கணிதம் பிரகாரம்] கணிக்க அநேக டேபில்கள் அடங்கியுள்ள புத்தகம் (இங்கிலீஷில்) விலை ரூ. 15-00

நெ. 25. ஜ்யோதிர் கணிதம் என்னும் வாக்கிய திருக்கணித பஞ்சாங்க நவக்கிரக ஸ்புடசார கிரஹண கணனம்:

(a) 1-வது பாகம்—பஞ்சாங்கம் (அஃதாவது வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம், தியாஜ்யம், யோகினி, நேத்திரம், ஜீவன் முதலிய அம்சங்கள்) கணிதம் விலை ரூ. 4-50

(b) 2-வது பாகம் கிரகங்களின் ஸ்புடகணனமும் இன்னும் சில விஷயங்களும் அடங்கியுள்ளது விலை ரூ. 2-25

(c) 3-வது பாகம் என்ற கிரஹண கணனம் [தமிழில்]: இதில் சந்திர கிரகணம் 1957ஆம் ஸு A. D. முதல் 2020 A. D. வரையிலுமுள்ள இனிவரப்போகின்ற 64 வருஷங்களுக்குச் சந்திர கிரகணம் பரிசகாலம், மோக்ஷகாலம், நிமீலனம், உன்மீலனம், பரிமாணம் ஆகிய இவற்றுடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வருஷங்களுக்குச் சந்திரகிரகணம் பஞ்சாங்கத்திற்காகப் பஞ்சாங்க கணிதர்கள் கணிக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் எந்த வருஷத்திற்கும் சந்திர கிரகணம் கணிக்க இரண்டு வழிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சூரிய கிரகண விஷயத்தில் 1957ஆம் வருஷம் முதல் 2020-ம் ஸு வரையிலும் இனி சம்பவிக்கப்போகின்ற கிரணங்களின் தேதியும், மத்திய காலமும் பூர்ண பார்சுவ கங்கண கிரகண விவரங்களுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சூரிய கிரகணம் கணிக்கும் வழியில் உபயோகப்படுத்தவேண்டிய அம்சங்களைக் கணிக்கும் வழியில் இன்னும் சில விஷயங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

விலை ரூ. 4-50

4-வது பாகம் என்ற சூரிய கிரகண கணிதத்தில் மாத்திரம் தற்காலத்தில் உன்னத நிலையிலுள்ள நவீன (Modern) வழிகள் பிரகாரம் கணிக்கும் பல வழிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒன்ருகச் சேர்த்துத் தமிழ்ப் பாகம், ஆங்கில பாகம் என்ற இரண்டு பாகத்திலும ஒரே புத்தகமாக உள்ளது. விலை ரூ. 5-00

நெ. 26. ஜாதக மனோரஞ்சிதம்—மலர் 3 மேஷம், ரிஷபம், மிதுனம், தனித்தனியாக இருக்கின்றது விலை ரூ. 0-62.

நெ. 27 ஷை மலர் 3 கடக லக்கினம் முதல் மீன லக்கினம் வரையில் ஒவ்வொரு லக்கினமும், தனியானது. (அச்சில்)

இதர கம்பெனி புத்தகங்கள்

குறிப்பு : இதர கம்பெனி புத்தகங்களுக்கு மாத்திரம்

விலையைப் பூராகவும் முன் பணமாக மணி ஆர்டர்மூலம் அனுப்பி வைக்கவேணும். வேறு எந்த விதமாகவும் அனுப்பி வைக்கக்கூடாது. வேறு விதமாக அனுப்பினுல் பஸ் செலவு, மாற்றும் கஷ்டம் இவை ஏற்படுகின்றன.

1. சப்தரிஷி நாடி தமிழில் செய்யுள் மூலமும் உரையும் வியாக்யானமும் ஜோதிடர்களுக்கு அதிக அனுபவத்தை உண்டாக்கக் கூடிய பூர்ண ஜாதகங்கள்; பிறந்தது முதல் மரணம் வரையிலும் உள்ள விவரமான பலாபலன்கள் அடங்கியுள்ள புத்தகம் ஆகும்.

1-வது வால்யூம் மேஷ லக்கினம் 826 பக்கம் விலை ரூ. 20-00

2-வது வால்யூம் ரிஷப லக்கினம் 1484 பக்கம் விலை ரூ 30-00

3-வது வால்யூம் மிதுன லக்கினம் 1108 பக்கம் விலை ரூ. 36-00

4-வது வால்யூம் கடக லக்கினம் 1420 பக்கம் விலை ரூ 42-00

5-வது வால்யூம் சிம்ம லக்கினம் 2016 பக்கம் விலை ரூ. 27-00

(போஸ்டேஜ் தனி)

மீதி ஏழு லக்கின புத்தங்கள் கூடிய சீக்கிரம் கவர்மென்ட்டால் அச்சிடப்படும்.

5. பல ஆசிரியரின் வாக்கிய திருக்கணித சித்தாந்த பழைய பஞ்சாங்கங்கள் வாக்கியம் சித்தாந்தம் விலை 0-75 பைசா ; திருக்கணிதம் ரூ. 1-00; ரபேல்ஸ் ஜாட்க்கீல்ஸ் எபிமெரிஸ் ஆப் பிலானெட்ஸ்—பழைய வருஷங்களுக்கு விலை— ரூ. 3-00.

தேவைக்கு :

C. கனகம்மாள்

14, லாயர் சின்னத்தம்பி முதலித் தெரு,

கொண்டித்தோப்பு : : சென்னை-1.